REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 டிசம்பர் 29 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
වරු. 91 இல. 309 | Friday 29, December, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## சதொச ஊடாக விற்பனைக்கு 08 மில். முட்டை இறக்குமதி



08 மில்லியன் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை சதொச விற்பனை நிலையங்களுக்கு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச வணிக இதர சட்டபூர்வ கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

06

### பதுளை பாடசாலையொன்றின்

## ஆசிரியர் இருவர் மாணவரிடம் பாலியல் சேஷ்டையென தகவல்

**உடனடி விசாரணைக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்பு**



பதுளை கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையொன்றில் பணிபுரிந்து வரும் இரண்டு ஆசிரியர்கள் பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டு வருகின்ற சம்பவம் தொடர்பாக உடன் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பதுளை வலயகல்வி பணிமனையின் பணிப்பாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இரண்டு ஆசியர்களும் அதே பாடசாலையில் கல்வி பயின்று வருகின்ற ஐம்பது மாணவர்களோடு

06

## யாழ். மாவட்ட வீடமைப்புத் திட்டம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்

**யாழ். ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு**



வீடமைப்பு திட்டம் என்பதும் அதற்கான நிதி ஒதுக்கீடும் நாடளாவிய பிரச்சினையாக உள்ளதால் அது தொடர்பில் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை (28) யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கடற்றொழில் அமைச்சரும் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. இதன்போது நகர அபிவிருத்தி

06

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

**தலைவராக நீதிபதி டபிள்யூ. எம்.என்.பி. இத்தவல**



இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

அதன்படி, அதன் தலைவராக நீதிபதி டபிள்யூ. எம். என். பி. இத்தவல நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய உறுப்பினர்களாக சேத்திய குணசேகர மற்றும் பேர்னாட் ராஜபக்ஷ ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 41B மற்றும் 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் பிரிவு 04 இன் படி 2024 ஜனவரி 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும்

06

### 2023 ஜனவரி 01 முதல் நவம்பர் 30 வரையில்

# இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 3,48,000 கோடி ரூபாவை எட்டியது

**அமெரிக்காவிடமிருந்தே அதிக ஏற்றுமதி வருமானமாக 2,504.82 மில்லியன் அமெரிக்க டொலர் பதிவானதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவிப்பு**

2023 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை, 3,48,000 கோடி ரூபா (10,878 மில்லியன் டொலர்) ஏற்றுமதி வருமானத்தை எட்டியுள்ளது.

அமெரிக்காவிடமிருந்தே அதிக ஏற்றுமதி வருமானத்தை இலங்கை பெற்றுள்ளது. இத்தொகை 2,504.82 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என பதிவாகியுள்ளது.

இலங்கையின் வர்த்தகப் பொருட்கள், ஐரோப்பிய ஒன்றியம், தெற்காசிய நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள் சங்கம், பொதுநலவாய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை கடந்த நவம்பரில் 31,000 கோடி ரூபா (968.8 மில்லியன் அமெரிக்க டொலர்) வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி வருமானத்தை எட்டியுள்ளது மற்றும் இலங்கை சுங்கத்தினால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவுகளின்படி, இந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் நவம்பரில் இலங்கையின் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதி 2022 இல் 4.4 சத வீதம் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் நவம்பர் 2022 இல் அறிவிக்கப்பட்ட மதிப்புடன் ஒப்பிடுகையில் இது 2.67 சத வீதம் குறைந்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் தைத்த ஆடைகள், தேயிலை, இரப்பர் தொடர்பான உற்பத்திப் பொருட்கள், தேங்காய் உற்பத்திப் பொருட்கள், வைர கற்கள் மற்றும் தங்க நகைகள், இலத்திரனியல் மற்றும் இலத்திரனியல் உதிரிப்பாகங்கள், வாசனைத்

06

### விமான சேவைகள், துறைமுகம் உட்பட

## வடபகுதியின் அபிவிருத்திக்கு இந்திய அரசு ஆதரவு வழங்கும்

**புதிய இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவிப்பு**



துறைமுக அபிவிருத்தி மற்றும் விமானப் போக்குவரத்து துறையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் இந்திய அரசாங்கம் பூரண ஆதரவை வழங்குமென இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா (Santosh Jha) தெரிவித்துள்ளார்.

நேற்று காலை (28) துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவைச் இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற

06

## ச ரி க ம பாவின் வெற்றியாளர் கில்மிஷா நாடு திரும்பினார்

**பலாலி விமான நிலையத்தில் அமோக வரவேற்பு**



*யாழ். விசேட நிருபர்*

தென்னிந்தியாவின் பிரபல தமிழ்த் தொலைக்காட்சி Zee தமிழ் நடத்திய இசை நிகழ்ச்சியில் வெற்றியீட்டிய யாழ். சிறுமி கில்மிஷா நேற்று நாடு திரும்பியுள்ளார். சென்னை விமான நிலையத்திலிருந்து நேற்று (28) நண்பகல் பலாலி, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

நாடு திரும்பிய கில்மிஷாவை பெருமளவானவர்கள் விமான நிலையத்தில்

06

### முகக் கவசம் அணிவது சிறந்தது

## கொரோனா புதிய திரிபு JN 1 அச்சப்படத் தேவையில்லை

**சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



கொரோனா புதிய திரிபு மற்றும் ஒரு வகை காய்ச்சல் பரவல்தொடர்பில் தகவல்கள் வெளிவரும் நிலையில் மீண்டும் முகக் கவசத்தை அணிவது சிறந்தது என்றும் அவ்வாறு அணிவதில் தவறில்லை என்றும் சுகாதார

06

## தேமுதிக தலைவர், நடிகர் விஜயகாந்த் காலமானார்

**அரச மரியாதையுடன் இன்று உடல் நல்லடக்கம்**


*திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது*



தேசிய முற்போக்கு திராவிட கழகத் தலைவர் புரட்சிக் கலைஞர் நடிகர் விஜயகாந்த் தனது 71 ஆவது வயதில் நேற்று காலமானார். சென்னை மியாட் மருத்துவமனையில் உடல் நலக்குறைவால் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று

06

## யாழ். நகரில் இணைய மோசடி; இருவர் பல இலட்ச ரூபா இழப்பு



இணைய மோசடியில் சிக்கி யாழ். நகரில் மேலும் இருவர் 26 இலட்ச ரூபாய் பணத்தை இழந்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இணையம் ஊடாக அதிக பணம் ஈட்ட முடியும் என ஆசை வார்த்தைகளுடனான விளம்பரங்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக மோசடிக்காரர்கள் செய்கின்றனர். அதனை நம்பி அந்த இணைப்பின் ஊடாக உட்செல்வோர் பணத்தை இழந்து

06

## ‘யுக்திய’ சுற்றி வளைப்புகளால் நிரம்பி வழியும் சிறைச்சாலைகள்

**கைதிகளை தடுத்து வைக்க மாற்று கட்டடங்கள்**



'யுக்திய' நடவடிக்கையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதாகவும், கைதிகளை மாற்று கட்டடங்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

யுக்திய நடவடிக்கை தொடங்கியதிலிருந்து நாடு முழுவதுமுள்ள இருபத்தெட்டு சிறைகளில்

06

### மலையகமெங்கும் கடும் மழை, காற்று

## மண்சரிவு, மரங்கள் முறிவால் போக்குவரத்து பெரும் பாதிப்பு

**நுவரெலியா, கந்தப்பளையில் விளைநிலங்கள் நீரில் மூழ்கின**



*தலவாக்கலை குறூப், ஊவா சுழற்சி நிருபர்கள்*

மலையக பிரதேசங்களில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழை, காற்றின் காரணமாக, பதுளை மாவாட்டத்தின்

06



## 03

### நீதித்துறை தீர்மானத்தின்படி

## தீர்வு காண முயற்சித்தால் அரசுடன் இணைந்து செயற்பட தயார்

03

### பொது வேட்பாளர் விடயத்தில்

## தமிழ்க் கட்சிகள் ஒன்றுப்பட்டு செயற்பட வேண்டியது அவசியம்

**சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து**



தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் அனைத்து கட்சிகளும் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றுப்பட்டு செயற்பட முன்வர வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.


ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர்

06

## கம்பஹா பகுதியில் மேலும் ஒரு கொவிட் மரணம் பதிவு

**63 வயது பெண் நிமோனியாவில் உயிரிழப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



கம்பஹா பிரதேசத்தில் மேலும் ஒரு கொரோனா மரணம் இடம் பெற்றுள்ளதாக அந்த ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


கண்டி பெரியாஸ்பத்திரியில் கம்பளையைச் சேர்ந்த நபர் ஒருவர் கொரோனா நோயினால் கடந்த சில தினங்களுக்கு முன் உயிரிழந்தார். அதன் பின்னர் மேலும் ஒரு கொரோனா மரணம் இடம்பெற்றுள்ளதாக அந்த

06

### விடுமுறையையடுத்து யுக்திய சுற்றிவளைப்பு

## கஞ்சா, ஐஸ், ஹெரோயினுடன் 1,422 சந்தேக நபர்கள் கைது

**தேடப்பட்டோர் பட்டியலில் 73 பேரும் கைது**



கிறிஸ்மஸ் விடுமுறையின் பின்னர் நாடு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட ‘யுக்திய’ நடவடிக்கைகளில் 1,422 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 35 பேர் தடுப்புக்காவல் உத்தரவில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

06

## கேரளாவிலுள்ள JN 1 தொற்று தமிழகத்திலும் பரவும் அபாயம்



இந்தியாவில் பல மாநிலங்களில் வேகமாக பரவி வரும் ஜே.என்.1 தொற்று, கோவா, மராட்டியம், கர்நாடகா, தெலுங்கானா, கேரளாவை தொடர்ந்து தமிழகத்திலும் பரவி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் ஜே.என்.1 தொற்றுள்ளதென்பதை உறுதிபடுத்தும் மத்திய அரசின் ஆதாரங்கள் எதுவும் இதுவரை எங்களுக்கு கிடைக்கவில்லையென

06

# நகர்வலம்



கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில்

# ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு 6000 சுற்றுலா பயணிகள் வருகை

## 22 அதிசொகுசு கப்பல்கள் இதுவரை வருகை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதம் வரை ஐந்து சுற்றுலாப் பயணிகள் கப்பல்களில் பல்வேறு நாடுகளிலிருந்தும் 6000 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக நிர்வாகப்பொறுப்பாளர் நேற்று (28) அறிவித்தார்.

'Azamara Journey' கப்பலின் ஊடாக கடந்த நவம்பர் மாதம் 620 சுற்றுலாப் பயணிகளும் நவீன அதிசொகுசு கப்பலான 'Mein Schiff 5' கப்பலினூடாக டிசம்பர் மாதம் 2200 சுற்றுலாப் பயணிகளும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தினை வந்தடைந்தது. இன்னொரு கப்பலான 'Celebrity Millennium' டிசம்பர் 05 மற்றும் 16 ஆம் திகதிகளில் 3500 சுற்றுலாப் பயணிகளுடனும் டிசம்பர் 19 ஆம் திகதி 'Nautica' 498 சுற்றுலாப் பயணிகளுடனும் ஹம்பாந்தோட்டைசர்வதேசதுறைமுகத்தை வந்தடைந்துள்ளது.





இந்த ஆண்டின் இன்றுவரை ஏறக்குறைய 22 சுற்றுலா பயணிகள் கப்பல்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை சென்னை வழியாக வருகை தந்துள்ளது. இந்திய நாட்டின் சுற்றுலா பயணிகளுக்கு விடுமுறை காலத்தில் சுற்றுலா வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் கப்பலான 'எம்பிரஸ்' ஜூன் முதல் செப்டெம்பர் வரை 7500 சுற்றுலா பயணிகளை அழைத்து வந்துள்ளது.

அதிசொகுசு கப்பல்களினுடாக ஹம்பாந்தோட்டை துறைமுகத்தினை வந்தடையும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஹம்பாந்தோட்டையிலுள்ள சுற்றுலா தலங்களை தரிசிப்பதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

சூழலுக்கு ஏற்ப சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்களும் இதனூடாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத துப்பாக்கியுடன்

# குற்றச்செயல்களில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்



சட்டவிரோதமான முறையில் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றினை பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்த சந்தேக நபர் ஒருவரை ஹொரவப்பொத்தான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த செவ்வாய்க்கிழமை (26) பகல் ஹொரவப்பொத்தான பொலிஸ் பிரிவின் மொறகேவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கியொன்றையும் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் 54 வயதுடைய கம்மஹெவாவெவ மொறகேவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரவப்பொத்தான பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் பல கோணங்களிலும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயில் மோதி காட்டு யானை உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கனேவல்பொல வனவிலங்கு வனத்தைச் சேர்ந்த கெக்கிராவ நெல்லியகம பகுதியில் நேற்று (28) காலை ரயிலுடன் மோதி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது.

கொழும்பில் இருந்து மட்டகளப்பு நோக்கி சென்று கொண்டிருந்த தபால் ரயிலுடன் மோதி குறித்த காட்டு யானை உயிரிழந்துள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயிலுடன் மோதி உயிரிழந்த காட்டு யானை கெக்கிராவ, நெல்லியகம, எம்புல்கஸ்வெவ, கலாவெவ மற்றும் ரிட்டிகல ஆகிய பகுதிகளில் சுற்றித்திரிந்த 25 வயதுடைய ஆண் யானை என வனவிலங்கு அலுவலகம் தெரிவித்தது.



புதிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் என். ரவிக்குமார் ஏற்பாட்டில் கொழும்பு மட்டக்குளி சென். ஜேம்ஸ் தொடர்மாடியின் எதிர்கால வேலை திட்டங்கள் சம்பந்தமாக முன்னாள் அமைச்சர் ரவிகருணாநாயக்கவுடனான விசேட சந்திப்பின் போது எடுத்த படம். இந்நிகழ்வில் முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் விஷ்ணுராஜும் கலந்து கொண்டிருந்தார்.

# கடலில் நீராடிய 04 மாணவர்களுள் ஒருவர் அலையில் சிக்கி மாயம்

## மாரவில மூகுதுகடுவ கடலில் சம்பவம்

கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்

மாரவில மூகுதுகடுவ கடலில் குளிப்பதற்காகச் சென்ற நான்கு பாடசாலை மாணவர்களில் ஒருவர் அலையில் சிக்கிய நிலையில் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (27) மாலை மாரவில கடலில் நான்கு மாணவர்கள் குளிப்பதற்காக சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், மாணவர்கள் நால்வரும் குளித்துக் கொண்டிருந்த போது அந்த நால்வரும் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீனவர்கள் மற்றும் சிலர் இணைந்து அவர்களில் மூவரைக் காப்பாற்றிய போதிலும் ஒருவர் காணாமல் போயுள்ளதாக மாரவில தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நாத்தாண்டிய பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றின் நான்கு மாணவர்கள் குளிப்பதற்கு மாரவில மூதுகடுவ கடற்கரைக்கு வந்ததாகவும், பின்னர் கடலில் குளித்துக் கொண்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட பாரிய அலையினால் அடித்துச் செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அருகில் இருந்த மீனவர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் விரைந்து வந்து மாணவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

எனினும், அலையில் தத்தளித்துக் கொண்டிருந்த நான்கு மாணவர்களில் மூவரை மீட்டு கரைக்குக் கொண்டு வந்த போதிலும், ஒரு மாணவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது.

காணாமல் போன மாணவனைத் தேடும் நடவடிக்கைகளில் பொலிஸார், கடற்படையினருடன் இணைந்து மீனவர்கள் மற்றும் பிரதேசவாசிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளம் ஆஸாத் சிராஸ் கலாநிதி பட்டம் பெற்றார்

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் அஷ்ஷெய்க் ஆஸாத் ஸிராஸ் (நளீமி) கலாநிதி பட்டத்தை (Ph.D) ஐ மலேசிய சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் (IIUM) பெற்றுள்ளார்.

மத ஒப்பீட்டாய்வில் இஸ்லாம் மற்றும் பௌத்த நாகரிகங்கள் கூறும் "உளத்தூய்மை" என்பதை கருப்பொருளாகக் கொண்டு இவரின் ஆய்வு அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை முஸ்லிம் ஒருவர் இத்தகைய ஆய்வை மேற்கொண்டமை இதுவே முதன் முறையாகும். ஆசாத் சிராஸ் தமிழ், சிங்களம், ஆங்கிலம், அரபு, மலாய் என பன்மொழிப் பாண்டித்தியம் மிக்கவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கலேவல அல் புர்கானில் 75 வருட பூர்த்தி விழா நிகழ்வுகள்











மாத்தளை மாவட்டம், கலேவல கல்வி வலயத்திற்குட்பட்ட கலேவல அல் புர்கான் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 75 வருட பூர்த்தியை முன்னிட்டு பவள விழா கொண்டாட்ட நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் வெகு விமரிசையாக அண்மையில் இடம்பெற்றது. வித்தியாலய அதிபர் டபிள்யூ.எம். ஸமீர் தலைமையில் தொடர்ந்து மூன்று தினங்களாக இவ்விழா நடைபெற்றது. முதல் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சிம்சா லங்கா நிறுவனத்தின் தலைவரும் தொழில் அதிபருமான அல்ஹாஜ் ஏ.எஸ். கலீல் பாடசாலைக்கு புதிய கட்டிடத்துக்கான அடிக்கல்லை நட்டி வைத்தார்.

இரண்டாம் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கலாநிதி அலவி சரீப்தீன் பத்து பாடசாலைகளுக்கான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார். விழாவில் மாணவர்களின் கல்வி கண்காட்சி மற்றும் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள், ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பூரண ஒத்துழைப்புடன் இவ்விழா சிறப்பாக நடைபெற்றமை விசேட அம்சமாகும்.

படமும் தகவலும்:
எம்.சதுர்தீன் (மாத்தளை சுழற்சி நிருபர்)









தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 29 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.59
லுஹர் - 12.14
அஸர் - 03.35
மஃரிப் - 06.04
இஷா - 07.19

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 13
ராகுகாலம் : பகல் : 10.56 - 12.28வரை
சுபநேரம் : காலை : 06.26 - 07.58வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# அஸ்வெசும 02,03 ஆம் கட்டங்கள் பெப்ரவரியில் ஆரம்பிக்க திட்டம்

## ஜனவரியில் விண்ணப்பங்கள் ஏற்பு
## கிராமசேவகர்களுக்கும் ரூ.2,500 கொடுப்பனவு



அஸ்வெசும நலன்புரித் திட்டத்தினூடாக இதுவரை 05 ஆயிரத்து 196 கோடியே 70 இலட்சம் ரூபாய் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் உதவித் திட்டத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் ஆரம்பமாகுமென நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

அதேவேளை, அஸ்வெசும நன்மைகள் திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து கிராம அலுவலர்களுக்கும் மாதாந்த கொடுப்பனவாக 2,500 ரூபா வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அஸ்வெசும நலன் திட்டத்துக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் மீண்டும் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டு ள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உரிய முறையில் விண்ணப்பங்களை அனுப்ப முடியாத தரப்பினர் தொடர்பில் கவனம் செலுத்தி ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய மீண்டும் விண்ணப்பங்களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எதிர்வரும் 5 வருடங்களுக்கான

# சிறந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் தரப்புக்கே ஆதரவு

## தயாசிறி ஜயசேக்கர எம்.பி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தமது கட்சிகளுடன் இணைந்து கொள்ளுமாறு பல்வேறு கட்சிகளும் தமக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் அது தொடர்பில் இதுவரை எந்தவித இறுதித் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர எம்.பி தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் அத்தகைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் எதிர்வரும் 05 வருட காலத்தில் நாட்டை முன்னேற்றும் வகையில் காத்திரமான வேலைத் திட்டங்களுடன் முன் செல்லும் தரப்பினருடன் இணைந்தே தாம் பயணிக்க வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து அங்கத்துவம் இழக்கப்பட்டுள்ள நிலையிலும் தாம் இன்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர் என்றும் அந்த கட்சி மேற்கொள்ளும் எந்தவொரு சிறந்த தீர்மானத்திற்கும் எந்த சந்தர்ப்பத்திலும் தாம் முழுமையான ஆதரவை வழங்கப் போவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நடிகர் கேப்டன் விஜயகாந்த்

# பாமர மக்கள் மீது அதீத அன்பு கொண்ட தலைவர்

## கிழக்கு ஆளுநர் செந்தில் இரங்கல்



உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த தேமுதிக தலைவர் கேப்டன் விஜயகாந்த் உயிரிழந்த செய்தியறிந்து மிகவும் மனவேதனை அடைந்தேன் என கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விஜயகாந்த் மக்களுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்த மனிதர். விஜயகாந்துடன் பல முறை ஏற்பட்ட சந்திப்பின் போது அவருடைய எண்ணங்களிலும் செயல்களின் ஊடாகவும் அவர் ஒரு போற்றப்படக் வேண்டிய தலைவர் என்பதை நான் அறிந்தேன்.

எவருக்கும் அஞ்சாது மக்களுக்காக உடனுக்குடன் சேவையை செய்யும் அரசியல் தலைவன்.

இலங்கை மக்கள் மீது அதீத அன்பு கொண்ட இவர். இலங்கையில் உள்ள பாமர மக்களுக்காக விளம்பரமற்ற பல உதவிகளை செய்துள்ளார்.

06

# தீர்வு காண முயற்சித்தால் அரசுடன் இணைந்து செயற்பட தயார்

## நீதித்துறை தீர்மானத்தின்படி



நீதித்துறையின் தீர்மானத்தின்படி பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்தால், பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட திருச் சபை தயாராக உள்ளதென கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

06

# பாண் விற்கும் ஓட்டோ வண்டியில் ஐஸ், கள்ளச்சாரயம் விற்பனை

## 28 போத்தல் கசிப்பு, 1,200மி.கி ஐஸ் மீட்பு



மிரிஹான பிரதேசத்தில் முச்சக்கர வண்டியில் பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திகளை விற்பனை செய்வதுடன் போதைப்பொருள் விற்பனை செய்ததாக சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்திலிருந்து 28 போத்தல்கள் அடங்கிய 37,000 லீட்டர் நிறையுடைய சட்டவிரோத மதுபானம் , 1,200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் மிகவும் தந்திரமான முறையில் முச்சக்கர வண்டியின் பின்புறத்தில் போதைப்பொருட்களை மறைத்து வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


தேசிய இளைஞர் படையணி
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2024

2024ஆம் வருடத்தில் தேசிய இளைஞர் படையணி தலைமையகம் மற்றும் நாடு முழுவதிலுமுள்ள அமைந்துள்ள பயிற்சி நிலையங்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தேசிய இளைஞர் படையணியினால் 2021ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2022, 2023 மற்றும் 2024 ஆகிய மூன்று வருடங்களுக்கான வழங்குநர்கள் பதிவு செய்துகொள்ளப்பட்டுள்ளனர் என்பதனால் அதன் பிரகாரம் 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களாக பதிவு செய்துகொண்ட நிறுவனங்கள் மீண்டும் பதிவு செய்யத் தேவையில்லை.

வழங்க வேண்டிய பொருட்கள் மற்றும் சேவைகளின் பட்டியல் மற்றும் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கும்போது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் போன்ற சகல தகவல்களையும் www.youthcorps.lk எனும் இணையதளத்திற்குள் பிரவேசித்து பார்த்துக் கொள்ளலாம்.

இதன் பிரகாரம் ஒரு வகுதியின் கீழ் உள்ள சகல உப வகுதிகளுக்குமான பதிவுக் கட்டணம் 1,000.00 ரூபாவாகும் என்பதுடன் ஒவ்வொரு வகுதிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தக் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் மற்றும் ஏனைய வழிகளில் செலுத்த முடியாது.

வழங்குநராக பதிவு செய்துகொள்வதற்கு ஆர்வம் காட்டும் நிறுவனம் அல்லது நபர்கள் தாம் பதிவு செய்துகொள்வதற்கு எதிர்பார்க்கும் ஒவ்வொரு வகுதிக்காகவும் வெவ்வேறாக பதிவுக் கட்டணத்தை தேசிய இளைஞர் படையணி தலைமையக சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்குச் சமர்ப்பித்ததன் பின் குறித்த விண்ணப்பப் படிவங்களை 2023-12-29ஆம் திகதி முதல் 2024-01-18ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

அவ்வாறு பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2024-01-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன் நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் பதிவு செய்துகொள்வதற்காக கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**பணிப்பாளர்,**
**தேசிய இளைஞர் படையணி,**
**இல. 430, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**
**2023-12-29.**



1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படுதல் (விசெட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ**
**விலை மதிப்புமிக்கச் சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்பனை அங்குள்ள அனைத்து கட்டிடங்கள், மண், தோட்டங்கள் மற்றும் எல்லாவற்றும் அடங்களாக**

மேற் குறிப்பிடப்பட்டுள்ள பதிப்பின் படி
மேல் மாகாணம் களுத்தரை மாவட்டத்தின், பானதுர தொடமுண, பானதுர தல்பிடி தெபெத்த நகர சபை பிரிவு மற்றும் பானதுர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலக்கம்.686, பட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் பட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அனுமதி பெற்ற நில அளவையாளர் எல்.பீ. லியனகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012/07/07 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல.484 இல் **துண்டு இல. B** என குறிப்பிடப்பட்ட சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட **அரம்பதெணியவத்தை** என்ற காணியின்

**வடக்கெல்லை** நிலவரைப்பட இல.484 இல் துண்டு இல.A மூலமாகவும்,
**கிழக்கெல்லை** காலி வீதி மூலமாகவும்
**தெற்கெல்லை** ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்து மூலமாகவும்,
**மேற்கெல்லை** ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்து மூலமாகவும், மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது.

இக் காணியின் பரப்பளவு பதினைந்து தசம் ஏழு எட்டு பெர்ச்சஸ் (A0: R0: P15.78 ) அளவிலான நிலம் மற்றும் அதன் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக

மேற்கண்ட நிலம் பின்வரும் நிலங்களின் ஒருங்கிணைப்பின் துணைப்பிரிவாக விவரிக்கப்பட்டுள்ளது:

1. மேல் மாகாணம் களுத்தரை மாவட்டத்தின், பானதுர தொடமுண, பானதுர தல்பிடி தெபெத்த நகர சபை பிரிவு மற்றும் பானதுர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலக்கம்.686, பட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் பட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அனுமதி பெற்ற நில அளவையாளர் எச்.பீ.ஏ. ஜயவிக்கிரம என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001/11/09 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல.8442 இல் **துண்டு இல. 1** என குறிப்பிடப்பட்ட சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட **அரம்பதெணியவத்தை** என்ற காணியின்

**வடக்கெல்லை** பாலித பெர்னாண்டோவுக்கு சொந்தமான சொத்து மூலமாகவும்,
**கிழக்கெல்லை** காலி வீதி மூலமாகவும்
**தெற்கெல்லை** திட்ட எண் 8442 இல் லொட் 2 மூலமாகவும்,
**மேற்கெல்லை** ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுதனத்துக்குச் சொந்தமான சொத்து மூலமாகவும், மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது.

இக் காணியின் பரப்பளவு பதிமூன்று தசம் ஆறு ஒன்பது பெர்ச்சஸ் (A0: R0: P13.69 ) அளவிலான நிலம் மற்றும் அதன் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக (பானதுரை நில பதிவேட்டில் தொகுதி /ஃபோலியோ எஃப் 414/87 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது).

2. மேல் மாகாணம் களுத்தரை மாவட்டத்தின், பானதுர தொடமுண, பானதுர தல்பிடி தெபெத்த நகர சபை பிரிவு மற்றும் பானதுர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இலக்கம். 686, பட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவின் பட்டிய கிராமத்தில் அமைந்துள்ள அனுமதி பெற்ற நில அளவையாளர் எச்.பீ.ஏ. ஜயவிக்கிரம என்பவரால் தயாரிக்கப்பட்ட 2001/11/09 ஆம் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல.8442 இல் **துண்டு இல. 2** என குறிப்பிடப்பட்ட சகலதும் பிரிக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட **அரம்பதெணியவத்தை** என்ற காணியின்

**வடக்கெல்லை** திட்ட எண் 8442 இல் லொட் 1 மூலமாகவும்,
**கிழக்கெல்லை** காலி வீதி மூலமாகவும்
**தெற்கெல்லை** ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்து மூலமாகவும்,
**மேற்கெல்லை** ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துக்குச் சொந்தமான சொத்து மூலமாகவும், மூலமாகவும் சூழப்பட்டிருக்கிறது

இக் காணியின் பரப்பளவு பதினைந்து தசம் ஏழு எட்டு பெர்ச்சஸ் (A0: R0: P15.78 ) அளவிலான நிலம் மற்றும் அதன் பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக (பானதுரை நில பதிவேட்டில் தொகுதி / ஃபோலியோ எஃப் 414/88 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது).

**களுத்துரை பிரசித்த நொதாரிசு செல்வி வீரமுனி ஆரச்சிகே பிரியங்கிகா புஷ்பானி ஜயஸோம அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2017 மார்ச் மாதம் 27 ஆம் திகதியிடப்பட்ட 215 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், மாரசிங்க ஆரச்சிகே அஜித் சாந்த மாரசிங்க என்பவரால் நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ க்கு ஈடுவைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.**

**நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி,**
2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.30 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**சொத்துக்கான பிரவேசம் :**
கொழும்பு - காலி வீதியில் A2 சாலையில் காலியிலிருந்து, பனதுரா சி.டி.பி பஸ் ஸ்டாண்ட் வரை சுமார் 88 கி.மீ தூரம் பயனிக்கவும். அப்போது இடது புறத்தில் மதிப்பீட்டு எண் 394, பிரதான வீதியில் (கொழும்பு-காலி சாலை) ஒரு குடியிருப்பு கட்டிடத்துடன் அமைந்துள்ளது.

தீர்மான அறிவிப்புகளுக்காக 2019 டிசம்பர் மாதம் 27 ஆம் தெதியிட்ட அரச வர்த்தமானி மற்றும் 2019 டிசம்பர் மாதம் 14 ஆம் தெதியிட்ட தி அய்லன்ட்,திவயின மற்றும் தினக்குரல் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**
ஏலவிற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பனமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான முத்திரைக் கட்டணம்

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்கானும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.

சிரேஷ்ட முகமையாளர் - மையப்படுத்தப்பட்ட அறவிடுதல், தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ இலக்கம்: 40, நவம் மாவத்தை, கொழும்பு - 02.

தொலைபேசி. 011-2448448 தொலைநகல். 011-2440262

**• முன் அறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் நெஷனல் டிவலொப்மன்ட் பேன்க் பீ.எல்.சீ க்குள்ளது.**

DK's AUCTIONS
To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com



## இலங்கை வங்கி

**பின்வரும் அமைவிடங்களில் மேல் மாகாணம் வடக்கு இலங்கை வங்கியினால் முகாமை செய்யப்படும் CRM அலகொன்றை நிறுவுவதற்காக 10 வருட குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடமொன்று அல்லது வெற்றுக் காணியொன்று தேவைப்படுகின்றது**

**பலும்மஹர சந்தி, நெல்லிகஹமுல சந்தி**

**உத்தேசிக்கப்பட்ட காணி/ கட்டடமானது நகரின் மத்தியிலிருந்து 300 மீற்றர் எல்லையினுள் அமைந்திருப்பதுடன் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

- கட்டடமானது பிரதான வீதிக்கு முகப்பாக அமைந்திருக்க வேண்டும் என்பதோடு அம்முகப்பு ஆகக்குறைந்தது 10′ 6″ அடி அகலத்தில் இருத்தல் வேண்டும். கட்டடத்தின் பின்புறத்தில் நுழைவாயில் ஒன்று இருத்தல் வேண்டும் என்பதோடு அவ்வாறு நுழைவாயில் இல்லாவிடில் கட்டடத்தின் அகலமானது ஆகக் குறைந்தது 12 அடியாகவிருத்தல் வேண்டும்.
- தரைக்குத் தரையோடு பதித்திருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மின்சார வழங்கலிருத்தல் வேண்டும்.
- போதுமானளவு வாகன நிறுத்துமிட வசதியிருத்தல் வேண்டும்.
- இலகுவில் அடையக்கூடிய இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வெற்றுக் காணியாகவிருப்பின், அக்காணியானது 10′ 6″ X 18′ அடி (189 ச.அடி) விஸ்தீரணத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள கட்டட /ஆதன உரித்தாளர்கள் கட்டட வரைபடம், அளவை வரைபடம், உரித்துடமை உறுதி, உரிமையாளரின் இணக்கச் சான்றிதழ் (குத்தகை எனின்) ஆகியன அடங்கலான கட்டடம்/ஆதனத்தின் விபரங்களை குறிப்பிட்டு கீழேயுள்ள முகவரியை இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட 14 நாட்களுள் வந்தடையும் வகையில் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“CRM** அலகை நிறுவுதல்: (அமைவிடப் பெயர்)” என குறிப்பிடப்படல் வேண்டும்.

**உதவிப்பொது முகாமையாளர்,**
**(மேல் மாகாணம் - வடக்கு)**
**இலங்கை வங்கி,**
**2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தக கோபுரக் கட்டடம்,**
**கொள்ளுப்பிட்டி.**
**தொலைபேசி: 2381366/2575047 தொலைநகல்: 2326830**
**மின்னஞ்சல்: bocwpn@boc.lk**

1975 BOC CALL CENTRE
www.boc.lk
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 227.01 | 211.27 |
| கனடியன் டொலர் | 249.74 | 230.05 |
| யூரோ | 347.08 | 368.80 |
| ஜப்பான் யென் | 2.1982 | 2.3633 |
| சிங்கப்பூர் டொலர் | 252.53 | 236.33 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 394.26 | 365.79 |
| அமெரிக்க டொலர் | 329.18 | 318.09 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 826.64 | கட்டார் ரியால் | 85.50 |
| குவைத் டினார் | 1,022.05 | சவூதி ரியால் | 83.10 |
| ஓமான் ரியால் | 809.53 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.85 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 14ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 13

## குறள் தரும் சிந்தனை



தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில்

கூழ்தான் குடிக்கவேண்டிய நிலை என்றாலும், அதையும் தானே உழைத்துச் சம்பாதித்துக் குடித்தால் அதைவிட இனிமையானது வேறொன்றும் இல்லை.

# முஸ்லிம்களுக்கு நம்பிக்கை தரும் ஜனாதிபதியின் அறிவிப்பு

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திலுள்ள குருத்தலாவவில் அமைந்திருக்கும் குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் பிரதான வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இவ்வைபவத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார்.

ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒரேயொரு முஸ்லிம் தேசிய பாடசாலையே இதுவாகும். இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவின் பிரதம அதிதியான ஜனாதிபதி உரையாற்றுகையில், 'இந்நாட்டில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைச்சரவையில் கலந்துரையாடி, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

குறிப்பாக கொவிட் காலத்தில் இறந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வது தொடர்பான பிரச்சினை எழுந்தது. அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஏனைய நாடுகள் அது பற்றிய முடிவுகளை பிற்காலத்தில் மாற்றிக்கொண்டாலும், இலங்கையில் அந்த முடிவுகளை மாற்ற நீண்ட காலம் எடுத்தது. அதற்கான காரணங்களை ஆராய்ந்து, அத்தகைய நிலைமை மீண்டும் ஏற்படாமல் இருக்க சட்ட ரீதியான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இறுதிச் சடங்குகளை எப்படிச் செய்வது என்பது அந்தந்த மதத்தின் படி முடிவு செய்யப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

'அதேநேரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகள் நீக்கப்படுவதில் சில தவறுகள் நடந்திருந்தன. அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயல்படுகிறோம். புத்தகங்கள் தருவிப்பது மற்றும் எகிப்தில் இருந்து போதகர்களை அழைத்து வருவது உள்ளிட்ட பல விடயங்கள் உள்ளன. முஸ்லிம் மதக் கல்விக்கு அவை முக்கியமானவை என்பதால் அந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும். மத்ரஸாக்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமூலமொன்றை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது முன்வைக்கப்படவில்லை. இதுபோன்ற முஸ்லிம் மக்களைப் பாதிக்கும் பல பிரச்சினைகள் உள்ளன' என்பதையும் ஜனாதிபதி தமது உரையின் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை முஸ்லிம்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். குறிப்பாக கொவிட் 19 தொற்று காலப்பகுதியில் இந்நாட்டில் உயிரிழந்த முஸ்லிம்களை அடக்கம் செய்வதில் பலவிதமான அசௌகரியங்களை இந்நாட்டு முஸ்லிம்கள் எதிர்கொண்டார்கள். இத்தொற்றினால் உயிரிழந்தவர்களின் பிரேதங்களை தகனம் செய்யும் பொது கொள்கையை பல்லின மக்கள் வாழும் இலங்கை கடைபிடித்தது. ஆனால் முஸ்லிம்களின் மார்க்கத்தின்படி மரணமடைந்தவரின் பிரேதத்தை தகனம் செய்ய முடியாது. மரணமடையும் அனைவரும் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் வழிகாட்டலாகும்.

அதனால் தகனம் செய்யும் பொது கொள்கையில் தங்களுக்கு விதிவிலக்கு அளிக்குமாறு கோரிய முஸ்லிம்கள் இத்தொற்றினால் மரணமடையும் முஸ்லிம்களின் பிரேதங்கள் தகனம் செய்யப்படுவதற்கு ஆட்சேபனையும் தெரிவித்தனர். முஸ்லிம் பிரதிநிதிகள் இது தொடர்பில் கடந்த ஆட்சியாளர்களுடன் சந்திப்புக்களை நடாத்தினர். அந்தப் பின்புலத்தில் பல மாதங்களின் பின்னர் அக்கொள்கையில் முஸ்லிம்கள் உட்பட இத்தொற்றினால் மரணமடைபவர்களை அடக்கம் செய்ய விரும்புபவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

ஆனால் கடந்த கொவிட் 19 தொற்று காலத்தைப் போன்றதொரு நிலைமை மீண்டும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு உரிய சட்ட ஏற்பாடுகளின் அவசியம் உணரப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்நாட்டில் சிங்கள, தமிழ் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளையும் சலுகைகளையும் வசதிகளையும் இந்நாட்டு முஸ்லிம்களும் அனுபவித்தே வந்தனர். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரான சில கட்டுப்பாடுகள் இவற்றில் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக புத்தகங்கள் தருவிப்பது மற்றும் எகிப்தில் இருந்து போதகர்களை அழைத்து வருதல் அடங்கலான சில விடயங்கள் குறித்து முஸ்லிம்களுக்கென விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் இந்நாட்டு முஸ்லிம்களின் சமயக் கல்விக்கும் பெரும் சவாலாகியுள்ளன.

இவ்வாறான சூழலில் இந்நாட்டு முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் அசௌகரியங்களையும் தீர்த்து வைக்குமாறு முஸ்லிம் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், சிவில் அமைப்புக்கள் அடங்கலாக பல தரப்பினரும் ஜனாதிபதியிடமும் அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான சூழலில் குருத்தலாவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, 'எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதமளவில் முழு அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்க்கிறேன். அதற்கு முன், மதத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் சந்தித்து, இந்த அனைத்து விடயங்கள் குறித்தும் ஆராய உள்ளேன். அதற்கு அனைவரும் ஆதரவளிப்பார்கள் என்று நம்புகிறேன்' என்றுள்ளார். ஆகவே ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு இந்நாட்டு முஸ்லிம்கள் மத்தியில் நிச்சயம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். அத்தோடு அவர்கள் அண்மைக்காலமாக எதிர்கொள்ளும் அசௌகரியங்களும் முடிவுக்கு வரும் காலமும் வெகுதொலைவில் இல்லை என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk



# தமிழ்ப்பற்றும், தேசாபிமானமும் நிறைந்தவர் நடிகர் விஜயகாந்த்

## புரட்சிக் கலைஞர் மறைவுக்கு அபிமானிகள் அனுதாபம்

சென்னை மியாட் மருத்துவமனையில் உடல் நலக்குறைவால் நேற்று தேமுதிக தலைவர் விஜயகாந்த் உயிரிழந்தார் அரசியல் கட்சி தலைவர்கள், திரை துறையினர் ஆகியோர் இரங்கல்

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் விஜயகாந்த் சிகிச்சை பலனின்றி நேற்று வியாழக்கிழமை காலை காலமானார். அவருக்கு வயது 71. அவரது மறைவால் தே.மு.தி.க கட்சித் தொண்டர்கள், திரை ரசிகர்கள், நண்பர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். விஜயகாந்த் இல்லத்தில் உள்ள தே.மு.தி.க கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

அவரது மறைவு தொடர்பாக மியாட் மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில், 'நிமோனியா (நுரையீரல் அழற்சி) காரணமாக அனுமதிக்கப்பட்டு வெண்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்றுவந்த விஜயகாந்துக்கு மருத்துவப் பணியாளர்களின் கடின முயற்சி இருந்தபோதிலும், அவர் காலமானார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயகாந்த்திற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. சுவாசிப்பதில் சிக்கல் இருந்ததால் வெண்டிலேட்டர் உதவியுடன் அவர் சிகிச்சை பெற்று வந்தார். உயிரிழந்த விஜயகாந்தின் உடல் அவருடைய வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. இவரது மரணம் தமிழ்நாடு முழுவதும் அவரது கட்சியை சேர்ந்தவர்களுக்கும் அனைத்து அரசியல் கட்சிகள் தலைவர்களுக்கு பெரும் அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவரது மறைவிற்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின், அ. தி. மு. க. பொதுச் செயலாளர் மற்றும் எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், தமிழ்நாடு ஆளுநர் என். ஆர். ரவி, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் டொக்டர் தமிழிசை சௌந்தரராஜன், பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் திரைப்பட சங்கம், நடிகர் சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் இரங்கல் தெரிவித்துள்ளார்கள். 'நாராயணன் விஜயராஜ் அழகர்சுவாமி' என்ற இயற்பெயர் கொண்ட இவர், தமிழ் சினிமாவில் விஜயகாந்த் என்ற பெயரில் பிரபலமானார். இவர் நடிகர், தயாரிப்பாளர், இயக்குனர், அரசியல்வாதி என்றெல்லாம் பன்முக ஆளுமை கொண்டவர்.



விஜயகாந்த் 1979 ஆம் ஆண்டு 'அகல் விளக்கு' திரைப்படத்தின் மூலம் நடிகராக தமிழ் சினிமாவில் அறிமுகமாகி, 2015 ஆம் ஆண்டு வரை 150 இற்கும் மேற்பட்ட தமிழ்த் திரைப்படங்களில் நடித்து தமிழ் மக்களின் அன்பை கவர்ந்து பிரபலமானவர்.

விஜயகாந்த் இதுவரை தமிழ்ப் படங்களில் மட்டுமே நடித்துள்ளார். இவரது திரைப்படங்கள் ஹிந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் டப்பிங் செய்யப்பட்டிருந்தாலும், இவர் தமிழ் சினிமாவில் தமிழ் படங்களில் மட்டுமே நடித்துள்ளார்.

இவருக்கு தமிழ் சினிமாவில் 'புரட்சிக் கலைஞர்' என்னும் பட்டம் உண்டு. விஜயகாந்த், மதுரையில் கே.என்.அழகர்சுவாமி மற்றும் ஆண்டாள் அழகர்சுவாமி ஆகியோருக்கு மகனாக 1952 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 25 ஆம் திகதி பிறந்தார்.

நடிப்புக் கலையில் அதிக ஆர்வம் கொண்ட இவர், சினிமாவில் நடிகன் ஆக வேண்டும் என்ற மோகத்தில் சென்னைக்கு வந்து பல கஷ்டங்களைக் கடந்து 1979 ஆம் ஆண்டு 'அகல் விளக்கு' படத்தில் மூலம் அறிமுகமாகி தொடர்ச்சியாக பல படங்களில் நடித்து புகழ் பெற்றார்.

1990 ஆம் ஆண்டு ஜனவரி 31இல் நடிகர் விஜயகாந்த், பிரேமலதாவை மதுரையில் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு விஜய பிரபாகரன், சண்முகப் பாண்டியன் என்னும் இரு மகன்கள் உள்ளனர்.

நடிகர் விஜயகாந்த் பல போராட்டங்களுக்குப் பின்னர் தமிழ் சினிமாவில் வில்லன் கதாபாத்திரம் மூலமே அறிமுகமானார்.

இவர் 1979 இல் 'அகல் விளக்கு' படத்தில் நடித்த பின்னர் அதே ஆண்டு 'இனிக்கும் இளமை' என்ற படத்தில் நடித்துள்ளார்.

இவரது முன்னணி நடிப்பில் 1981ஆம் ஆண்டு வெளியான 'சட்டம் ஒரு இருட்டறை' திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்று இவருக்கென ஒரு அடையாளத்தினை பெற்று தந்துள்ளது. இவர், நாயகனாக பல படங்களில் நடித்து புகழ் பெற்றார்.

இவர் நடிக்கும் படங்களில் தேசப்பற்று வசனங்கள் மிகவும் அழுத்தமாக இருக்கும். ஊழல், திருட்டு என சட்ட விரோத செயல்களுக்கு இவரின் குரல் திரைப்படங்களிலும், சமூகத்திலும் தொடர்ச்சியாக ஒலிக்கும்.

இவர் இரட்டை கதாபாத்திரங்கள் மற்றும் பொலிஸ், இராணுவம் போன்ற கதாபாத்திரங்களில் நடித்துள்ளார். தமிழ் சினிமாவில் 'புரட்சி கலைஞர்' என்ற பட்டம் பெற்றிருந்தாலும், இவரை தமிழ் திரைப்பட ரசிகர்கள் 'கப்டன்' என்றே அழைக்கின்றனர்.

இவரது நடிப்பையும், நாட்டுப் பற்றையும் பாராட்டி கலைமாமணி விருது (2001), எம்.ஜி.ஆர் விருது (1994), சிறந்த தமிழ் திரை நட்சத்திரத்திற்கான பிலிம்பேர் விருது (2009) ஆகிய விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் இந்திய அரசால் 'சிறந்த குடிமகனுக்கான' விருது அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக திரைப்பட சங்கத் தேர்தல்களில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றுள்ளார். பல கோடி கடனில் இருந்த தமிழ் திரைப்பட சங்கத்தை தனது சிறந்த வழிகாட்டுதலில் ஒரு முன்னணி திரைப்பட சங்கமாக உயர்த்தியுள்ளார்.

இவர் 2006 மற்றும் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவியில் இருந்துள்ளார்.

விஜயகாந்த் உடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை நல்லடக்கம் செய்யப்படுகிறது. அவரது உடல் தமிழக அரசின் சார்பில் முழு அரசு மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்படுவதாக தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடி, ராகுல் காந்தி, உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

திருச்சி
எம்.கே. ஷாகுல் ஹமீது



# கடலலை சீற்றத்தினால் காவு கொள்ளப்படும் பௌஸி ஞாபகார்த்த விளையாட்டு மைதானம்!

சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பினால் இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பௌஸி ஞாபகார்த்த விளையாட்டு மைதானம் முழுமையாக இல்லாமல் போகும் ஆபத்தான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

கடலரிப்பைத் தடுப்பதற்காக கடலோரத்தில் பாறாங்கற்கள் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் அப்பணி ஸ்தம்பிதமடைந்துள்ளது. கடலரிப்பினால் தொடர்ச்சியாக இம்மைதானம் பாதிக்கப்பட்டு வருகின்றது. சாய்ந்தமருது பிரதேசத்தில் சுத்தமான காற்றுள்ள சூழலில் உடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு, ஏனைய பொது நிகழ்வுகளை நடத்துவதற்கும், விளையாட்டு போட்டி நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்கும் இந்த இடத்தை தவிர மாற்றுவழி இல்லாத நிலையில், இந்த மைதானத்தை அழிவிலும் சிதைவிலும் இருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மிகத் துரிதமாக மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கேட்டுள்ளனர்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# பலஸ்தீன தூதரகத்தில் கிறிஸ்மஸ் நிகழ்வுகள்

கொழும்பில் உள்ள பலஸ்தீன தூதரகத்தில் இவ்வருடமும் கிறிஸ்மஸ் நிகழ்வுகள் பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி செய்யட் தலைமையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கார்டினல் மல்கம் ரஞ்சித் அவர்கள் கலந்து கொண்டார். பாராளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு நாடுகளின் தூதுவர்கள், கிறிஸ்தவ மதத்தலைவர்கள் பலரும் கலந்து கொண்டு நத்தார் கொண்டாடினர்.

இங்கு கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றுகையில், "பலஸ்தீனம் மீதான யுத்தத்தை நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது, அதனை வீற்றோ அதிகாரத்தைப் பாவித்து அமெரிக்கா தடுத்துள்ளது. அவர்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் அவர்கள் உற்பத்தி செய்யும் ஆயுதங்களை விற்க வேண்டும் என்பதாகும். அதனை விற்றால்தான் அவர்களது பொருளாதாரம் நிலைத்து நிற்கும்.





பலஸ்தீனத்தில் இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னரான காலத்திலிருந்து யுத்தம் இடம்பெற்று வருகிறது. அங்கு வாழ்ந்த கிறிஸ்தவ மக்களையும் யூதர்கள் தாக்கினார்கள். அவர்கள் எகிப்து வழியாக அகதிகளாக வெவ்வேறு நாடுகளுக்கு இடம்பெயர்ந்தார்கள். நான் 1974 களில் ஜெருசலேம் சென்றிருந்தேன். அங்கு வீடு வாசலை இழந்து ஓர் அரபுத் தாய் கதறிக் கொண்டிருந்தார். அவர் அதற்காக நஷ்ட ஈடு கேட்டு அங்கு கதறினார். அந்த அரபுத் தாயிடம் அருகில் சென்ற விசாரித்தேன். நான் இலங்கையன், என்னால் அவருக்கு அங்கு உதவ முடியாது. அதன் பின்னர் அங்குள்ள அதிகாரிகள் அப்பெண்ணை அங்குள்ள அகதி முகாமுக்கு அனுப்பி வைத்தார்கள். பலஸ்தீன மக்கள் 1947 களிலிருந்து பாரிய அவலங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்" எனத் தெரிவித்தார்.

பலஸ்தீனம் மீதான யுத்தம் முடிவடைந்து சமாதானம் நிலவ வேண்டுமென்று அங்கு பிரார்த்தனை நடத்தப்பட்டது. பலஸ்தீன தூதுவர் கிறிஸ்தவ சமய அனுஷ்டான நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கி வைத்தார்.

அஷ்ரப் ஏ சமத்

# நடுநிலையான சிந்தனையுடன் செயற்படும் சவூதி அரேபியா



உலகில் அமைதியையும் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்த சவூதி அரேபியா தொடர்ந்தும் பாரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. சவூதி அரேபியா தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை முற்றாக நிராகரிப்பதுடன் அதில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனையையும் வழங்கி வருகின்றது.

சவூதி அரேபியாவின் அரசியல், பொருளாதாரம் மற்றும் இராஜதந்திர ரீதியான முன்னெடுப்புகளை ஆழமாகப் பார்க்கும் போது இதனை மிக இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இஸ்லாம் வலியுறுத்தும் நடுநிலையான போக்கை இஸ்லாமிய உலகில் வலுவூட்டும் சவூதி அரேபியா, தனது மனிதாபிமான உதவிகளையும் வழங்கிக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

நடுநிலையான அணுகுமுறை என்பது சவூதி அரேபியாவின் வெறும் கோஷம் மட்டுமல்ல, மாறாக தனது மண்ணில் அது கடைப்பிடித்து வரும் அடிப்படை அம்சமாகவே பார்க்கப்படுகிறது.

மனிதர்கள் அனைவரும் நாகரிகத்தின் பங்காளிகள் என்பதை உறுதியாக நம்பும் சவூதி அரேபியா, சர்வதேச ரீதியான நாகரீக செயற்திட்டங்களை கட்டமைக்க முனைகிறது. உலக முஸ்லிம்களின் பிரச்சினைகளை இராஜதந்திர, அரசியல் ரீதியாக துல்லியமான முறையில் அணுகி அவற்றுக்கான தீர்வுகளையும் இந்நாடு பெற்றுக் கொடுத்து வருகின்றது. சவூதி அரேபியா நடுநிலையான போக்கைக் கொண்ட நாடு என்பதற்கான மற்றுமொரு சான்று, சகிப்புத்தன்மை, சகவாழ்வு, வெறுப்புப்பேச்சு மற்றும் ஆக்கிரமிப்பு போன்றவற்றை நிராகரிக்கும் விதிகளை உள்ளடக்கிய, சவூதி அரேபியாவின் 2030 விஷனுக்கு ஏற்றவகையில் அரச அமைச்சகங்களின் செயற்பாடுகள் அமைந்திருப்பதாகும்.

சுற்றுலாத்துறை அமைச்சானது மொழி, கலாசாரம் ஆகியவற்றால் வேறுபட்ட சுற்றுலாப் பயணிகளுக்கு, நாகரிகமான, மனிதநேய தொடர்புகளை கட்டமைக்கும் வகையில் தனது நாட்டின் வாயில்களை திறந்து கொடுத்துள்ளது.

பொதுநலனைக் கருத்தில் கொண்டு மற்ற நாடுகளில் கூட தொழில் துறை அமைச்சு முதலீடு செய்வதுடன் வர்த்தக ரீதியான தொடர்புகளையும் பாரியளவில் உருவாக்கியுள்ளது.

உலக அளவில் சவுதி அரேபியா இரண்டாவது முதலீட்டு நிதியத்தை கொண்டிருப்பதன் மூலமாகவும் உலகெங்கிலுமுள்ள 20 வலுவான பொருளாதாரமிக்க நாடுகளில் ஒன்றாக திகழ்வதன் மூலமாகவும் G20 நாடுகளில் அங்கம் வகிக்கிறது. சவூதி சுகாதார அமைச்சகம் மனிதகுலத்திற்கு வழங்குகின்ற மனிதாபிமான சேவைகள் அதிகம். குறிப்பாக கொரோனா தொற்றின் போது, இரண்டு புனித மசூதிகளின் சேவகர் மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களால் எவ்வித பாரபட்சமும் இன்றி மக்கள் அனைவருக்கும் பாரிய சுகாதார சேவை வழங்கப்பட்டது. மனிதநேயம், நடுநிலைப் போக்கு, சகிப்புத்தன்மை போன்றவற்றை சவூதி அரேபியா தனது முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ளது.

மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களால் நிறுவப்பட்டது முதல் இன்றுவரை சவூதி அரேபியா இஸ்லாம் வலியுறுத்தும் நடுநிலை சிந்தனையை கடைப்பிடித்து வருவதோடு வன்முறை மற்றும் தீவிரவாதத்தை நிராகரித்தும் வருகின்றது.



அபூ அபீஃப்ஃ முஜாஹித் சுபைர் (விரிவுரையாளர்)
நத்வதுல் உலமா
அரபுக் கல்லூரி, மூதூர்.



# அல்-குர்ஆன் ஒளியில் மனித வாழ்வு

'என்னுடைய சமூகத்தாரே! இவ்வுலக வாழ்க்கையெல்லாம் அற்ப சுகம்தான். அன்றியும் நிச்சயமாக, மறுமையோ அதுதான் (என்றென்றுமிருக்கும்) நிலையான வீடு. (அல் குர்ஆன் 40:39)

ஆசைகளும், பேராசைகளும் மனிதனை அழிக்கும் உயிர்க்கொல்லியாகும். இதுமட்டுமின்றி பாவங்களின் முதல் காரணகர்த்தாவும் இவையே. அதன் நிழல்களைக்கூட அணுகத் தடை செய்கிறது இஸ்லாம். இந்த வாழ்க்கை என்பது பயணம்தான், யாரும் இவ்வுலகில் தங்கி வாழ்பவர் அல்ல. வழிப்போக்கன் போன்று சில காலம் தங்கி மறுபடியும் மறுமை நோக்கி பயணிப்பதுதான் நம் வாழ்வின் நோக்கமாகும்.

இம்மை வாழ்வை விட மறுமை வாழ்வு நிலையானது என்கிறது இஸ்லாம். மறுமை வாழ்விற்கான முன்னோட்டம்தான் இவ்வாழ்க்கை. இது, நிரந்தரமற்றது என்பதில் உறுதியாக இருக்கிறது இஸ்லாம். இதனை



குர்ஆன் மற்றும் நபிமொழிகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் 'உலகில் நீ (தாய் நாடு அல்லது சொந்த ஊர் அல்லாத ஓரிடத்தில் வாழும்) ஓர் அந்நியனைப் போல் அல்லது ஒரு வழிப்போக்கனைப் போல் வாழ்வாயாக!' மண்ணறைவாசிகளை போன்று உன்னை நினைத்துக்கொள். உமரின் மகனே! நீ காலைப் பொழுதை அடைந்தால் மாலையை எதிர்பார்க்காதே. நீ மாலையை அடைந்தால் காலையை எதிர்பார்க்காதே. நோயின் பாதிப்புகளுக்கு முன்னால் ஆரோக்கியத்தையும், மரணத்தைச் சந்திப்பதற்காக வாழ்வையும் பயன்படுத்திக் கொள். ஓ அப்துல்லாஹ், நாளை உன் நிலை என்ன என்பது நீ அறியமாட்டாய்' என்று கூறியுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி)

உலகத்தின் மையக்கரு என்ன என்பதை இந்நபிமொழி தெள்ளத்தெளிவாக எடுத்தியம்புகிறது. இதனைப் புரிந்து கொண்டோருக்கு அமைதியான நதியில் மிதக்கும் இலை போன்று வாழ்க்கை அமையும். இந்த உலகத்தின் சாராம்சத்தை அறிய முற்படாமல் மன இச்சைக்கு அடிமையானால், அலையில் சிக்கிய படகு போல் நிம்மதியின் கயிறு அறுந்து நிறம் மாறிப்போகும்.

"அவர்கள் இந்த உலக வாழ்விலிருந்து (அதன்) வெளித்தோற்றத்தையே அறிகிறார்கள். ஆனால் அவர்கள் மறுமையைப் பற்றி அலட்சியமாக இருக்கிறார்கள்". (அல் குர்ஆன் 30:7.)

இந்த உலகம் வெறும் அலங்காரம் என்பது, வாழும் காலத்தில் நமக்கு புலப்படாது. மரணிக்கும் நேரத்தில் முழுமையாகப் புலப்படும். அப்போது அது பயன் தராது.

அறிந்து கொள்ளுங்கள், "நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும். மேலும் (அது) உங்களிடையே பெருமையடித்துக் கொள்வதும், பொருள்களையும், சந்ததிகளையும் பெருக்குவதுமேயாகும். (இது) மழையின் உதாரணத்துக்கு ஒப்பாகும். (அதாவது) அது முளைப்பிக்கும் பயிர் விவசாயிகளை ஆனந்தப்படுத்துகிறது. ஆனால், சீக்கிரமே அது உலர்ந்து மஞ்சள் நிறம் ஆவதை நீர் காண்கின்றீர். பின்னர் அது கூளமாகி விடுகிறது. (உலக வாழ்வும் இத்தகையதே. எனவே உலக வாழ்வில் மயங்கியோருக்கு) மறுமையில் கடுமையான வேதனையுண்டு. (முஃமின்களுக்கு) அல்லாஹ்வின் மன்னிப்பும், அவன் பொருத்தமும் உண்டு. ஆகவே, இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் சொற்ப சுகமே தவிர (வேறு) இல்லை''. (அல் குர்ஆன் 57:20)

பிறப்புக்கும், மரணத்திற்கும் மத்தியில் உள்ள பயணமே வாழ்க்கை. தீமையான காரியங்களை விட்டு நாம் விலகி இருக்க வேண்டும். இங்கு எதுவும் நிரந்தரமில்லை என்பதை அறிந்து கொள்ளும் போது இம்மை மறுமை வாழ்வு சந்தோஷங்கள் நிறைந்ததாக அமையும்.

அப்துல் ரஹ்மான்...

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# உண்மை பேசுதலின் சிறப்பு

எத்தனை சோதனைகள் வந்த போதிலும் உண்மை பேச வேண்டும். இதை திருக்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது. இறையச்சம் மிக்க மனிதனின் அன்றாட வாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்று அல் குர்ஆனும், நபிமொழிகளும் விரிவாக எடுத்தியம்பியுள்ளன.

ஒரு மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான நற்குணம் உண்மை பேசுதலாகும். சொல்லிலும், செயலிலும் உண்மையாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

இஸ்லாத்தின் பார்வையில் உண்மை என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். இதற்கு எடுத்துக் காட்டாக அல்லாஹ் அனுப்பிய இறைத்தூதர்களை எடுத்துக் கொள்ளலாம். முதல் இறைத்தூதர் ஆதம் (அலை) அவர்கள் முதல் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரை வந்த அனைத்து இறைத்தூதர்களும் உண்மையைப் பேசி அதன் வழி நடந்துள்ளார்கள். எத்தனை சோதனைகள் வந்த போதிலும் அவர்கள் உண்மையில் இருந்து தவறவில்லை. இதை திருக்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது.

"(நபியே!) இவ்வேதத்தில் இப்ராஹீமை பற்றியும் (சிறிது) கூறுங்கள். நிச்சயமாக அவர் மிக்க உண்மையானவராகவும் நபியாகவும் இருந்தார்" (19:41)

இத்ரீஸ் (அலை) அவர்கள் குறித்து கூறும்போது, "(நபியே!) இத்ரீஸைப் பற்றியும் இவ்வேதத்தில் (சிறிது) கூறுங்கள். நிச்சயமாக அவர் மிக்க சத்தியவானாகவும் (நம்முடைய) நபியாகவும் இருந்தார்". (19:56)

இறுதித்தூதர் முகம்மது (ஸல்) அவர்களை மக்கள் 'உண்மையாளர்', 'நம்பிக்கையாளர்' என்றே அழைத்தனர். அந்தளவுக்கு இன, மத வேறுபாடு இன்றி அவரது சொல்லும், செயலும் அன்றாட வாழ்க்கையின் அனைத்து செயற்பாடுகளிலும் உண்மையானதாக அமைந்திருந்தது.

இறை நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது, இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், மறுமை மீது நம்பிக்கை கொள்ள வேண்டும், உண்மையாக நடந்து கொள்ள வேண்டும் என்று அல் குர்ஆன் வலியுறுத்தியுள்ளது.

"இறை நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு பயந்துகொள்ளுங்கள், மேலும், (சொல்லிலும் செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள்". (9:119)

ஒரு மனிதன் உண்மையைப்பேசி, உண்மையாக நடந்து கொண்டால் அந்த செயலின் மூலம் அவன் சொர்க்கத்திற்கு செல்ல முடியும் என்று நபிமொழிகள் குறிப்பிடுகின்றன.

'உண்மை நன்மைக்கே வழிகாட்டும். நன்மை சுவனத்திற்கு வழிகாட்டும். ஒரு மனிதன் உண்மையையே பேசி, உண்மையையே தேடினால் அல்லாஹ்வின் ஏட்டில் அவன் ஓர் உண்மையாளன் என்று எழுதப்படுவான். பொய் பாவத்திற்கு வழிகாட்டும். பாவம் நரகிற்கு வழிகாட்டும். ஒரு மனிதன் பொய் பேசும் காலமெல்லாம் அல்லாஹ்வின் ஏட்டில் அவன் ஒரு பொய்யன் என்று எழுதப்படுவான்'. (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

'உண்மை பேசுவதாக எனக்கு உத்தரவாதம் தாருங்கள். சுவனத்தை நான் உங்களுக்கு உத்தரவாதம் தருகின்றேன்'.

(ஆதாரம்: அஹ்மத்).

'உண்மை என்பது மன அமைதியைத் தரும். பொய் என்பது கலக்கத்தைத் தரும்'.

(ஆதாரம்: திர்மதி, அஹ்மத்).

இவ்வாறு உண்மை பேசுதலின் முக்கியத்துவத்தை நபி(ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள்.

மனிதர்களின் இவ்வுலக வாழ்க்கை நிரந்தரம் இல்லாதது. இவ்வாழ்க்கையில் உள்ள உலக இன்பங்களில் மயங்கி பொய்யும், புறமும் பேசி வாழ்வது மறுமை வாழ்வை வீணடித்துவிடும். அந்த பாவச்செயல்களில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

எனவே உண்மையே பேசுவோம், நன்மைகளையே நாடுவோம். எல்லாம் வல்ல இறைவன் நமக்கு அருள்புரியட்டும்.

அபூ முஷீரா...

# பெண்களை கௌரவித்துள்ள மார்க்கம்

இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை நோக்கும் போது அவை தனித்துவமானதாகவும் சிறப்பானதாகவும் இருப்பதை அவதானிக்கலாம். இஸ்லாம் ஒரு போதும் பெண்களை இழிவாகப் பேசியதுமில்லை. ஆண்களுக்குக் களிப்பூட்டும் சந்தைப் பொருளாகவும் பெண்களை ஆக்கி வைக்கவுமில்லை.

மாறாக ஆண்களுக்குரிய அதே கண்ணியம், மரியாதை, மாண்பு கொண்டு பெண்களும் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தை வழங்கியுள்ளது இஸ்லாம். இஸ்லாமிய வழிகாட்டல்களில் தவறுவிடும் ஆண்களை கண்டிக்கும் இஸ்லாம், மாற்று நடவடிக்கைகள் மூலம் பெண்களைப் பாதுகாக்கவும் ஆக்கபூர்வமான திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.



அல்லாஹ் திருக்குர்ஆனில், **'ஆணாயினும் பெண்ணாயினும் எவர் இறைநம்பிக்கை கொண்டவராய் இருக்கும் நிலையில் நற்செயல் புரிகின்றாரோ அவரை (இவ்வுலகில்) தூய வாழ்க்கை வாழச் செய்வோம். (மறுமையிலும்) அத்தகையோருக்கு அவர்களின் உன்னதமான செயல்களுக்கு ஏற்ப நாம் கூலி வழங்குவோம்.' (அல் குர்ஆன் 16:97)** என்று குறிப்பிட்டுள்ளான்.

இஸ்லாத்தில் திருமணம் ஓர் இறை வணக்கமாகும். அது பாவங்களிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்கக்கூடியதாகும். திருமண வாழ்க்கையில் பெண்களை அடிமைப்படுத்துவதற்கோ எவ்வித காரணமுமின்றி அவளை விவாகரத்து செய்வதற்கோ இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை.

இஸ்லாத்தின் பார்வையில் ஆண்களும் பெண்களும் சமமானவர்கள். எவர் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நற்கருமமாற்றி ஒழுக்கமான வாழ்க்கை வாழ்கிறாரோ அவரே உயர்ந்தவராவார். மேலும் பெண்களை இழிவாக நோக்கியவர்களை இஸ்லாம் கண்டித்துள்ளதோடு அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்தையும் வழங்கியுள்ளது. அல்லாஹ் தூய பெண்களைத் தூற்றுவதை வன்மையாகக் கண்டித்துள்ளான்.

**'எவர்கள் கற்புடைய பெண்கள் மீது அவதூறு சொல்லி பின்னர் நான்கு சாட்சிகளை கொண்டு வரவில்லையோ அவர்களுக்கு எண்பது சாட்டையடி கொடுங்கள். இனி அவர்கள் கூறும் சாட்சியத்தை என்றைக்குமே ஏற்றுக் கொள்ளாதீர்கள். மேலும் அவர்களே தீயவர்கள்' (அல்குர்ஆன் 24:4)**

**'கற்புடைய கள்ளங்கபடமற்ற இறைநம்பிக்கை கொண்ட பெண்கள் மீது எவர்கள் அவதூறு கூறுகின்றார்களோ அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் சபிக்கப் பட்டவர்கள். அவர்களுக்குக் கடும் வேதனையும் இருக்கிறது'**

**(அல் குர்ஆன் 24:23).**

மேலும் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'தாயின் பாதத்தடியில் பிள்ளையின் சுவர்க்கம் இருக்கிறது' என்று குறிப்பிட்டதாக அப்துல்லாஹ் அம்ருபின் ஆஸ் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

(நபிமொழி)

அல்லாஹ்வினதும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களினதும் கூற்றுகள் இஸ்லாம் பெண் இனத்துக்கு வழங்கியுள்ள அந்தஸ்தை தெளிவுபடுத்துகிறது. மேலும் குடும்ப வாழ்க்கையிலும் கூட பெண்ணின் உரிமையையோ, சுதந்திரத்தையோ பறிப்பதற்கு இஸ்லாத்தில் அனுமதி கிடையாது. திருமணம் முடித்தல், விவாகரத்து பெறுதல், மறுமணம் செய்தல் போன்ற சகல விடயங்களிலும் பெண்களுக்குச் சமமான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

'வளர்ந்ததொரு பெண் பிள்ளையிடம் அவளது திருமணத்திற்கு அனுமதி கேட்க வேண்டும். அவள் மௌனமாக இருந்தால் அதுவே அனுமதியாகும். அவள் இணங்காவிட்டால் அவள் மீது நிர்ப்பந்தம் கூடாது.' என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: திர்மிதீ)

**'மேலும் கணவன், மனைவிக்கிடையே உறவு முறியுமோ என அஞ்சினால் கணவனின் உறவினரிலிருந்து ஒரு நடுவரை நியமியுங்கள். இவ்விருவரும் உறவைச் சீர்திருத்த நாடினால் அல்லாஹ்வும், அவ்விருவருக்குமிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவான்'.**

**(அல் குர்ஆன் 4:36)**

மேலும் இஸ்லாத்தின் மற்றொரு சிறப்பம்சம் யாதெனில் அது பெண்களுக்கான மறுமணத்தை அங்கீகரித்து இருப்பதுதான்.

சட்டபடி விவாகரத்தான பெண்களுக்கும், கணவர் மரணிப்பதன் மூலம் விதவைகளான பெண்களுக்கும் இஸ்லாத்தில் மறுவாழ்வு உண்டு. அத்தகைய பெண்கள் மறுமணம் செய்வதற்கு பூரண உரிமை வழங்கப்பட்டுள்ளது.

**'நீங்கள் பெண்களை விவாகரத்துச் செய்து அவர்கள் தங்கள் தவணையைப் பூர்த்தியாக்கினால் அவர்கள் தங்களுக்குரிய துணைவர்களை நேர்மையான முறையிலும் பரஸ்பர பொருத்தத்தின் அடிப்படையிலும் திருமணம் செய்து கொள்ள விரும்பினால் அவர்களை நீங்கள் தடுக்காதீர்கள்' (அல் குர்ஆன் 2:32)**

இஸ்லாம் பெண்களுக்கு அளித்துள்ள இந்த கண்ணியம், மதிப்பு, உரிமைகள் எதுவும் அவள் விடுதலைப் போராட்டம் நடத்திப் பெற்றதில்லை. மாறாக 1400 ஆண்டுகளுக்கு முன்னர் அல் குர்ஆனின் கட்டளைகள் மற்றும் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களின் மூலம் பெற்றுக் கொண்டவையாகும்.

கலாபூஷணம் யாழ். அஸீம்...

# இறையருளைப் பெற...

தான தர்மங்கள் செய்வது குறித்து இஸ்லாம் அதிகம் வலியுறுத்தியுள்ளது. ஒருவர் தன்னிடம் உள்ள செல்வத்தில் இருந்து `ஸக்காத்' வழங்குவதை கட்டாயமாக்கியுள்ள இஸ்லாம் ஸதகாவையும் ஊக்குவித்துள்ளது. ஒவ்வொரு இறைவிசுவாசியும் தனது வருமானம் மற்றும் சொத்துக்களை கணக்கிட்டு அதற்கு ஏற்ப பணமாகவோ, பொருளாகவோ, தானியமாகவோ ஸக்காத் வழங்குமாறு கட்டளையிட்டுள்ளது.

தர்மம் செய்வதன் அவசியத்தை அல் குர்ஆன் பல்வேறு இடங்களில் எடுத்தியம்பியுள்ளது. பல நபிமொழிகளும் தர்மம் செய்வதன் மூலம் கிடைக்கப்பெறும் பலன்களை பட்டியல் இட்டுள்ளது.

`தர்மம் செய்வதானது ஒரு மனிதனின் பாவத்தை அழித்து விடுகிறது' என்று கூறியுள்ள நபி (ஸல்) அவர்கள் தர்மத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உள்ளார்கள்.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள், `தண்ணீர் நெருப்பை அழிப்பது போன்று தர்மம் பாவங்களை அழித்து விடுகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: இப்னு மாஜா, அஹ்மது, திர்மிதி)

மற்றொரு தடவை, 'ஒரு பேரீத்தம் பழத்தின் ஒரு பகுதியைத் தர்மம் செய்தாயினும் நரகத்தைவிட்டு உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதுவும் உங்களுக்கு கிடைக்கவில்லை என்றால், நல்ல வார்த்தைகளை பேசுவதின் மூலமாவது நரகத்திலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்றும் அன்னார் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழிகள் தானதர்மத்தின் சிறப்பையும் மகத்துவத்தையும் எடுத்தியம்பக்கூடியனவாக உள்ளன.

மேலும் தர்மம் செய்வது வெளிப்படையாக இருக்க வேண்டுமா? அல்லது இரகசியமாக இருக்க வேண்டுமா? என்பது குறித்தும் அல் குர்ஆன் எடுத்துக்கூறியுள்ளது.

"தான தர்மங்களை நீங்கள் வெளிப்படையாகச் செய்தால் அதுவும் நல்லதே. ஏனெனில் அவ்வாறு செய்யப் பிறரையும் அது தூண்டும். எனினும் அவற்றை மறைத்து ஏழைஎளியோர்க்கு அவை கிடைக்கும்படிச் செய்தால் அது உங்களுக்கு இன்னும் நல்லது. அது உங்களுடைய பாவங்களையும் நீக்கும். நீங்கள் செய்வதை எல்லாம் அல்லாஹ் நன்கறிந்தவனாகவே இருக்கின்றான். (அல் குர்ஆன் 2:271).



இதேவேளை நபி (ஸல்) அவர்கள், ``இறைவனின் நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்த (மறுமை) நாளில், அல்லாஹ் தன் நிழலில் ஏழு நபர்களுக்கு இடம் அளிப்பான். அவர்களில் ஒருவர் தன் வலக்கை செய்யும் தர்மத்தை தன் இடக்கை அறியாதவாறு இரகசியமாக தர்மம் செய்தவர் ஆவார்'' என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

அதேநேரம் தர்மம் செய்வது என்பது நமக்கு தேவையற்றவற்றையும் நாம் பயன் படுத்தாதவற்றையும் பழைய பொருட்களையும் கொடுப்பது அல்ல. நாம் நேசிக்கும் பொருட்களில் இருந்து வழங்குவது தான் தர்மங்களில் சிறந்தது ஆகும். இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் வழங்கியுள்ள இந்த அறிவுரை நல்ல எடுத்துக்காட்டாகும்.

நபித்தோழர்களில் ஒருவரான அபூ தல்ஹா (ரழி) அதிக வசதி படைத்தவராக இருந்தார். அவருக்கு பேரீச்ச மரத் தோட்டங்கள் அதிகம் இருந்தன. அவரின் செல்வங்களில் பைருஹா என்ற தோட்டமே அவருக்கு மிகவும் விருப்பமானதாக இருந்தது. இவ்வாறான சூழலில்

'நீங்கள் நேசிக்கும் பொருட்களில் இருந்து தானம் செய்யாத வரை நீங்கள் நன்மையை அடையவே மாட்டீர்கள்' என்ற (அல் குர்ஆன் 3:92) இறைவசனம் அருளப்பட்டதும், அபூ தல்ஹா (ரழி), நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ``இறைத்தூதர் அவர்களே, 'நீங்கள் நேசிக்கும் பொருட்களிலிருந்து தர்மம் செய்யாதவரை நீங்கள் நன்மையைப் பெறவே மாட்டீர்கள்' என அல்லாஹ் கூறுகிறான். என் செல்வங்களில் நான் மிகவும் நேசிக்கும் பொருள் பைருஹா என்னும் தோட்டமேயாகும். அதை அல்லாஹ்விற்காக தர்மம் செய்ய விரும்புகிறேன்'' எனக்கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், இதை அவரது உறவினர்களுக்கு கொடுக்குமாறு தெரிவித்தார். அபூ தல்ஹா (ரழி) அவர்கள் இதை ஏற்றுக்கொண்டு தன் தோட்டத்தை தம் நெருங்கிய உறவினருக்கும், தம் தந்தையுடன் பிறந்தவரின் பிள்ளைகளுக்கும் பங்கிட்டு வழங்கினார்.

(ஆதாரம்: புஹாரி)

தர்மம் செய்வதன் முக்கியத்துவம் குறித்து மற்றொரு நபி மொழி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது. `தர்மத்தில் சிறந்தது எது?' என மக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வினவ, `குறைந்த செல்வமே உள்ளவர் அதிலிருந்து தர்மம் செய்வது என்றார்கள். அத்தோடு 'நீங்கள் உங்கள் தர்மத்தை உங்கள் வீட்டாரிலிருந்து தொடங்குங்கள்' என்றும் அன்னார் கூறினார்கள்.

(ஆதாரம்: அபூதாவூத், அஹ்மத்).

`தர்மம் செய்வதன் விளைவாக செல்வத்தில் எதுவும் குறைவடையாது. அடியான் மன்னிப்புக் கோருவதால் அல்லாஹ் அவனுடைய மதிப்பை மேலும் அதிகப்படுத்தவே செய்கிறான். அல்லாஹ்வுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொண்ட எந்த மனிதனையும் அல்லாஹ் உயர்த்தாமல் இருக்க மாட்டான்'' எனவும் நபி (ஸல்) கூறினார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்).

எனவே நாம் விரும்பிய பொருட்களில் இருந்து மனமகிழ்வுடன் தர்மம் செய்வோம், இறையருள் பெறுவோம்.


அம்மார்...

# இன்றைய பலன்கள்

**( 27. 12. 2023 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)






**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.



**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.



**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.



**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.



**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.



**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.



**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.



**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.



**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.



**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

## பாமர மக்கள் மீது... (03ஆம் பக்க தொடர்ச்சி)

இவர் பாமர மக்களுக்கு விருந்தோம்பல் செய்வதில் ஈடு இணையற்றவர். இவருடைய இழப்பு தமிழக மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

நடிகர் விஜயகாந்த்தை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், ரசிகர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்".என தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## தீர்வு காண முயற்சித்தால்... (03ஆம் பக்க தொடர்ச்சி)

"நீதித்துறை வழங்கிய தீர்ப்புகளின் படி அரசாங்கம் செயல்பட்டால் பொருளாதார நெருக்கடி போன்ற பிரச்சினைகளை தீர்க்க நேர்மையான முயற்சி எடுக்கப்பட்டால், அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றுவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை" என்று கர்தினால் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிக்குப் பிறகு செய்தியாளர்களிடம் கூறினார். "இந்த அரசாங்கம் நீதித்துறை வழங்கிய பல தீர்ப்புகளை புறக்கணித்துள்ளது," என்று அவர் மேலும் கூறினார்.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக அந்தந்த அரசாங்கத்தை கர்தினால் விமர்சித்துள்ளார். முந்தைய நல்லாட்சியானது தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதாகவும் தற்போதைய ஆட்சி தாக்குதலைத் திட்டமிட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தத் தவறியதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

## கம்பஹா பகுதியில் மேலும்...

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சுகவீனமுற்ற பெண் ஒருவர் கம்பஹா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அதனையடுத்து அவரிடம் மேற்கொள்ளப்பட்ட பி. சி .ஆர் பரிசோதனையில் கொரோனா நியூமோனியாவே அந்த மரணத்துக்கான காரணம் என்பது தெரியவந்துள்ளதாகவும் அந்த வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யக்கலைக்கு அண்மித்த பிரதேசத்தை வசிப்பிடமாக கொண்ட 63 வயது பெண் ஒருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## கேரளாவிலுள்ள J N 1 தொற்று...

பொதுச் சுகாதாரத் துறை பணிப்பாளர் டொக்டர் செல்வவிநாயகம் விளக்கமளித்திருந்தார். இந்த நிலையில், கோவை புளியங்குளத்தில் காய்ச்சல் பாதிப்பு இருந்த நபரை பரிசோதனை செய்ததில் அவருக்கு ஜே.என்.1 வைரஸ் தொற்று பாதிப்பு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஜே.என்.1 தொற்றால் பாதிக்கப்பட்ட நபர் குணமடைந்ததை அடுத்து வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 529 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இதனால் நாடு முழுவதும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,093 ஆக அதிகரித்துள்ளது.

## மண்சரிவு, மரங்கள் முறிவால்...

பிரதான வீதிகளில் மண்சரிவு மற்றும் மரங்கள் முறிந்து வீழ்த்தமையினால் போக்குவரத்து பாதிப்படைந்துள்ளதாக பதுளை அனார்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மண்மேடு சரிந்து வீழ்ந்ததால் பதுளை – தல்தென வீதியிலுள்ள வீட்டொன்று சேதமடைந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பதுளை – மஹியங்கனை வீதியில் பதுளையிலிருந்து 07 ஆம் கட்டை வரையிலான பகுதியில் இடைக்கிடை மண்மேடு சரிந்து வீழ்த்துள்ளமையினாலும் மரங்கள் முறிந்து வீழ்ந்தமையினாலும் அந்த வீதியின் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைதுவ மத்திய நிலையம் தெரிவிந்துள்ளது.

நுவரெலியா கந்தபளை பகுதியில் அதிக தாழ் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதுடன், பல ஏக்கர் விவசாய நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

புதன்கிழமை (27) இரவு பெய்த கடும் மழை காரணமாக உடப்புசல்லாவ – நுவரெலியா ஊடான போக்குவரத்து தடைப்பட்டது.

## கஞ்சா, ஐஸ்,ஹெரோயினுடன்...

மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், போதைப்பொருளுக்கு அடிமையான 37 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# விஜயகாந்தின் மறைவு பேரதிர்ச்சியை தருகிறது

**அமைச்சர் ஜீவன் தொண்டமான்**

" மக்கள் நலமே தன் பலம் எனக் கருதி மனித நேயத்துக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட்ட தேதிமுக நிறுவுனர் கேப்டன் விஜயகாந்தின் மறைவு பேரதிர்ச்சியையும், பெரும் வேதனையும் அளிக்கின்றது" என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, " சுகயீனமுற்றிருந்த தேதிமுக தலைவர் கேப்டன் விஜயகாந்த் விரைவில் குணமடைந்து வீடு திரும்புவார், மக்கள் சேவையை புத்தெழுச்சியுடன் ஆரம்பிப்பார் என்றல்லாவா எதிர்பார்த்து காத்திருந்தோம். அவரின் நலனுக்காக இறைவனை பிரார்த்தித்தோம். ஆனால் கால சக்கரம் அவரை தன்னிடம் அழைத்துக் கொண்டுள்ளது. விஜயகாந்தை பற்றி குறிப்பிடுவதாக இருந்தால் அவர் ஒரு புதிய வரலாறு. ஓரிரு வார்த்தைகளில் எடுத்துக்கூற முடியாது. மறைந்த எமது தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுடன் நட்பில் இருந்தவர். இலங்கை மக்களுக்காக குரல் கொடுத்தவரெனவும் அவர் தனது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

# நடிகர் விஜயகாந்தின் மறைவு கவலையளிக்கிறது

**வடிவேல் சுரேஷ் எம்.பி**

நடிகர் விஜயகாந்தின் மறைவுக்கு பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரமான வடிவேல் சுரேஷ் இரங்கல் தெரிவித்துள்ளார். தேசிய முற்போக்குத் திராவிட கழகத்தின் தலைவர், தமிழ் சினிமாவின் தனித்துவம் மிக்க நடிகர், கேப்டன் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அவர்களின் மறைவுச் செய்தி மிகுந்த துயரத்தைத் தருகிறது. ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் இதன் முழு அர்த்தம் உணர்ந்து தன் ஒவ்வொரு செயலிலும் மனிதநேயத்தைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்.சினிமா, அரசியல் இரண்டு தளங்களிலுமே தடம் பதித்த புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் என்றும் மக்கள் மனதில் நிலைத்திருப்பார். அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கும் தமிழக உறவுகளுக்கும் மலையக மக்கள் சார்பில் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# அபுநாநா" புகழ் கே.எம்.எம். நசீர் நேற்று காலமானார்



*"அபுநாநா" புகழ் மேடை நாடக மற்றும் தொலைக் காட்சி நாடக நடிகர்.கே.எம்.எம். நஸீர் நேற்று அதிகாலை இறையடிச் சேர்ந்தார். ஜனாஸா நேற்று மாலை அஸர் தொழுகைக்குப் பின் இல.81/28, சில்வர் ஸ்மித் லேன் கொழும்பு 12 இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மாளிகாவத்தை மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*

# கலைஞர் காலமானார்



கண்டி, மாகியாவ விஜயன் பேண்ட் வாத்திய குழுவின் தலைவரும் இசைக்கலைஞருமான கந்தசாமி பெருமாள் பிரபாகரன் நேற்று காலமானார். இவர், சமூக ஆர்வளர் எம் . தீபனின் மாமானரும் ஆவார் .

## இலங்கையின் ஏற்றுமதி வருமானம்...

திரவியங்கள் மற்றும் மசாலாப் பொருட்கள், பதப்படுத்தப்பட்ட உணவு மற்றும் பானங்கள், கடல் உணவுகள், அலங்கார மீன்கள், காய்கறிகள், பழங்கள், பிற ஏற்றுமதிப் பயிர்கள், பூக்கள் மற்றும் தழைகள், படகு உற்பத்திகள் மற்றும் பெற்றோலியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் ஏற்றுமதி மூலம் இலங்கைக்கு வருமானம் ஈட்ட முடிந்துள்ளது. இலங்கை தயாரிப்புகள் உலகின் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதோடு அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, கனடா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பெல்ஜியம், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், பங்களாதேஷ் மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள் முக்கிய இடம் வகிக்கின்றன.

## யாழ். நகரில் இணைய மோசடி;...

வருகின்றனர். இந்த மோசடியினால் கடந்த வாரம் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவை சேர்ந்த இருவர் 30 இலட்சம் மற்றும் 16 இலட்ச ரூபாயை இழந்து பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்துள்ளனர். கடந்த புதன்கிழமை (27) ஒருவர் 20 இலட்சம் ரூபாயை இழந்துள்ளதாகவும், மற்றையவர் 06 இலட்சம் ரூபாயை இழந்துள்ளதாகவும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

## தேமுதிக தலைவர், நடிகர்...

வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி காலமானார். இறுதிக்கிரியைகள் இன்று 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நடைபெறுகிறது.

தமிழக அரசு சார்பில் முழு மரியாதையுடன் விஜயகாந்தின் உடல் நல்லடக்கம் செய்யப்படுமென தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார். அவரது மறைவு தொடர்பாக மியாட் மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில், “நிமோனியா (நுரையீரல் அழற்சி) காரணமாக அனுமதிக்கப்பட்டு வெண்டிலேட்டர் உதவியுடன் சிகிச்சை பெற்றுவந்த விஜயகாந்துக்கு மருத்துவப் பணியாளர்களின் கடின முயற்சி இருந்தபோதிலும் அவரது உயிர் பிரிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா புதிய திரிபு...

அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

கொரோனா புதிய திரிபு தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என்பதை மீண்டும் வலியுறுத்தியுள்ள அமைச்சர் தடுப்பூசி வேலைத்திட்டம் மூலம் மக்கள் மத்தியில் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி காணப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவிய கொரோனா தொற்று பரவல் காலங்களில் முகக்கவசத்தை அணிவதன் மூலம் சுவாசம் தொடர்பான பல நோய்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள மக்களால் முடிந்துள்ளது என்பதையும் அமைச்சர் சுட்டி காட்டியுள்ளார்.

அவ்வாறு முகக் கவசத்தை மக்கள் கண்டிப்பாக அணிந்த காலகட்டத்தில் சுவாசம் தொடர்பான நோய் நாட்டில் கட்டுப்பாட்டுக்குள் காணப்பட்டதாகவும் அந்த வகையில் மீண்டும் முகக் கவசத்தினை அணிவது சிறந்தது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கைத் தமிழர்களின் உள்ளத்தில் வாழ்ந்தவர் நடிகர் விஜயகாந்த்

**ம.ம.மு சிரேஷ்ட உபதலைவர் சதீஷ்குமார்**



புரட்சிக் கலைஞர் கேப்டன் விஜயகாந்தின் திடீர் மறைவு ஆழ்ந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. திரையுலகின் துருவ நட்சத்திரம் மறைந்து விட்டது. ஒரு நல்ல தலைவரை தமிழ் நாடு இழந்து விட்டது என மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர்கள் மீதும், தமிழ் மக்களின் நலன்கள், பாதுகாப்பு, உரிமைகள் தொடர்பாக நீண்ட காலமாக அதீத ஆர்வத்தோடு செயற்பட்டுள்ளார். ஜெயலலிதா அம்மையார் முதலமைச்சராக இருந்த போது அரசியல் கருத்து பேதங்களை கடந்து இலங்கைத் தமிழர்கள் விவகாரம் தொடர்பாக ஐநா சபைக்கு அனுப்புவதற்கான தீர்மானம் கொண்டு வந்தவேளை அது ஏகமனதாக நிறைவேற்றப்படுவதற்கு ஆதரவளித்தார்.

அவரை சந்தித்த போதெல்லாம் வடகிழக்கு மக்களின் உண்மையான நிலைமைகளை கேட்டறிந்து ஆதங்கம் அடைவார். மலைநாட்டு பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் சட்டசபையில் பேசியிருக்கிறார். அவரின் இதயத்தில் எனக்கும் ஒரு இடம் இருந்ததில் பெருமை அடைகிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

**செலசினே தலைவர்**

# ஹரித் குணவர்த்தன நேற்று காலமானார்



*செலசினே தொலைக்காட்சியின் தலைவர் ஹரித் குணவர்த்தன நேற்று (28) காலை காலமானார். சிரேஷ்ட ஊடகவியலாளரும் விளம்பர வடிவமைப்பாளருமான ஹரித் குணவர்த்தன பொரலஸ்கமுவ பிரதேசத்தில் நேற்றுக் காலை தனது அலுவலகத்துக்கு வந்து கொண்டிருந்த போது திடீர் சுகயீனம் காரணமாக காலமானார்.*

*இறக்கும் போது 55 வயதான ஹரித் குணவர்த்தன கொழும்பு ஆனந்த கல்லூரியின் முன்னாள் மாணவரும், கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டதாரியும் ஆவார். திவயின் பத்திரிகை உட்பட பல பத்திரிகைகளுக்கு கிங்பனாட், அட்டமாசா மற்றும் அட்வர்டைசிங் வேர்ல்ட் உள்ளிட்ட பல பெயலரில் பத்தி எழுத்தாளராக அவர் பங்களிப்பு செய்துள்ளமை மறக்கமுடியாதவை.*

*அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரதிப் பொது முகாமையாளராகவும் கடமையாற்றிய இவர், பல நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்துள்ளார். அன்னாரது இறுதிக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.*

## சதொச ஊடாக விற்பனைக்கு...

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில மாதங்களாக முட்டையின் விலை 60 முதல் 70 ரூபா வரையில் விற்பனையாகி வருவதாக பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர். பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்து சதொச விற்பனை நிலையங்கள் மூலமாக குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

இதனால் பண்டிகைக்காலத்தில் மக்கள் தட்டுப்பாடின்றி முட்டைகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாககாணப்பட்டது.சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக (28) முதல் முட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு...

அரச சேவையின் அனைத்து மட்டங்களிலும் ஊழலை தடுப்பதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது.

அரச சேவையின் தார்மீக விழுமியங்கள் மற்றும் நல்இருப்பை பாதுகாத்து, அனைத்து வகையான ஊழல்களையும் தடுப்பதற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தமது நீண்டகால அனுபவத்தைப் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஊழலுக்கு எதிராக போராடும் இலங்கையின் பொறுப்புக்கூறலை, உறுதிசெய்யும் முன்னணி நிறுவனமாக, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு செயற்படுகிறது.

## ‘யுக்திய’ சுற்றி வளைப்புகளால்...

02 ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தைந்துக்கும் மேற்பட்ட புதிய கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், நீதி நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நாட்டின் சிறைச்சாலைகளில் இருபத்தெட்டாயிரம் கைதிகள் இருந்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்திருந்தார். பொதுவாக இந்நாட்டின் சிறைகளில் சுமார் 11,000 பேர் தடுத்து வைக்கப்படலாம். இதேவேளை, பெண் கைதிகளின் எண்ணிக்கையும் 800 இருந்து 1,124ஆக அதிகரித்துள்ளது.

## ச ரி க ம பாவின் வெற்றியாளர்...

குவிந்திருந்து வரவேற்றனர். விமான நிலையத்திலிருந்து வரவேற்று வாகன தொடரணி மூலம் அரியாலை பகுதிக்கு அழைத்து சென்று, அங்கு கௌரவிப்பு நிகழ்வுகளும் அப்பிரதேச மக்களால் நடத்தப்பட்டமை விசேட அம்சமாகும். இந்நிகழ்வில் பிரதேச மக்கள் உட்பட பெருந்திரளனானோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் இருவர் மாணவரிடம்...

தனியார் வகுப்பு நடத்தும் பேரில், பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டு வருவதாகக் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளதன் அடிப்படையில், உடன் விசாரணைகளை ஆரம்பித்து கல்வி அமைச்சுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு பணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வட பகுதியின் அபிவிருத்திக்கு...

இக்கலந்துரையாடலில் பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம், தலை மன்னார் துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் அபிவிருத்திப் பணிகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கையின் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறையில் இந்திய முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கு தற்போதைய அரசாங்கம் தயாராக இருப்பதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இங்கு தெரிவித்தார்.

திருகோணமலை துறைமுகப் பகுதியில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு குறிப்பாக கப்பல் மற்றும் சிறிய படகுகளை நிர்மாணிப்பதற்கு இடவசதியை வழங்க முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு...

மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமென ஜனாதிபதி மற்றும் தேர்தல் ஆணையாளரினாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் தென்னிலங்கையில் இருந்து வந்த ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களித்து வந்த போதிலும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை என்பது தான் வரலாறாக இருக்கின்றது.

கடந்த காலத்தில் ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து தீர்வு காணப்பட்டிருக்குமாக இருந்தால் நாடு இன்று பாரிய பொருளாதார நெருக்கடி கூட ஏற்பட்டிருக்காது தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்காது தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய யுத்தம் தொடுக்கப்பட்டிருந்தது.

தற்போது கூட அரசியலமைப்பில் இருக்கக்கூடிய 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவதாக பேச்சுவார்தர்தைகளை நடத்திய ஜனாதிபதி வருகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் வரும் ஒரு வருடத்திற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை பற்றி ஆராயலாம் என தற்போது கூறியுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பாக இனிமேல் 2026 ஆம் ஆண்டு தான் கலந்துரையாடுவோம் என்பதே இதன் அர்த்தமாகும். குறைந்த பட்சம் 13 ஆவது திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காது எல்லாவற்றையும் 2026 ஆம் ஆண்டு வரை ஒத்தி வைத்திருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## யாழ். மாவட்ட வீடமைப்புத் திட்டம்...

மற்றும் வீடமைப்பு அமைச்சின் வீட்டுத்திட்ட பயனாளர் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்களின் முன்னேற்ற நகர்வுகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு ஆராயப்பட்டது. இந்நிலையில் 05 மில்லியனுக்கே வீடு கட்ட முடியாதென குறை கூறிக்கொண்டிருக்கும் மாவட்டமாக யாழ்ப்பாணம் இருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநரும் யாழ் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான திருமதி சாள்ஸ் குற்றம் சாட்டியுள்ளார். குறிப்பாக ஒரு மில்லியன் திட்டத்துக்கு 403 பயனாளரும் 06 இலட்சம் திட்டத்துக்கு 101 பயனாளரும் கோரியுள்ளதாக துறைசார் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதில் ஆறு இலட்சம் திட்டம் என்பது தற்போதைய சூழ் நிலையில் சாத்தியமானதென்று அல்ல. இதனை குறைந்தது பதினைந்து இலட்சமாக உயர்த்தவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் அதுவரை இவ்விரு திட்டங்களுக்கும் அனுமதி வழங்க கூடாதெனவும் வலியுறுத்தப்பட்டது.

# மாந்தை கிழக்கு– துணுக்காய் விவசாயிகள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிப்பு

(ஓமந்தை விசேட நிருபர்)

வெள்ள அனர்த்தத்தினால் முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம், மற்றும் துணுக்காய் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.



வவுனிக்குள நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழான பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகள் வெள்ளத்திற்கு முன்னர் நோய் தாக்கங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் அவற்றிலிருந்து விவசாயத்தை பாதுகாத்த போதிலும் மழை வெள்ளத்தினால் பயிர்கள் அழிவடைந்து நஷ்டத்தை சந்தித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அரசாங்கம் தமக்கான இழப்பீட்டை தந்து உதவ வேண்டுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்குப் பகுதிகளில் 14,590 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் வேளாண்மையை செய்து வருகின்றனர்.

இதேவேளை துணுக்காய் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் இம்முறை 7840 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் வேளாண்மை செய்த போதிலும் 2300 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கி அழிவடைந்திருப்பதாக துணுக்காய் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜயரத்தினம் வசந்தன் தெரிவித்தார்.

இதே வேளை 3800 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கி காணப்பட்டிருந்ததுடன் அழிவடைந்தும் இருப்பதாக பாண்டியன்குளம் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் தனபாலசிங்கம் குணாளன் தெரிவித்தார்.

# யாழ்.முஸ்லிம் சமூக ஜோதி விருது 2023







முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஆர்.எம். இமாம், சமூக மேன்மைக்காக முன்னின்று உழைத்த முன்னாள் பிரதி கல்வி பணிப்பாளரும் சமூகப்பற்றுள்ள கல்வியியலாளருமான எம்.எஸ்.ஏ.எம். முஹ்தார், இலக்கியவாதியும் சிறந்த ஆசிரியரும் வானொலி கலைஞருமான ஏ.ஸி.நஜுமுத்தீன் ஆகிய மூவரினதும் வீடுகளுக்கும் தனித்தனியாக சென்று அவர்களது சேவைகளை பாராட்டி பொன்னாடை அணிவித்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

யாழ். முஸ்லிம் சமூக ஊடக நிர்வாகி கலாபூஷணம் பரீட் இக்பாலின் ஏற்பாட்டில் அகில இலங்கை YMMA பேரவையின் முன்னாள் தேசிய தலைவர் M.S. நேற்று றஹீமின் அனுசரணையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.





சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணிமனையானது முதன் முறையாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வரிதி கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு தேவையான நீர்வழங்கல் திட்டத்தை கடந்த 23 ஆம் திகதி கையளித்தது. அமைப்பின் பிரதானிகளான கலாநிதி எம்.ஏ.சி. மஹ்சூம், ஏ.ஆர். என். அமீர்கான் மற்றும் எம். குபேரலிங்கம் ஆகியோரின் ஏற்பாட்டில் இவ்வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு பிரதேசத்தின் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# தேவாரம் ஓதிய வயோதிபர் மயங்கி வீழ்ந்து மரணம்

(நாகர்கோவில் விஷேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்)

வல்வெட்டித்துறை வேவில் பிள்ளையார் ஆலயத்தில் தேவாரம் ஓதிக்கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஒழுங்கை தோட்டம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் இராசரத்தினம் (வயது 88) என தெரியவருகின்றது.

நேற்று புதன்கிழமை(27) காலை கோவிலில் வசந்த மண்டப பூஜை இடம்பெற்ற போது ஒலிவாங்கியில் தேவாரம் ஓதிக்கொண்டு இருந்துள்ளார்.

அச்சமயம் அவர் திடீரென மயங்கி கீழே விழுந்துள்ளார். உடனடியாக அவரை வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.


## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 07/14/21/26 பிப்ரவரி 2024 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 07/14/21/26 பிப்ரவரி 2024 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/06/13/20 பிப்ரவரி 2024 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/06/13/20 பிப்ரவரி 2024 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 08/15/22/27 பிப்ரவரி 2024 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 08/15/22/27 பிப்ரவரி 2024 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 01/05/12/19 பிப்ரவரி 2024 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

புதன் 2023.12.27

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5341 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,333,264.00
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 2 4 1 6 5 1

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3583 — சீட்டிழுப்பு திகதி 2023.12.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,273,912.96
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 11 32 49 75 — விசேட எழுத்து Z — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 14250

**Mega POWER** — சீட்டிழுப்பு இலக்கம் 1689 — 2023.12.27 — 50347 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.418,875,524.00
ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 15 — வெற்றி இலக்கங்கள் 12 20 34 75
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**Lucky 7 VIP** — திகதி 2023.12.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0167
ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 9 8 2 8 1 0 — L7 எழுத்து A
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.22,093,337.56

**ராசி சுப பலன்** — திகதி 2023.12.27 — சீட்டிழுப்பு இலக்கம் 650 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,339,258.60
வெற்றி இலக்கினம் கடகம் — வெற்றி இலக்கங்கள் 02 24 25 42 — தனயோக இலக்கம் 57896 — நாளுக்கான விதி எண் 07

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1371 — 2023.12.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 127,064,743.84
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 01 05 08 44 — விசேட எழுத்து G — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 47766

## இதய அஞ்சலிகள்



இலங்கை வங்கி ஒட்டுசுட்டான் கிளையில் சேவையாற்றிய எங்களது அன்புமிக்க குழு அங்கத்தவர்

### திரு. பி. மதனகுமார்

மாயக்கை, தம்பசிட்டி, புலோலி மேற்கு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்

அன்னாரின் திடீர் மரணத்தையிட்டு முகாமைத்துவமும் வங்கி ஊழியர்களாகிய நாமும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதிக்கிரியை 2023 டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரகம்பன், மந்திகை இந்து மயானத்தில் நடைபெற்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

**இலங்கை வங்கி**

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இதய அஞ்சலிகள்



இலங்கை வங்கி களுவாஞ்சிக்குடி கிளையில் சேவையாற்றிய எங்களது அன்புமிக்க குழு அங்கத்தவர்

### திரு. கே. துஷாந்தன்

கலைமகள் வீதி, கல்லடி, மட்டக்களப்பு

அன்னாரின் திடீர் மரணத்தையிட்டு முகாமைத்துவமும் வங்கி ஊழியர்களாகிய நாமும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இறுதிக்கிரியைகள் 2023 டிசம்பர் மாதம் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லடி உப்போடை இந்து மயானத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

**இலங்கை வங்கி**

இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# உலகில் 400 மில்லியன் மக்கள் பேசும் மொழியாக அரபு மொழி காணப்படுகிறது

## சீனன்கோட்டை அல்ஹுமைஸராவில் இடம்பெற்ற சர்வதேச அரபு மொழி தின நிகழ்வில் அஷ்ஷெய்க் அரபாத் கரீம்





(அஜ்வாத் பாஸி)

சர்வதேச அரபு மொழி தின விழா பேருவளை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் அதிபர் இப்ராஹீம் தலைமையில் (22) நடைபெற்றது.

இந்நிகழ்வில், கௌரவ பேச்சாளராகக் கலந்து கொண்ட ஜாமியா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி, எம்.ஏ), கல்வி அமைச்சு சர்வதேச அரபு மொழித் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த மகத்தான இந்நிகழ்வு மிகுந்த பாராட்டுக்குரிய அம்சமாகும் என்று குறிப்பிட்டார்.

அரபு மொழியின் சிறப்புக்களை அரபு மொழியில் எடுத்துக் கூறிய அவர், அல்குர்ஆனின் மொழியாக காணப்படும் அரபு மொழி 400 மில்லியனுக்கு அதிகமான மக்கள் பேசும் மொழியாகவும், இருபத்து இரண்டு நாடுகளது முதன்மை மொழியாகவும், ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட, அதிகம் பேசும் ஆறு மொழிகளில் ஒன்றாகவும் விளங்குவதாகக் குறிப்பிட்டார்.

இம்மொழியை கற்பதன் மூலம் நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், இனங்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்தவும், தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவும் பெரிதும் உதவியாக அமையும் என்று







குறிப்பிட்ட அவர், கல்வி அமைச்சு அரபு மொழிப் பாடத்தை பாடசாலை கலைத்திட்டத்தில் இணைத்துள்ளமை பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விடயம் என்றும் கூறினார். இவ்விழாவில் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலை அபிவிருத்திப் பகுதியின் பணிப்பாளர் நிஸாமுதீன், சர்வதேச அரபு தினத்தை இலங்கை அரசு கொண்டாடுவதற்காக மேற்கொண்ட காத்திரமான ஏற்பாடுகளை வெகுவாகப் பாராட்டினார்.

இலங்கை முஸ்லிம்களது முதலாவது குடியிருப்பு பேருவளை பிரதேசத்தில் இடம்பெற்றமை, ஆரம்பப் பள்ளிவாசல் அங்கு அமைக்கப்பட்டமை, பெண்களுக்கான முதலாவது பாடசாலை இப்பிரதேசத்தில் நிறுவப்பட்டமை போன்ற காரணிகள் தேசிய அரபு மொழி தினத்தை பேருவளையில் கொண்டாட தீர்மானித்தமைக்கான காரணிகளாக அமைந்ததாகவும் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா உறுப்பினர்கள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க உறுப்பினர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகள், வை.எம்.எம்.ஏ உறுப்பினர்கள், உலமாக்கள், புத்திஜீவிகள் உட்பட களுத்துறை மாவட்ட பாடசாலை அதிபர்களும் கலந்து கொண்டனர்.

# ரவூப் ஹக்கீம் - ஈரான் தூதுவர் சந்திப்பு





ஈரான் இஸ்லாமியக் குடியரசு அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று, இலங்கை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, அந்நாட்டு தலைநகர் தெஹ்ரானில் கடந்த சனிக்கிழமை (23) நடைபெற்ற பலஸ்தீனம் தொடர்பான பல்நாட்டு அரசியல் உயர்மட்ட ஆலோசனை மாநாட்டில் கலந்து கொண்ட பின்னர், நாடு திரும்பியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கைக்கான ஈரானிய தூதுவர் கலாநிதி அலி ரிஸா டெல்ஹோஷை புதன்கிழமை (27) சந்தித்து அதன் அனுகூலங்கள் குறித்துக் கலந்துரையாடியபோது எடுத்த படம்.

# தர்காநகர் முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் 31ஆம் திகதி மாபெரும் ஒன்றுகூடல்

தர்காநகர், அளுத்கம் வீதிய முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் (தேசிய பாடசாலை) மாணவர்களின் பழைய மாணவர் ஒன்றுகூடல் நாளை மறுதினம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இலவசக்கல்வியின் தந்தை சி.டப்ளியூ.டப்ளியூ. கன்னங்கரா உருவாக்கிய 54 மத்திய மகா வித்தியாலயங்களில், முஸ்லிம்களுக்கான ஒரே முஸ்லிம் பெண்கள் கல்லூரியாக விளங்கும் இப்பாடசாலையின் உருவாக்கத்துக்காக பெரிதும் பங்காற்றிய மர்ஹூமா பின்தாரா காலித்தின் சேவையும் இவ்விடத்தில் நினைவுகூரப்பட உள்ளது. களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ மாணவிகள் பாடவிதான செயற்பாடுகளிலும், இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மட்டம் வரை சாதனைகளை படைத்துள்ளனர்.

இங்கு கற்று வெளியேறிய மாணவிகள் நாட்டின் பல பாகங்களிலும் பல உயர் பதவிகளையும் வகிக்கின்றனர். இக்கல்லூரியில் கல்வி கற்று வெளியேறிய மாணவ மாணவிகளின் கடந்த கால நினைவுகளை மீட்டிப் பார்க்க இந்த ஒன்றுகூடல் பெரிதும் உதவக்கூடியதாக அமையும் என்றும் இங்கு கலைநிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

# கேரள மாநில எர்ணாகுளத்தில் தமிழ்க் கவிதைகள் கருத்தரங்கு





எர்ணாகுளம் தமிழ் ஐக்கிய சங்கம், இனிய நந்தவனம் மாத இதழ், கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ் மற்றும் காவிரி கவித்தமிழ் முற்றம் இணைந்து ஏற்பாடு செய்த கவிதைத்தமிழின் படிநிலை வளர்ச்சியும், செல்நெறிகளும் என்னும் பொருண்மையிலான தேசியக் கருத்தரங்கு 27. 12. 2023 அன்று கேரளா, எர்ணாகுளம் சங்கரானந்தா ஆசிரமத்தில் நடைபெற்றது.

திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிச் செயலர் அருள்முனைவர் அமல் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில், ஆய்வுக்கோவையை அருள்முனைவர் அமல் வெளியிட, கவிஞர் மு.முருகேஷ் பெற்றுக் கொண்டார். கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஜா.சலேத் எழுதிய 'கவிதைத் தமிழின் நோக்கும் போக்கும்' என்னும் நூலை ஐக்கிய சங்கத் தலைவர் ரவீந்திரன் வெளியிட தமிழ்ச்செம்மல் வதிலை பிரபா பெற்றுக் கொண்டார். முனைவர் ரெ.நல்லமுத்து தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கில் பேராசிரியர்கள் தங்கள் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். அன்புத்தோழி ஜெயஸ்ரீ எழுதிய கவிதை நூலை கவிஞர் பல்லவிகுமார் வெளியிட கவிஞர் ம.திருவள்ளுவர் பெற்றுக் கொண்டார்.

மாலையில் நடைபெற்ற இனிய நந்தவனம் இலக்கியச் சங்கம் நிகழ்வில் நந்தவனம் பவுண்டேசன் சார்பில் ஜோ.பிரேமா கிறிஸ்டி, ரெ.நல்லமுத்து, லி.மெர்சி டயானா, வெ.முத்துலட்சுமி ஆகியோருக்கு வெற்றித்தமிழினி விருதும் சி.ஜெயச்சந்திரன், இரா.தமிழ்தாசன், ரெ.நல்லமுத்து ஆகியோருக்கு வெற்றித்தமிழன் விருதும் வழங்கப்பட்டன. இனிய நந்தவனம் மாத இதழ் கேரளச் சிறப்பிதழை கோயர்போர்ட் தலைவர் குப்புராம் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்.

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் முதல்வரும், கவிஞருமான தமிழ்ச்செம்மல் தங்கம் மூர்த்தி கருத்தரங்கில் நிறைவுரையாற்றினார். இவர் உரையாற்றும் போது "பேசப்படும் ஒரு கவிதையை எழுத வேண்டுமானால் ஆயிரக்கணக்கான கவிதைகளை எழுதவேண்டும். மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை எல்லாமே காலத்தின் மாற்றங்கள். இங்கே எல்லோருக்குள்ளும் கவிதை இருக்கிறது. அதை



எழுதுபவர்கள்தான் கவிஞர்களாகிறார்கள்" என்று குறிப்பிட்டார்.

பேராசிரியர்கள் குறிஞ்சி வேந்தன், பெஸ்கி உள்ளிட்டோரும் உரையாற்றினர். பிற்பகல் அமர்வில் இலட்சுமணன் ராமகோடி, அன்புத்தோழி ஜெயஸ்ரீ ஆகியோர் கவிதை அனுபவப் பகிர்வில் பங்குபற்றினர். கவியரங்கில் கவிஞர் இளவரசி, நித்யா கோபாலன், ச.மெ. ஆன்ஸ்டின் ஜோ ஆகியோர் கவிதை பாடினர்.

'கனவைத்திருடும் கனவுகர்' என்ற தலைப்பில் ம.திருவள்ளுவர் சிறப்புரையாற்றினார். முன்னதாக இனிய நந்தவனம் மாத இதழ் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் வரவேற்புரை வழங்கினார். நிறைவில் முனைவர் சலேத் நன்றியுரையாற்றினார். ஆசிரியைகள் பிரேமா கிறிஸ்டி, மெர்சி டயானா, நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார்கள்.

# பலஸ்தீன் நாட்டு விடயத்தில் மேற்கு நாடுகள் இரட்டை வேடம்

## ஈரானில் நடந்த பலஸ்தீன் மாநாட்டில் மு.கா.தலைவர் ஹக்கீம் விசனம்

மேற்கு நாடுகளால் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பதற்கான உரிமையை (R 2 P) பலஸ்தீனத்தைப் பொறுத்தவரை பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலைமையிலேயே இருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஈரானில் நடைபெற்ற பலஸ்தீனை மையப்படுத்தி பல நாடுகள் பங்குபற்றிய உயர்மட்ட ஆலோசனை (அரசியல்) மாநாட்டில் கவலை தெரிவித்தார்.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் தலைநகர் தெஹ்ரானில் கடந்த சனிக்கிழமை(23) நடைபெற்ற பிரஸ்தாப பலஸ்தீனம் தொடர்பான பல் நாட்டு உயர்மட்ட அரசியல் ஆலோசனை மாநாட்டில், அந் நாட்டின் அழைப்பையேற்று, இலங்கை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பங்குபற்றினார். பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் மிலேச்சத்தமான தாக்குதலை வன்மையாகக் கண்டித்தும், நிரந்தர தீர்வுக்கான அவசியம் குறித்தும் அவர் இம்மாநாட்டில் உரையாற்றினார்.



அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

பலஸ்தீனுடைய நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாக இருக்கிறது. எந்தவொரு நாடும் அதன் புவிசார் அரசியல் (Geo Political)நிலைப்பாடுகள் மீது ஏனைய நாடுகள் எவையும் தலையீடு செய்வதை விரும்புவதில்லை.

அவ்வாறிருக்க, மேற்கு நாடுகளால் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பதற்கான உரிமையை (Right to Protect) பயன்படுத்தி தென் சூடானிலும், சிரியாவிலும் வேறு நாடுகள் ஊடுருவின. அதன் உண்மையான நோக்கம் நிறைவேறியதாக இல்லை. ஆனால், பலஸ்தீனத்தை பொறுத்தவரை நாங்கள் அந்த விஷயத்தில் மிகவும் பலவீனமாக இருக்கிறோம் .

இந்த உரிமை(R 2 P) இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனத்தில் பயன்படுத்தப்படவில்லை. மேற்கு நாடுகளின் இரட்டை வேடம் இதுதான் என்றார்.

# மாத்தளையில் கடும் மழை; மரம் முறிந்து வீடு சேதம்

(மாத்தளை சுழற்சி நிருபர்)



மாத்தளை மாவட்டத்தில் பெய்து வரும் மழையுடன் கூடிய காற்றின் காரணமாக இரத்தோட்ட வெரலுகஸ்தன்ன வித்தியாலய வளவில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அருகிலுள்ள சில வீடுகளும் வாகனம் ஒன்றும் பலத்த சேதமடைந்துள்ளன. வெரலுகஸ்தன்ன பாதையின் குறுக்கே இம் மரம் வீழ்துள்ளதால் இவ் வீதியின் வாகன போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

இவ் வீதியில் உடைந்து விழுந்துள்ள மரக்கிளைகளைகளை அகற்றும் பணியில் இரத்தோட்ட பிரதேச செயலகம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


01. கீழே தரப்பட்ட உருக் கூட்டத்தினை மூன்றாகப் பிரிக்கலாம். அவ்வாறு பிரிக்கப்பட்ட சரியான விடையைத் தெரிவு செய்க.






A B C D E F




i. AD, BC, EF ii. AC, BD, EF iii. AF, BE, CD


02. ஒரு கடிகாரத்தில் தற்போது பி.ப 5.00 மணி காட்டுகின்றது. அக்கடிகாரம் இன்னும் 15 மணித்தியாலத்தின் பின் காட்டும் நேரம் என்ன?
i. மு.ப. 3.00 மணி ii. மு.ப. 5.00 மணி iii. பி.ப. 3.00 மணி

03.  இவ்வுருவுக்கு பொருத்தமான உரு எது?

i.  ii.  iii. 

04. செங்கோணம் மட்டும் உள்ள உருவை தெரிவு செய்க.

i.  ii.  iii. 

05. 



இவ்வுருவின் சுற்றளவு யாது?
i. 12 m
ii. 18 m
iii. 28 m


06. ஒரு லீப் வருடத்தில் பெப்ரவரி மாதத்தின் 14ஆம் திகதி புதன்கிழமை எனில் அம்மாதத்தின் கடைசி நாள் என்ன கிழமை?
i. புதன்கிழமை ii. வியாழக்கிழமை iii. வெள்ளிக்கிழமை

07. விழா ஒன்றின் போது நடைபெற்ற நிகழ்ச்சிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை சரியான முறையில் ஒழுங்குபடுத்தினால் காட்டும் விடையானது?
A – பரிசில் வழங்கல் B – வரவேற்புரை
C – அதிபர் உரை D – நன்றியுரை

i. B, D, A, C ii. B, A, C, D iii. B, C, A, D

08. 5 தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் 12m எனில் 8 தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு?
i. 21 m ii. 24 m iii. 28 m


09.  இவ்வுருவிலுள்ள முகங்களின் எண்ணிக்கை இரண்டு ஆகும். இதனை படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு முறிகோட்டின் வழியே வெட்டினால் பெறப்படும் மேற்தளங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 2 ii. 1 iii. 3




10. வட்டத்தின் பெறுமதி யாது?
i. 3 ii. 5 iii. 6

11. பிறையின் பெறுமதி யாது?
i. 6 ii. 8 iii. 3

12. முக்கோணத்தின் பெறுமதியையும் பிறையின் பெறுமதியையும் கூட்டினால் கிடைக்கும் எண்ணிக்கை யாது?
i. 8 ii. 4 iii. 6

13. 


i. 12 ii. 24 iii. 27

14. 80 இன் அரைவாசியுடன் 100 இன் கால்வாசியை கூட்டி இரண்டால் பெருக்கினால் வரும் விடை யாது?
i. 130 ii. 120 iii. 110

15. 1839ஆம் ஆண்டு எத்தனையாம் தசாப்தம் எத்தனையாம் நூற்றாண்டு?
i. நான்காம் தசாப்தம் எட்டாம் நூற்றாண்டு
ii. நான்காம் தசாப்தம் பத்தொன்பதாம் நூற்றாண்டு
iii. நான்காம் தசாப்தம் பதினெட்டாம் நூற்றாண்டு


16. பின்வரும் ஆங்கில எழுத்துக்களில் முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது ஒரு எழுத்து மட்டும் மாறி தோன்றும் எழுத்துக்களின் கூட்டம் எது?
i. AONM ii. AOXM iii. AXBL

17. 30 ஆவது ஒற்றை எண் யாது?
i. 60 ii. 61 iii. 59

18. 10 தொடக்கம் 50 வரையுள்ள 5இன் மடங்குகளின் கூட்டுத்தொகை யாது?
i. 260 ii. 265 iii. 270

19. விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்ட 4 நண்பர்கள் தங்களுக்குள் கை குலுக்கிக் கொண்டனர். எனில் இங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை?
i. 8 ii. 6 iii. 4


20. பிரகத்தின் வயது அவனது தந்தையின் வயதின் ஆறில் ஒரு பங்கின் இரண்டு மடங்காகும். தந்தையின் வயது 36 எனில் பிரகத்தின் வயது என்ன?
i. 12 ii. 10 iii. 8

21.  இவ்விருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?
i. 6
ii. 5
iii. 4

22. EXIT இதனை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தோன்றும் விதமானது?

i. EXIT ii.  iii. 

23. 250g சீனி ரூ. 95.00 எனில் 1kg 250 g சீனியின் விலையென்ன?
i. ரூபாய் 475.00 ii. ரூபாய் 450.00 iii. ரூபாய் 525.00

24.  இவ்வுருவில் அரைபங்கை நிழற்ற இன்னும் எத்தனை முக்கோணிகளை நிழற்ற வேண்டும்?
i. 2
ii. 3
iii. 4

25. நீளம் அளத்தலின் மிகச்சிறிய அலகு எது?
i. m ii. cm iii. mm

26. 45635 என்பதனை இரகசியக் குறியீட்டில் எழுத பொருத்தமான முறையானது?
i. ABCDE ii. ABCDB iii. ABDCE

27. 2016ஆம் ஆண்டின் தொடக்கம் முதல் இறுதிவரை சுதன் ஒரு நாளைக்கு ரூபாய் 2 படி உண்டியலில் சேமித்தான். அவன் ஆண்டு முழுவதும் சேர்த்த மொத்த பணம் எவ்வளவு?
i. ரூபாய் 732.00 ii. ரூபாய் 730.00 iii. ரூபாய் 365.00


28. கடிகாரமொன்றில் செங்கோணத்தை காட்டும் நேரங்களாவன?
i. 3 மணி, 6.30 மணி ii. 9 மணி, 3 மணி iii. 9 மணி, 3.30 மணி




29. நுளம்புகளை நாம் அழிப்பதன் காரணம்
i. எமது உணவை அவை அசுத்தப்படுத்துவதனால்
ii. அவை சுற்றாடலை அசுத்தப்படுத்துவதனால்
iii. அவை கொடிய நோய்களை பரப்புவதனால்


30. **8 x 8 + 8 = ?**
i. 64 ii. 70 iii. 72




31. எண்ணும் எண்களில் அடுத்தடுத்துள்ள இரண்டு எண்களை கூட்டும் போது வரும் விடையானது?
i. ஒற்றை எண் ii. இரட்டை எண் iii. கூறமுடியாது

32. ஒருவரது தனிப்பட்ட விருப்பத்தை குறிக்கும் கூற்றானது
i. சுத்தம் சுகம் தரும்
ii. உடற்பயிற்சி உடல் ஆரோக்கியத்தை தரும்
iii. பச்சை நிறம் அழகானது

33.  கடதாசித் துண்டொன்று நான்காக மடித்து இவ்வாறு வெட்டப்பட்டால் அது தோன்றும் விதமானது?

i.  ii.  iii. 

34.  இவ்விரண்டு உருக்களையும் தொடர்புபடுத்தினால் கிடைக்கும் உருவானது?

i.  ii.  iii. 

35. 6 பேருக்கு உணவு சமைக்க 1 kg அரிசி தேவை எனில் 4 kg அரிசியில் எத்தனை பேருக்கு உணவு சமைக்கலாம்?
i. 20 பேருக்கு ii. 22 பேருக்கு iii. 24 பேருக்கு

36. ஒரு கைக்குட்டை தைக்க 25cm துணி தேவை எனில் 7 கைக்குட்டை தைக்க தேவையான துணியின் அளவு யாது?
i. 175 cm ii. 160 cm iii. 175 cm

(10ஆம் பக்கம் பார்க்க)


(09 ஆம் பக்கத் தொடர்)


## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I


1 மணித்தியாலம் 15 நிமிடம்

37. மூன்று கால் மேசை ஒன்றினை சுற்றி 4 கால்கள் உள்ள கதிரைகள் 7 உள்ளன எனில் அவற்றின் கால்களின் எண்ணிக்கை யாது?
i. 30 கால்கள் ii. 31 கால்கள் iii. 34 கால்கள்

38. அதிகளவு வட்டங்களை பயன்படுத்தி வரையப்பட்ட முகம் எது?


i. 


ii. 


iii. 

39. 8 மனிதர்கள் 4 நாட்களில் செய்யும் வேலையை 4 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்வார்கள்?
i. 8 நாட்களில் ii. 4 நாட்களில் iii. 2 நாட்களில்

40.




i. 2 ii. 3 iii. 4

## கடந்த வார (22.12.2023) வினாத்தாள்- II இற்கான விடைகள்

**I.**
01. மரம் + கிளை
02. உடல்
03. காட்டு மலர்கள்
04. நீல வண்ண ஆடையைப் போல
05. அங்குமிங்கும்
06. எங்களை அன்புடன் தழுவிச் சென்றன

**II.**
07. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு
08. ஆழமறியாது காலை விடாதே
09. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
10. பாதுகாத்தது
11. மிக்கது
12. i. மந்திரி ii. தேவன் iii. தமையன் iv. சிறுவன் v. மேலோன்

**III.**
13. நேற்று மழை பெய்தது.
14. மிளகாய்ச் செடி செழித்து வளர்ந்தது.
15. நான் மணல் வீடு கட்டினேன்.
16. i. இலங்கை போக்குவரத்து சபை
ii. இலங்கை மத்திய வங்கி
iii. இலங்கை மின்சார சபை
17. i. ஊளையிடும் ii. சீறும்
iii. கணைக்கும் iv. கொக்கரிக்கும்
18. i. மாலைநேரம் ii. பூஞ்செடி
iii. முட்டையொன்றிலிருந்து
19. i. நாங்கள் சோறு சாப்பிடுவோம்
ii. பெயர் சொல்லுங்கள்
iii. பாடம் சொல்லித் தாருங்கள்
20. i. இது எனது புத்தகம்
ii. நான் தண்ணீர் குடிக்கின்றேன்
21. i. 1/8 அல்லது ¼
ii. 5801
22. 8/12
23. 69099
24. 3468
25. 38
26. 100ml
27. XI
28. 3
29. i. 70
ii. செவ்வாய்

**IV.**

| | | |
|---|---|---|
| 30. 3 | 39. 2 | 49. 3 |
| 31. 1 | 40. 1 | 50. 3 |
| 32. 2 | 41. 2 | 51. 2 |
| 33. 3 | 42. 3 | 52. 2 |
| 34. 1 | 43. 1 | 53. 3 |
| 35. 1 | 44. 1 | 54. 2 |
| 36. 1 | 45. 2 | 55. 3 |
| 37. 2 | 46. 2 | 56. 2 |
| 38. 1 | 47. 3 | 57. 3 |
| | 48. 2 | 58. 3 |
| | | 59. 2 |

### ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை

# இரு தசாப்தங்களின் பின்னர் சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 22 மாணவர்கள் சித்தி


எம்.எச்.எம். சுதைப் 171


எம்.ஆர்.எப். றிக்ஸா 171


எம்.ஆர்.எம்.றாபி 171


எம்.எம். மஹ்தி 169


எச்.எம்.எப்.எச். தமாமா 164


எப்.என். ஹினா 162


எம்.ஆர்.எம். சாபிக் 158


எம்.ஆர்.எப். அய்ஷா 157


ஏ.எச். ராஷித் 156


என்.எப்.ஏ. மலீஹா 156


எச்.எம்.எம். அல் பதின் 155


இஸட்.ஐ. லீனா 153


எம்.என்.எப். அஸாஹ் 150


எம்.ஏ.எப்.இஸட். ஹானி 150


ஆர்.எச்.ஏ.எப். பதின் 150


என்.எம்.கே. ஷஹீன் 150


எம்.ஜே.எம். அக்ஸாப் 149


எம்.ஏ.எப். இஸட். ஹப்ஸா 148


என்.எப். சனீல் 147


என்.ரீ. ஸீனத் 146


எம்.எஸ்.எப். சாரா 146


எம்.ஜே.எப். ஹனாஹ் 145

சாய்ந்தமருது கமு/ கமு/ அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் (GMMS) சுமார் 22 வருடங்களின் பின்னர் இம்முறை நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 22 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தெரிவித்தார்.

அதனடிப்படையில், எம்.எச்.எம். சுதைப் 171, எம்.ஆர்.எப். றிக்ஸா 171, எம்.ஆர். எம்.றாபி 171, எம்.எம். மஹ்தி 169, எச். எம்.எப்.எச். தமாமா 164, எப்.என். ஹினா 162, எம்.ஆர்.எம். சாபிக் 158, எம்.ஆர். எப். அய்ஷா 157, ஏ.எச். ராஷித் 156, என். எப்.ஏ. மலீஹா 156, எச்.எம்.எம். அல் பதின் 155, இஸட். ஐ. லீனா 153, எம். என்.எப். அஸாஹ் 150, எம். ஏ.எப்.இஸட். ஹானி 150, ஆர்.எச்.ஏ.எப். பதின் 150, என்.எம்.கே. ஷஹீன் 150, எம்.ஜே.எம். அக்ஸாப் 149, எம்.ஏ.எப். இஸட். ஹப்ஸா 148, என்.எப். சனீல் 147, என்.ரீ. ஸீனத் 146, எம்.எஸ். எப். சாரா 146, எம்.ஜே.எப். ஹனாஹ் 145 ஆகியோரே வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குக் தோற்றிய 139 மாணவர்களில் 127 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 91.36 சதவீத சித்தியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களை வாழ்த்துவதுடன் இதற்காக உழைத்த பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், பிரதி அதிபர் திருமதி கே.எம். ராபீக், உதவி அதிபர் எம். ஏ.சீ.எல். நஜீம், பகுதித் தலைவர்கள், வகுப்பாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் பெற்றோர்கள் ஆகியோருக்கு பாடசாலை சமூகத்தினர் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)




## கரம் போட்டியில்
# ஹோல்புறூக் விஞ்ஞான கல்லூரி மாணவர்கள் சாதனை



(ஹற்றன் விசேட நிருபர்)

மலையக பகுதியில் கரம் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் வகையில் மெரினாஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த திறந்த கரம் போட்டி மெராயா தேசிய கல்லூரி பிரதான மண்டபத்தில் கடந்த 26,27ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப்போட்டியில் 50 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. தனி நபர் போட்டியில் எஸ்.டிலான் முதலாமிடத்தையும் இரண்டாமிடத்தை பி.கபிலாஸ் பெற்றனர்.

இரட்டையர் போட்டியில் பங்குபற்றிய ஹோல்புறூக் விஞ்ஞான கல்லூரி மாணவர்களான புஷ்பராஜ் துவாரக்ஷான், சிவகுமார் பிரகதீஸ் ஆகிய இருவரும் இணைந்து மிகவும் சிறப்பாக விளையாடி அனைத்து சுற்றிலும் வெற்றிப்பெற்று.

இறுதி சுற்றுக்கு தெரிவாகி பார்வையாளர்களின் அமோக வரவேற்புடன் 2023 ஆண்டுக்கான செம்பியன் கிண்ணத்தை வெற்றிக்கொண்டனர். இவர்களுக்கு பணப்பரிசாக 10 ஆயிரம் ரூபாவும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான கிண்ணங்கள் மற்றும் செம்பியன் கிண்ணத்தையும் தனதாகி கொண்டனர்.

## பலத்த மழை
# கந்தப்பளையில் வெள்ள அனர்த்தம்

சீரற்ற வானிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பல பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது.

அந்தவகையில் நுவரெலியா கந்தப்பளை பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையால் கந்தப்பளை பார்க் தோட்டம்,கந்தப்பளை கிராமம்,ஆறாம் கட்டை புதுரோடு, மற்றும் கல்பாலம் ஆகிய பகுதிகளில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

கந்தப்பளை பிரதேசத்தில் பார்க் தோட்டம் மற்றும் புதுரோடு பகுதியிலுள்ள ஆறுகள் பெருக்கெடுத்துள்ளமையால் விவசாய காணிகள், வீடுகள், மற்றும்



பிரதான வீதிகளில் நீர் நிரம்பி வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றது.

மேலும் நுவரெலியா உடப்புசல்லாவை பிரதான வீதியில்



கந்தப்பளை புதுரோடு எனும் இடத்தில் வெள்ள நீர் நிரம்பி போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பஸ் மற்றும் லொறிகள் போன்ற பெரிய வாகனங்கள் மாத்திரம் பயணிக்கக்கூடியதாகவிருந்தது.

அதேநேரத்தில் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டிகள் என சிறிய ரக வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றமையால் காரியாலயங்கள்,உட்பட அவசர தேவைகளுக்கு நுவரெலியாவை நோக்கி பயணிப்போர் அசௌகரியங்களை அனுபவித்தனர்.

வெள்ள அனர்த்தத்தினால் ஆறாம் கட்டை மற்றும் புதுரோடு பகுதியில் வெள்ள நீர் வீடுகள் மற்றும் விவசாய காணிகளுக்குள் உட்புகுந்து பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ஆ.ரமேஷ்)

## புராதன விகாரையில் புதையல் தோண்டிய ஆறு பேர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிபிட்டிய சூரியவெவ கெம்ஹத புராண ரஜமஹா விகாரையில் புதையல் தோண்டிய ஆறு பேரை சூரியவெவ விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகள் நேற்று (28) கைது செய்துள்ளனர். அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சந்தேகநபர்களை கைது செய்துள்ளதுடன் அவர்கள் அதற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

விகாரைக்கு அண்மித்ததாக அமைந்துள்ள குளத்தின் அருகில் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சந்தேகநபர்கள் நமடகஸ்வெவ துங்கம. சூரியவெவ, செவனகல,மித்தெனிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை, ஹங்குராங்கெத்த, வலப்பனை ஆகிய பிரதேசங்களில் (28) இரவு முதல் இடைவிடாது பெய்து வரும் பலத்த மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் நுவரெலியா மாவட்டத்தில் கந்தப்பளையில் அதிக மழை பெய்து வருவதுடன் தாழ் நில பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் பல ஏக்கர் விவசாய நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கடும் மழை காரணமாக உடப்புசல்லாவ நுவரெலியா ஊடான போக்குவரத்து தடைப்பட்டது.

அத்துடன், கந்தப்பளை கோர்ட் லோட்ஜ் சந்தியில் பிரதான வீதிக்கு மேலாக வெள்ளநீர் போவதினால் போக்குவரத்து தடைப்பட்டதுடன் சில வீதிகள் சேதமடைந்துள்ளது. பிரதான வீதி பகுதிகளில் முற்றாக வெள்ளம் சூழ்ந்துள்ளமையால் வீதி அருகில் உள்ள வடிகான்களை அவதானிக்க முடியாத நிலையில் மக்கள் விபத்தினை எதிர்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது.

மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியமையால் அவை சேதமடைந்துள்ளன.

வலப்பனை பிரதேசத்தில் இராகலை புரூக்சைட் மற்றும் சில்வர்கண்டி தோட்டத்தில் வேருடன் பாரிய மரம் சாய்ந்து புரூக்சைட் சந்தி ஊடாக கோணப்பிட்டிய மற்றும் ஹைபொரஸ்ட் வரை செல்லும் பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், சில்வர்கண்டி தோட்டத்தில் ஊற்று நீர் உள்ள பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் மண்ணை அகற்றி போக்குவரத்தை மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

வலப்பனை பகுதியில் பாரிய கற்களுடன், மண்மேடு ஒன்று சரிந்துள்ளது.

ஹங்குராங்கெத்த பகுதியில் மண்மேடு சரிந்து பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

உடபுஸ்ஸலாவ சென் மாக்றட் குடியிருப்பு ஒன்றின் பின் பகுதியில் மண்மேடு சரிவு ஏற்பட்டுள்ளதாக உடப்புஸ்ஸலாவ பொலிஸார் தெரிவித்தனர்.


மேலும், மத்துரட்ட பொலிஸ் பகுதியின் பிரதான வீதியில் மரம் ஒன்று சரிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சரிந்த மரத்தை அகற்றும் பணி பிரதேச மக்களின் உதவியுடன் மேற்கொண்டு வருவதாக மத்துரட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

மலையகத்தில் காலநிலை சீர்கேட்டின் காரணமாக பெய்து வரும் அடை மழையினால் மேல் கொத்மலை நீர்த்தேக்க பகுதியின் நீர் மட்டம் உயர்வடைந்ததால் நேற்று காலை முதல் ஒரு வான்கதவு திறக்கப்பட்டுள்ளது.



மத்திய மாகாணத்தில் காணப்படும் கஷ்டப் பிரதேச வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் வேலைத்திட்டமொன்று சுகாதார அமைச்சரினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. உலக வங்கி இதற்கென 5 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கியுள்ளது. மத்திய மாகாணத்தில் இதன் முதற்கட்டமாக மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை, கலேவல, லக்கல,வில்கமுவ,மாதிபொல,நாலந்த, யட்டவத்த ஆகிய கஷ்டப் பிரதேச வைத்தியசாலைகளுக்கு நேற்றுமுன்தினம் மோட்டார் சைக்கிள்கள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டன. மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பிரதம அதிதியாக கலந்து கொண்டு மோட்டார் சைக்கிள்களின் சாவியை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்தார்.

(படம் மாத்தளை சுழற்சி நிருபர்)




# அட்டாளைச்சேனையில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்

முசாரப் எம்.பி. தெரிவிப்பு

(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் அபிவிருத்திக்காக தன்னால் முடிந்த பணிகளை செய்வதற்கு எண்ணியுள்ளதாக திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கடற்றொழில்,விளையாட்டு,பாதை அபிவிருத்தி மற்றும் கூட்டுறவுத்துறைகளின் அபிவிருத்திக்காகவும், எழுச்சிக்காகவும் அரசாங்கம் அடுத்த வருடத்தில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளது. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில்



அவ்வாறான முக்கியத்துவம் மிக்க அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிச்சயம் முன்னெடுக்க தீர்மானித்துள்ளேன். அதற்காக நீங்கள் எல்லோரும் எனக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். மக்களின் சார்பில் நின்று அரசியல்வாதிகளிடம் கேள்வி கேட்ட நாம், இன்று அரசியல்வாதியாக மாறிய நம்மிடம் கேள்வி கேட்ட முடியாத நிலைக்கு சமூகம் சார்ந்த, நமது பிரதேசம் சார்ந்த பல வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளோம்.

மக்களுக்காக நல்லது செய்ய வேண்டும் என்பதே நமது விருப்பமாகும். அதை எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் செய்தாலும் அதனை விமர்சிக்கவோ, தடுக்கவோ ஒருபோதும் நாம் முனைந்ததில்லை. நுரைச்சோலை வீட்டுத்திட்டம் போல் புரையோடிப் காணப்படும் பல பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதுதான் எமது ஒரே எதிர்பார்ப்பாகும்.

நாட்டை முன்னோகிக் கொண்டு செல்ல பொருத்தமான ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை மக்கள் பார்க்கின்றனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும் செல்வாக்குடன் கூடுதல் வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இன்று முஸ்லிம் கட்சியின் தலைவர் ஒருவர், அதிகாரத்தைப் பெறுவதற்காக அங்கும் இங்கும் நாடகமாடித் திரிகின்றார். அவரின் பித்தலாட்டத்தை மக்கள் புரிந்து கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.



The Ball Blaster 2023 போட்டியில் முதலிடம் பெற்ற ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையின் கால்பந்து வீரர்கள், அதிபர் சேவைக்குத் தெரிவாகியுள்ள ஆசிரியர்கள் ஆகியோரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஏறாவூர் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி இப்றாஹீம் அஹ்மத் அஸீஸி ரிஃபாயீ தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கால்பந்து வீரர்கள், அதிபர் சேவைக்கு தெரிவாகியுள்ள ஆசிரியர்கள் ஆகியோர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# அம்பாறை மாவட்டத்தில் கனமழை பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடைமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது.

இதனால் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களான நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, பாண்டிருப்பு, மருதமுனை, பெரியநீலாவணை, துறைவந்தியமேடு போன்ற தாழ்நில பகுதிகளில் வெள்ள நீர் பெருக ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சியாக கன மழை பெய்வதால் மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நாளாந்த கூலி வேலைகளில் ஈடுபடும் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். சில தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள நீர் தேங்கி கிடப்பதால் டெங்கு நோய் பெருகக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் நடைபெறும் இடங்களுக்கு கூட்டம் கூட்டமாக பார்வையிடச் செல்வதை தவிர்த்து பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

# பொத்துவிலில் சுனாமி நினைவு தினம் அனுஷ்டிப்பு

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர் )

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து பத்தொன்பது ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு நாடு முழுவதும் ஞாபகார்த்த நிகழ்வுகளும் சமய அனுஷ்டானங்களும் நடாத்தப்பட்ட அதேவேளை பொத்துவில் மக்களும் இத்தினத்தை மிக உணர்வுபூர்வமாக நேற்றுமுன்தினம் மாலை நினைவு கூர்ந்தனர்.

பொத்துவில் ஆட்டோ உரிமையாளர் சங்கம் மற்றும் அறுகம்பே கிளீன் ஸ்ரீ லங்கா அமைப்பினரும் ஒருங்கிணைந்து இங்குள்ள சமூகசேவை அமைப்புகளுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

சின்ன உல்லை மஸ்ஜிதுல் அக்சா ஜும்மா பள்ளிவாசலில் ஆட்டோ உரிமையாளர் சங்க தலைவர் எ.முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம் முஷாரப்பும் கலந்து கொண்டார்..

ஜம்மியத்துல் உலமா சபையின் அக்கரைப்பற்று கிளையின் தலைவர்



கலாநிதி அகில இலங்கை எம்.ஐ. எம். சித்தீக்கின் விசேட சொற்பொழிவு முக்கிய அம்சமாக இடம்பெற்றது. இந்நிகழ்வில் மௌலவி எம். எம்.அப்துல் கையூம் விசேட துஆப் பிரார்த்தனையும் ஜம்மியத்துல் உலமா சபையின் பொத்துவில் கிளை தலைவர் மௌலவி எ.மொஹிடீன் பாவா உட்பட உலமா சபையின் உறுப்பினர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், அரபுக் கல்லூரி அதிபர்கள், மற்றும் வர்த்தக பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

## சாதனையாளர் பாராட்டு விழா

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வியில் சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் தலைமையில் பட்டிருப்பு தேசிய பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளிதரன் கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் ஆர்.வசந்தராசா உட்பட பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சுதேச வைத்தியத்துறை மாகாண பணிப்பாளராக ஜெயலட்சுமி பாஸ்கரன் நியமனம்

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையில் சுதேச வைத்திய அத்தியட்சகராக பல வருடங்கள் கடமை புரிந்த திருமதி ஜெயலட்சுமி பாஸ்கரன் கிழக்கு மாகாண சுதேச வைத்தியத் துறை மாகாண பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். இவருக்கான நியமனக் கடிதம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானினால் உத்தியோகபூர்வமாக நேற்று வழங்கி வைக்கப்பட்டது.



(படம் ;ஆரையம்பதி தினகரன் நிருபர்)

LE/RE/201

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழான தீர்மானம்.

கடன் இலக்கம் : 101730000007

கடனாளியின் முழுப் பெயர் : மாதம்பே மில்ஸ் தனியார் கம்பனி மற்றும் உடகமலியனகே சமன் தமயந்தி

கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் எம்.ஆர்.எஸ்.பிரணாந்து என்பவரினால் 09.09.2016 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 3483 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலமும் மற்றும் 28.02.2020 ஆம் திகியுடைய 4405 ஆம் இலக்க ஒப்பந்தப்பத்திரத்தின் மூலம் எழுதி உறுதிசெய்யப்பட்ட, இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம். இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக் கொண்ட கடனை வங்கிக்கு மீளச்செலுத்த தவறியுள்ளதனால், மேற்குறிப்பிட்ட அடகுப்பத்திரங்களின்படி,

எட்டு கோடி முப்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒரு ரூபா முப்பத்து ஏழு சதம் (83,138,951.37) 2023.10.31 ஆம் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

(01) கடன் இலக்கம் 101730000007

குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இரண்டு கோடி அறுபது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து அறுபத்து ஐந்து ரூபா நாற்பத்து ஆறு சதம் (26,027,065.46) மற்றும் 2023.10.31 ஆம் திகதி வரை நிலுவையான ஐந்து கோடி எழுபத்து ஒரு இலட்சத்து பதின் ஓராயிரத்து எண்ணூற்று எண்பத்து ஐந்து ரூபா தொன்னூற்று ஒரு சதத்தினையும் (ரூபா 57,111,885.91) இதன்படி முழுத் தொகையான எட்டு கோடி முப்பத்து ஒரு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்து ஒரு ரூபா முப்பத்து ஏழு (83,138,951.37) சதத்தினையும்,

(02) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான இரண்டு கோடி அறுபது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து அறுபத்து ஐந்து ரூபா நாற்பத்து ஆறு சதத்திற்காக (ரூபா 26,027,065.46) சதத்திற்காக அறவிட வேண்டிய 22.82% வீத வருடாந்த வட்டியினையும், 2023.11.01 ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) அறவீடு செய்து கொள்வதற்கும்,

(03) 2023.11.01 ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட கடனின் மொத்த நிலுவைத் தொகையான நான்கு கோடி முப்பத்து இரண்டு இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து மூன்று ரூபா ஐம்பத்து ஐந்து (ரூபா 43,266,853.55) சதத்திற்காக மாதாந்தம் 1.67% வீத தாமத வட்டி ஒன்றினை அறவீடு செய்வதற்கும்,

(04) 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை,

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றை கழித்த பின்னர்) மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என, 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.


கடன் இலக்கம் : 101730000007

### மேற்கூறப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோரளையில் உடுகஹ பத்துவவில் சீத்தாவக்க பிரதேசசபை எல்லையில், சீத்தாவக்க பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 429A ஹிங்குரல கிராமசேவகர் பிரிவில் வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வெரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே.ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி A என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே பாதையும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 90 ஆம் இலக்க காணித்துண்டும்) பாதை மற்றும் (662 ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும்) மற்றும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டும்) கிழக்கே (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டும்) பாதை (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும்) (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 94 ஆம் இலக்க காணித்துண்டும்) மற்றும் காணித்துண்டிலக்கம் E மற்றும் B யும் தெற்கே 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 94 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் 662 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 65B என்ற காணித்துண்டும் மற்றும் பாதை மேற்கே 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 54 ஆம் இலக்க காணித்துண்டும், 662 ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 56 ஆம் இலக்க காணித்துண்டும் மற்றும் 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 60 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பத்தொன்பது ஏக்கர் மூன்று ரூட் பத்தொன்பது தசம் ஆறு இரண்டு பேச்சஸ்கள் ஆகும். (ஏக். 19. ரூட் 03. பேச். 19.62) அல்லது எட்டு தசம் பூச்சியம் நான்கு இரண்டு இரண்டு ஹெக்டயர்களாகும். (8.0422) ஆகும். இக் காணித்துண்டு அவிஸ்ஸாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B 167/67 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது
2. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே.ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி C என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே பாதையும் கிழக்கே 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டும், 1012 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 2 ஆம் இலக்க காணித்துண்டும் தெற்கே பாதையும் மேற்கே பாதை (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும்) அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு பேச்சஸ்கள் ஆகும். (ஏக்.0. ரூட் 0. பேச். 11) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஏழு எட்டு ஹெக்டயர்களாகும்.(0.0278) ஆகும். இக் காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் அவிஸ்ஸாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B 163/76 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது
3. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே.ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி D என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே பாதையும் (662 ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டு) கிழக்கே பாதை மற்றும் 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 87ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் தெற்கே 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 87ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் மேற்கே பாதை (662 ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டு) அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இருபது தசம் ஐந்து பூச்சியம் பேச்சஸ்கள் ஆகும்.(ஏக். 0. ரூட் 0. பேச்.20.50) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து ஒன்று எட்டு ஹெக்டயர்களாகும். (0.0518) ஆகும். இக் காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் அவிஸ்ஸாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B 163/71 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
4. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 22.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே.ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி E என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே டெரன்ஸ் பெரேரா என்பவரின் காணியும் (662ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டு) கிழக்கே டெரன்ஸ் பெரேரா என்பவரின் காணியும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84ஆம் இலக்க காணித்துண்டு) 1651 ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 5B என்ற இலக்க காணி மற்றும் பாதை 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 87 ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் தெற்கே (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 97B மற்றும் 1618 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 7ஆம் இலக்க காணித்துண்டின் மிகுதிப் பகுதியும் மேற்கே A என்ற இலக்க காணித்துண்டு 662 ஆம் இலக்க காணி வரைப்படத்தின்படி 94 அம் இலக்க மற்றும் 662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 92 ஆம் இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு ஏக்கர் இரண்டு ரூட் பூச்சியம் தசம் ஏழு இரண்டு பேச்சஸ்களாகும் (ஏக். 11 ரூட் 2. பேச். 00.72) அல்லது நான்கு தசம் ஆறு ஐந்து ஐந்து ஏழு ஹெக்டயர்களாகும். (4.6557) ஆகும். இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் அவிஸ்ஸாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B 163/77 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. மேல் மாகாணத்தில், மேற்குறிப்பிட்ட வெரலுப்பிட்டிய மற்றும் ஹிங்குரால கிராமத்தில் அமைந்துள்ள வரலுபிட்டிய எஸ்டேட் என்ற காணிக்கு, 20.03.2010 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் யூ.கே.ஜி.பி.எஸ். புஷ்பகுமார என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 1652 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 5B என்ற இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே டெரன்ஸ் பெரேரா என்பவரின் காணியும் (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 84 ஆம் இலக்க காணித்துண்டு) மற்றும் தர்ஷன பெரேரா என்பவரினது காணியும் கிழக்கே ஹிங்குரல காள்வாயும் தெற்கே (662 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 97B என்ற காணித்துண்டும் மேற்கே 5A என்ற இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு ஏக்கர் முப்பத்து மூன்று தசம் நான்கு ஆறு பேச்சஸ்களாகும் (ஏக். 11 ரூட் 0. பேச். 33.46) அல்லது நான்கு தசம் ஐந்து மூன்று ஆறு ஒன்று ஹெக்டயர்களாகும். (4.5361) ஆகும். இக் காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் ஏனைய அனைத்துடன் அவிஸ்ஸ ாவலை காணிப்பதிவு காரியாலயத்தில் B 163/75 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.


**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொதுமுகாமையாளர்**
**திகதி : 07.12.2023**

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி**
**சேர். சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085**
**கொழும்பு - 02**










**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

BGB-9107 TVS Apache 2017, Motor Cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03, தொ.பே. 0711 210810. 084987




**பஸ்கள், லொறிகள்**
விற்பனைக்கு

EP - DAA - 8921 - TATA 207 RX PICK UP - SINGLE CAB 2015 - WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சிஇல. 310, காலி வீதி, கொழும்பு 03,தொ.பே. 0812 081033 084341

*Marriage Proposals*
in the
**Sunday Observer**
Is the best way to fulfil your Future Dreams

## தம்புள்ள மாநகர சபை

**2024ம் ஆண்டிற்கு வரிக்கட்டளை புத்தகங்களைப் பரிசீலித்தல்**

2024ம் ஆண்டிற்காக இச்சபையின் வரிக்கட்டண புத்தகம் 2023 டிசம்பர் 29ம் திகதி முதல் சாதாரண அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்ப்பதற்காக இவ் அலுவலகம் தற்போது தயாராக உள்ளதாக மாநகர சபை சட்டவாக்கத்தின் (252) அதிகாரம் 235(1) பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**கே.பீ. சாமிந்த,**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**பதுளை.**

## நீர்ப்பாசன அமைச்சு
## இலங்கை

**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (CResMPA)**

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள்

நாடு : இலங்கை

கடனிலக்கம் : **IBRD-89960**

பணி ஒதுக்கீட்டு தலைப்பு: இடர் முகாமைத்துவ நிலையத்தின் அவசர தயார்நிலை மற்றும் பதிலிறுக்கும் திறனை மேம்படுத்துவதற்கான உசாத்துணை சேவைகள் (அவசர செயற்பாடுகள் நிலையம், மாவட்ட அலுவலகங்கள், அழைப்பு நிலையம், தொடர்பாடல் வலையமைப்புக்கள் மற்றும் ஆரம்பநிலை எச்சரிக்கை பரப்புதல்)

**Reference No.: SLMOI/CRES/DMC/C/QCBS/41**

01. இலங்கையின் நீர்ப்பாசன அமைச்சினால் அமுல்நடத்தப்படும் காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிலை அணுகு முறையின் ஆகுசெலவிற்காக மீள்நிருமாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD – உலகவங்கி) நிதியிடலை இலங்கை சனநாயக சோசலிச குடியரசு பெற்றுள்ளதுடன் பெறுகைகளின் பகுதியொன்றை இடர் முகாமைத்துவ நிலையத்தின் அவசர தயார்நிலை மற்றும் பதிலிறுக்கும் திறனை மேம்படுத்துவதற்கான உசாத்துணை சேவைகளுக்காக (அவசர செயற்பாடுகள் நிலையம், மாவட்ட அலுவலகங்கள், உதவிக்கான அழைப்பு நிலையம், தொடர்பாடல் வலையமைப்புக்கள் மற்றும் ஆரம்பநிலை எச்சரிக்கை பரப்புதல்) பிரயோகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. CResMPAஇன் சார்பாக மேலேயுள்ள உசாத்துணை சேவையை வழங்குவதற்காக அவர்களின் ஆர்வத்தை குறிந்துரைக்குமாறு தகுதியுள்ள உசாத்துணை நிறுவனங்களை அமைச்சு உசாத்துணை பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
03. அனைத்து உரித்தான பங்குதாரர்களுடனான ஒத்துழைப்புடன் பேரழிவு பேராபத்தை குறைப்பதற்காக தேசிய மற்றும் உப தேசியமட்ட திட்டங்களை அமுல்நடத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் பொறுப்பிற்கான ஆணையை பெற்றுள்ள ஆபத்து தயார்நிலை மற்றும் செயற்பாட்டிற்கான முன்னணியிலுள்ள நிறுவனமே இலங்கையின் இடர் முகாமைத்துவ நிலையமாகும் (இமுநி–Disaster Management Centre - DMC). இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதான செயற்பாடுகள் ஏனைய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்து திட்டமிடல் மற்றும் தயார்நிலை, அவசர செயற்பாடு, எளிதில் பாதிப்படையக்கூடிய சமுகத்திற்கான ஆரம்பநிலை எச்சரிக்கையை பரப்புதல் மற்றும் தொடர்பாடல், இடர் குறைப்பு, ஆய்வு மற்றும் அபிவிருத்தி, பயிற்சி மற்றும் விழிப்புணர்வு, நிவாரண ஒருங்கிணைத்தல் மற்றும் இடருக்குப் பின்னராக செயற்பாடுகள் ஆகியனவாகும்.
04. அனைத்து இமுநி செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் அமுல்நடத்தலுக்கு உதவிசெய்வதற்காக இடர் முகாமைத்துவ குழுக்கள் (இமுகு – Disaster Management Committees – DMC) நாடளாவிய ரீதியில் தேசிய மட்டத்திலும் ஏனைய பிராந்திய நிருவாக அமைப்புக்களான மாவட்ட, பிரதேச, கிராம அலுவலகர் பிரிவு ஆகியவற்றிலும் தாபிக்கப்பட்டன. அத்துடன், உபதேசிய மட்டத்தில் இடர் ஆபத்து குறைப்பு (இஆகு – Disaster Risk Reduction – DRR) செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக உபதேசிய மட்டத்தில் மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைத்தல் அலகுகள் (மாஇமுஒஅ–District Disaster Management Coordination Units) அனைத்து மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டன. இந்தபணி ஒதுக்கீட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள நியதிக் குறிப்புக்களில் குறிக்கப்பட்டுள்ள செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக உசாத்துணை நிறுவனமொன்றை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம், CResMPAஇன் கீழ் இடர் தயார்நிலை மற்றும் அவசர செயற்பாட்டுத்திறன் ஆகியவற்றை மேலும் வலுவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
05. இந்த செயற்பணியானது இரு கட்டங்களைக் கொண்டதாகும். I ஆம் கட்டத்தில், உசாத்துணை நிறுவனமானது நியதிக் குறிப்பில் குறிக்கப்பட்டுள்ளவாறு இடர் தயார் நிலை மற்றும் அவசர சேவைகளை மேம்படுத்துவதற்காக கருத்துரு சட்டகமைப்பை அபிவிருத்தி செய்வதற்கு தேவைப்படுத்தப்படுவதுடன் முறைமை தேவைப்பாட்டு விபரக்குறிப்புக்கள், உள்ளக வடிவமைப்புக்கள், அளவைப் பட்டியல்கள் (BOQ) அவசர செயற்பாட்டு நிலைய புதுப்பித்தல் (தலைமையலுவலகம்) மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைத்தல் அலகுகளின் புதுப்பித்தல், உதவிக்கான அழைப்பு நிலையம், தொடர்பாடல் வலையமைப்புக்கள் மற்றும் ஆரம்ப எச்சரிக்கை பரப்புதல், நியதிக் குறிப்புக்கள் மற்றும் வழங்குநர்களை தெரிவு செய்வதற்கான விலைக்கேள்வி ஆவணங்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் நியதிக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள இடர் முகாமைத்துவ சேவையை முழுமையாக மேம்படுத்தலுக்கான சிவில் வேலைகள் ஒப்பந்தக்காரர்களை வழங்கல் ஆகியவற்றை அடக்கும். 2 ஆம் கட்டத்தில் அதே உசாத்துணை நிறுவனமானது 1 ஆம் கட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட கருத்துரு சட்டகமைப்பை அமுல்நடத்துவதற்கான வழங்குநர்கள் மற்றும் சேவைவழங்குநர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்காக தேவைப்படுத்தப்படும். இந்த செயற்பணியானது விஷேடத்துநர்கள் அணியொன்றினால் ஒருங்கிணைக்கப்பட்ட தன்மையில் முன்னெடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் பணிஒதுக்கீட்டின் 1 ஆம் கட்டத்திற்காக 6 மாதங்கள் எடுக்கப்படுவதுடன் முழுமையான அமுல்நடத்தலுக்கான மேற்பார்வையானது (2 ஆம் கட்டம்) 12 மாதங்களில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
06. இந்தபணி ஒதுக்கீட்டிற்கான விபரமான நியதிக் குறிப்பை pdcresmpa@gmail.com என்ற மின்னஞ்சல் வழியாக மேற்கொள்ளப்படும் கோரிக்கையின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
07. ஆர்வமுள்ள உசாத்துணை நிறுவனமானது குறிப்பிட்டுள்ள சேவைகளை நிறைவேற்றுவதற்கான தேவையான தகைமைகள் மற்றும் உரித்தான அனுபவத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதை சுட்டிக்காட்டும் தகவலை வழங்கல் வேண்டும்.
08. சுருக்கமான தகவுத்திறனானது பின்வருமாறு அமைந்துள்ளது.
    - அ. நியதிக் குறிப்பில் விபரிக்கப்பட்டவாறு அனைத்து அம்சங்களிலும் பரந்த அளவிலான முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப புலமையிருத்தல்.
    - ஆ. உசாத்துணை நிறுவனமானது பரிந்துரைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் வசதிகள்,தேசியமட்ட 24/ 7 உதவி அழைப்பு நிலையம், ஒருங்கிணைந்த எளிதில் பாதிப்படையக்கூடிய மற்றும் வெளிக்காட்டும் தரவு அடிப்படைகள் மற்றும் ஆரம்ப எச்சரிக்கைகளை பரப்பல், நம்பிக்கையுள்ள தொடர்பாடல் வலைப்பின்னலை மேம்படுத்தல் மற்றும் தாக்க அடிப்படையிலான இடர் ஆரம்ப எச்சரிக்கை பரப்பல் முறைமையை மேம்படுத்தல் ஆகியவற்றுடன் முழு அளவிலான தேசியமட்ட அவசர செயற்பாட்டு நிலையத்தின் நவீனமயமாக்கல் மூலமாக இடர் தயார்நிலை மற்றும் செயற்பாட்டு சேவைகளை மேம்படுத்துவதற்காக கருத்துரு சட்டகமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக ஆகக் குறைந்தது எட்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
    - இ. நிகரான தன்மையிலுள்ள பணி ஒதுக்கீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அண்மையிலேற்பட்ட அனுபவம். சேவை நாடுநரின் பெயர், இடம், மேம்படுத்தப்பட்ட திறன்கள், அமுல்நடத்தப்பட்ட காலஎல்லை மற்றும் பெறுமதி ஆகியன அடங்கலான பணி ஒதுக்கீட்டின் சுருக்கமான விளக்கத்தினால் சான்றுபகரும் கடந்த எட்டு வருடங்களில் பூர்த்திசெய்யப்பட்ட தொடர்புடைய ஒப்பந்தங்களின் பட்டியலொன்று (ஆவணசான்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
    - ஈ. உறுதிப்படுத்தப்பட்ட அனுபவத்துடனான நிரந்தர பதவிநிலை அலுவலர்களின் எண்ணிக்கை (கம்பனியின் விபரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)
    - உ. நிதிசார் திடநிலை: உசாத்துணை நிறுவனமானது கடந்த மூன்று வருடங்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் அறிக்கைகளை சமர்ப்பிப்பதன் மூலம் சிறந்த நிதிசார் நிலைமை மற்றும் திறனைக் கொண்டுள்ளதென காட்சிப்படுத்தல் வேண்டும்.
    - ஊ. கம்பனியின் பதிவு செய்தல் தொடர்பான விபரங்கள் - பதிவு செய்தலின் இடம் மற்றும் திகதி, சட்டரீதியான தகுதி ஆகியன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
09. தேவைப்படுத்தப்படும் தகவலுக்கு மேலதிகமாக, உசாத்துணை நிறுவனமானது சான்றுபகரும் சிறுவெளியீடுகள் மற்றும் ஏனைய ஆதரவு வழங்கும் ஆவணங்களை வழங்கல் வேண்டும்.
10. உசாத்துணை நிறுவனமானது அவர்களின் தகைமைகளை மேம்படுத்துவதற்காக மற்றவர்களுடன் இணைந்து செயற்படலாம். இந்த ''கூட்டிணைப்பானது'' கூட்டுமுயற்சி அல்லது உப-உசாத்துணையாக செயற்படலாம்.
11. உசாத்துணை நிறுவனமானது ஜீகு கடன் பெறுநர்களுக்கான உலகவங்கியின் பெறுகை ஒழுங்குவிதிகள் 2020 இன் நான்காவது பதிப்பில் குறிப்பிட்டுள்ள நடைமுறைகளுக்கமைவாக தெரிவு செய்யப்படுவதுடன் தெரிவு செய்தல் முறையானது தரம் மற்றும் ஆகுசெலவு அடிப்படையிலான தெரிவு செய்தலில் அமைந்திருக்கும்.
12. ஆர்வமுள்ள நிறுவனங்கள் மேலே தேவைப்படுத்தப்பட்டுள்ள தேவையான விபரங்கள்/ தகவலை 01 மூலப்பிரதி மற்றும் 05 நகல் பிரதிகளுடன் தெரிவுசெய்வதற்காக ஆர்வத்தை வெளிப்படுத்தும் வேண்டுகோளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
13. மேலதிக தகவலானது கீழேயுள்ள முகவரியிலிருந்து அலுவலக வேலை செய்யும் நேரங்களில், அதாவது மு.ப. 9 மணியிலிருந்துபி.ப. 4 மணிவரையும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறைகள் நீங்கலான நாட்களில் பெற்றுக் கொள்ளப்படலாம்.
14. ஆர்வத்தை வெளிப்படுத்தும் வேண்டுகோளானது எழுத்து மூலமாக கீழேயுள்ள முகவரிக்கு (நேரடியாக அல்லது தபால் மூலமாக) 2024 சனவரி 15 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர் - காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை,**
**இல.: 11, ஜாவத்தவீதி, கொழும்பு-05.**
**தொலைபேசி : 0112058452**
**தொலைநகல் : 011-2058451**
**மின்னஞ்சல் : pdcresmpa@gmail.com**

# அறிவித்தல்

## மாரவில ரிசோட்ஸ் பீஎல்சி
## (நிறுவன இல. PQ 198)

**கூறப்பட்ட மூலதனத்தில் முன்மொழியப்பட்ட குறைப்பு**

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 59 ஆவது பிரிவு மற்றும் நிறுவன அமைப்பு அகவிதிகளின் 12 (02) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முந்நூற்று ஐம்பத்தொரு மில்லியன் தொல்லாயிரத்து இருபத்து மூன்றாயிரத்து முந்நூற்று எண்பத்து ஒன்பது (351,923,389) மூலம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பில்லியன் ஐந்நூற்று அறுபத்து ஐந்து மில்லியன் முந்நூற்று நாற்பத்து ஆறாயிரத்து எழுநூற்று எழுபத்து எட்டு ரூபாவின் (ரூபா 1,565,346,778/-) முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்குகள் முந்நூற்று ஐம்பத்தொரு மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்து மூன்றாயிரத்து முந்நூற்று எண்பத்து ஒன்பது (351,923,389) மூலம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்நூற்று ஐம்பது மில்லியன் ரூபாவுக்கு (ரூபா 550,000,000) நிறுவனத்தின் கூறப்பட்ட மூலதனம் குறைக்கப்பட்டுள்ளது என்பதை அதன் பங்குதாரர்களுக்கு பரிந்துரைப்பதற்கு மாரவில ரிசோட்ஸ் பீஎல்சி (“நிறுவனம்”) இன் பணிப்பாளர் சபை இத்தால் அறியத்தரப்படுகிறது.

2023 மார்ச் 31 ஆம் திகதியின்படி நிறுவனத்தின் திரட்டப்பட்ட இழப்புகள் ஒரு பில்லியன் இருபத்து எட்டு மில்லியன் இருநூற்று எண்பத்து ஏழாயிரத்து ஐம்பத்து ஏழு ரூபாவாக (ரூபா 1,028,287,057/-) இருப்பதோடு (2023 மார்ச் 31ஆம் திகதிக்கு முடிவுற்ற ஆண்டுக்கான கணக்காய்வுக்கு உட்பட்ட நிதி அறிக்கைகள்) பன்னிரெண்டு மில்லியன் தொள்ளாயிரத்து நாற்பது ஆயிரத்து இருநூற்று எழுபத்து ஒன்பது ரூபாவுக்கு (ரூபா 12,940,279/-) குறைப்பதன் விளைவாக திரட்டப்பட்ட இழப்புகள் நிறுவனத்தின் முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளில் எந்த ஒரு மாற்றமும் செய்யப்படாது ஒரு பில்லியன் பதினைந்து மில்லியன் முந்நூற்று நாற்பத்து ஆறு ஆயிரத்து எழுநூற்று எழுபத்து எட்டு ரூபா (ரூபா 1,015,346,778/-) தொகைக்கு கூறப்பட்ட மூலதனத்திற்கு எதிராக நிறுவனத்தின் ஒருமித்த இழப்பின் பதிவழிப்பு (Writing off) மூலம் மேற்கூறிய குறைப்பு செயற்படுத்தப்படும்.

கூறப்பட்ட மூலதனத்தின் முன்மொழியப்பட்ட குறைப்புக்காக, விசேட தீர்மானம் ஒன்றின் மூலம் பங்குதார்களின் ஒப்புதலை பெறும் நோக்கத்திற்காக 2024 மார்ச் 07 ஆம் திகதிக்கு நிறுவனத்தின் அதிவிசேட பொதுக் கூட்டம் ஒன்று கூட்டப்படும்.

**சபையின் ஆணைப்படி**
**கோபரேட் மனேஜர்ஸ் அன்ட் செக்ரடெரிஸ் (பிறைவெட்) லிமிடெட்**
**மாரவில ரிசோட்ஸ் பீஎல்சி செயலாளர்கள்**
**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 8-5/2, லெய்டன் பஸ்டியன் வீதி, யோர்க் ஆர்கேட் கட்டிடம்,**
**கொழும்பு 01.**

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.08-11 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு K.D. சுமணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2018.11.01ஆம் திகதியிட்ட 455ஆம் இலக்க ஈட்டுமுறி, 2023.01.18ஆம் திகதியிட்ட 952ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 01இன் மீது 2023.10.17 வரையான வட்டியும் முதலுமாக 9,838,997.05 ரூபாயும் (ஒன்பது மில்லியன் எண்ணூற்று முப்பத்தெட்டாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றேழு ரூபாய் ஐந்து சதம்) அத்துடன் 9,000,000.00 ரூபாய் (ஒன்பது மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு பதினேழு (17%) வீதப்படி 2023.10.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 02இன் மீது 2023.10.17 வரையான வட்டியும் முதலுமாக 3,067,094.78 ரூபாயும் (மூன்று மில்லியன் அறுபத்தேழாயிரத்துத் தொண்ணூற்று நான்கு ரூபாய் எழுபத்தெட்டுச் சதம்) அத்துடன் 3,000,000.00 ரூபாய் (மூன்று மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) வீதப்படி 2023.10.18 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் இல.403/3, சிறீ நிவாச, பமுனாவல வத்தை, பமுனாவல எனும் முகவரியைச் சேர்ந்த திரு. யுவான் வடு வஜிர கிரிஷாந்த சில்வா மற்றும் இல.128, தும்மலப்பிட்டிய வத்தை, வில்பாவ வீதி, வந்துராகல எனும் முகவரியைச் சேர்ந்த திரு.ஹேரத் முதியன்சேலாகே மஞ்சுள பண்டார ஹேரத் (இருவரும் கார் ஷொப் மற்றும் எக்ஸெடொஸ் எக்கோ ருவறிங் ஆகியவற்றின் பங்காளர்களாவர்) ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாக உள்ளது.
2. மேற்குறிப்பிட்ட 455, 952ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 01 மீதான 9,838,997.05 ரூபாயையும் (ஒன்பது மில்லியன் எண்ணூற்று முப்பத்தெட்டாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றேழு ரூபாய் ஐந்து சதம்) மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 02 மீதான 3,067,094.78 ரூபாயையும் (மூன்று மில்லியன் அறுபத்தேழாயிரத்துத் தொண்ணூற்று நான்கு ரூபாய் எழுபத்தெட்டுச் சதம்) அத்துடன் 2023.10.18 தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி குருணாகல் 2ஆம் நகர மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

“ஹிட்டினாகெதரவத்த“ என அறியப்படும் “மெதவத்த“ என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் B.G. பண்டுதிலக்க தயாரித்த 2014.12.28ஆம் திகதிய 23061/2015 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணிதுண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டம், திரகந்தஹாய கோரளை, வெயுட வில்லி ஹத்பற்று, குருணாகல் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட இல. 812 வந்துராகல கிராம சேவகர் பிரிவிலுள்ள வந்துராகல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 311/P என்ற இலக்கத்தைக் கொண்ட வழக்கின் முறைப்பாட்டாளரின் தோட்டத்தையும் கிழக்கில் 23061/2015 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் 2 மற்றும் 3 என்பவற்றையும் தெற்கில் 23061/2015 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3 ஐயும் மேற்கில் 311/P என்ற இலக்கத்தைக் கொண்ட வழக்கின் முறைப்பாட்டாளராலும் ஏனையோராலும் உரிமை கோரப்படும் நெல் வயலையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி இருபத்து நான்கு தசம் நான்கு எட்டு (A0.R0.P24.48) பேர்ச்சுகள் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் முதலான பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண். காணிப் பதிவகத்தில் G 231/120 என்ற அனைத்தையும் கொண்டுள்ளதோடு குருணாகல் காணி பதிவகத்தில் G231/120 இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை**

1. “ஹிட்டினாகெதரவத்த“ என அறியப்படும் “மெதவத்த“ என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் A.A. ∴பியாரஸ் தயாரித்த 1962.05.21ஆம் திகதிய 1403A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைப்படத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 3 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டம், திரகந்தஹாய கோரளை, வெயுட வில்லி ஹத்பற்று, குருணாகல் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட இல. 812 வந்துராகல கிராம சேவகர் பிரிவிலுள்ள வந்துராகல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 311/P என்ற இலக்கத்தைக் கொண்ட வழக்கின் முறைப்பாட்டாளரின் காணியையும் கிழக்கில் பிரதான வீதியையும் தெற்கில் காணித்துண்டு 2 ஐயும் மேற்கில் காணித்துண்டு 1 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஐந்து (A0.RO.P5) பேர்ச்சுகள் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு குருணாகல் காணிப் பதிவகத்தில் G 238/132 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. “ஹிட்டினாகெதரவத்த“ என அறியப்படும் “மெதவத்த“ என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் B.G. பண்டுதிலக்க தயாரித்த 2014.12.28ஆம் திகதிய 23061/2015 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி வடமேல் மாகாணம் குருணாகல் மாவட்டம், திரகந்தஹாய கோரளை, வெயுட வில்லி ஹத்பற்று, குருணாகல் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட இல. 12 வந்துராகல கிராம சேவகர் பிரிவிலுள்ள வந்துராகல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 311/P என்ற இலக்கத்தைக் கொண்ட வழக்கின் முறைப்பாட்டாளரின் காணியின் வேலியையும் கிழக்கில் 1403A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3ஐயும் தெற்கில் 23061/2015 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 3 ஐயும் மேற்கில் 23061/2015 என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பூச்சியம் தசம் ஐந்து இரண்டு (A0.R0.P0.52) பேர்ச்சுகள் (ஆனால் 0.25 பேர்ச்சுகள் எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு குருணாகல் காணிப் பதிவகத்தில் G 231/121 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

**திருமதி.H.M.Y.R. ஜயசிங்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**2ஆம் நகர மேற்தரக் கிளை**
**குருணாகல்.**

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அபிவிருத்தி லொத்தர் சபை

## பாவனையாளர்களுக்கு விடுக்கப்படும் விசேட அறிவித்தல்

2023ஆம் வருடத்திற்கான கணக்கிடும் வருடம் 2023-12-31ஆம் திகதியுடன் முடிவடைவதனால் மற்றும் அன்றைய தினம் வார இறுதி நாள் என்பதனால் 2023ஆம் வருடத்திற்கான இறுதி பரிசுகள் செலுத்தும் தினம் 2023-12-29ஆம் திகதியாகும் என பாவனையாளர்களுக்கு தயவுடன் அறியத்தரப்படுகின்றது.

மீண்டும் பரிசுகள் செலுத்தும் வேலைகள் வழமைபோல 2024-01-01ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

**தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**அபிவிருத்தி லொத்தர் சபை.**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 22ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

இல. 107, பள்ளிதோர வீதி, தெகிவளை எனும் முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட பரடைம் குளோதிங் (தனியார்) நிறுவனத்தினரின் கடன் பொறுப்புகளுக்காக வரி மதிப்பீட்டு இல.107, பள்ளிதோர வீதி, தெகிவளை எனும் முகவரியிலுள்ள ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.11.24ஆம் திகதிய 2360ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.11.24ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ், தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய முதல் நிலுவையையும் விற்பனைத் திகதி வரை செலுத்தவேண்டியுள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகளையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச். துசித்த கருணாரத்ன அவர்கள் 2024.01.19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை

"மஹாகும்புர" மற்றும் "தொரகடகும்புர" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜி.பி. தொடன்வெல தயாரித்த 2006.10.10ஆம் திகதிய 6350ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல.107, பள்ளிதோர வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, தெகிவளை-கல்கிசை மாநகர சபை எல்லைகட்குட்பட்ட தெகிவளை பிரதேச செயலகர் பிரிவில் இல. 539/42-B கவுடான கிழக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கரகம்பிட்டிய பிரதேசத்தின் 14ஆம் வட்டாரத்திலுள்ள கவுடான என்ற இடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் இலக்கங்கள், 29/14 மற்றும் 29/12, சிறிவர்தன வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, பெலிகஹவத்த, இலக்கங்கள், 29/10 மற்றும் 29/11, சிறிவர்தன வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகள் என்பவற்றையும் கிழக்கில் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம்.டி. பிரியதர்ஷினி தயாரித்த 1998.03.09ஆம் திகதிய 3430Aஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு Dஐயும் தெற்கில் இல.105, பள்ளிதோர வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, 3431ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள. காணித்துண்டு A, பள்ளிதோர வீதி என்பவற்றையும் மேற்கில் குறித்த 6350ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2, இலக்கங்கள் 29/14 மற்றும் 29/12, சிறிவர்தன வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகள், பெலிகஹவத்த என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒரு ஏக்கர் முப்பத்தொன்று தசம் ஒன்று மூன்று (A1.R0.P31.13) பேர்ச்சுகள் அல்லது பூச்சியம் தசம் நான்கு எட்டு மூன்று நான்கு (0.4834) ஹெக்டயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள் முதலான அனைத்தையும் கொண்டுள்ளதோடு தெல்கந்த, நுகேகொட காணிப் பதிவகத்தில் F 13/72 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"மஹாகும்புர" மற்றும் "தொரகடகும்புர" என அழைக்கப்படும் காணியின் 6350ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறித்தவாறு கவுடான என்ற இடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் இலக்கங்கள், 29/14, 29/17, 29/18, சிறிவர்தன வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகளையும் கிழக்கில் குறித்த 6350ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1ஐயும் தெற்கில் குறித்த 6350ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1, பள்ளிதோர வீதி என்பவற்றையும் மேற்கில் வீதி, இலக்கங்கள், 101/4 தொடக்கம் 101/8, சிறிவர்தன வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகள், இலக்கங்கள். 29/17 மற்றும் 29/18, சிறிவர்தன வீதி, என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட நிலமனைகள் என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதின்மூன்று (A0.RO.P13) பேர்ச்சுகள் அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று இரண்டு ஒன்பது (0.0329) ஹெக்டயர் பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள் முதலான அனைத்தையும் கொண்டுள்ளதோடு தெல்கந்த, நுகேகொட காணிப் பதிவகத்தில் F13/73 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

### மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை

"மஹாகும்புர" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். ராஜேந்திரா தயாரித்த 1963.03.25ஆம் திகதிய 2575ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B (பாதை) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறித்தவாறு பள்ளிதோர இப்போது கவுடான என்ற இடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் குறித்த 2575ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு A ஐயும் கிழக்கில் பொல்கொட ஓடை இன்னும் சரியாகச் சொன்னால் ஓடைக் கரையையும் தெற்கில் டேவிட், ஏ.ஏ.கே. குணதிலக்க, செல்வி. ஜே. குணதிலக்க, திருமதி ஜே.எல்.பி. சமரசிங்க ஆகியோருக்குச் சொந்தமானதும் இலக்கங்கள், 56, 54, 52, பள்ளிதோர வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்டதுமான ஆதனங்களையும் மேற்கில் பள்ளிதோர வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி இருபத்தொன்பது தசம் பூச்சியம் ஐந்து (A0.R0.P29.05) பேர்ச்சுகள் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த, நுகேகொட காணிப் பதிவகத்தில் F 13/71 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த 2575ஆம் இலக்க வரைப்படத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B என அடையாளப்படுத்தப்பட்ட காணி கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒத்ததாக காணப்படுகின்றது

"மஹாகும்புர" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ.எவ். சமீர் தயாரித்த 1970.07.18ஆம் திகதிய 1205ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B (பாதை) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறித்தவாறு பள்ளிதோர இப்போது கவுடான என்ற இடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் குறித்த 1205ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் A1, A2, A3 என்பவற்றையும் கிழக்கில் ஓடைக் கரை வீதியையும் தெற்கில் டேவிட், ஏ.ஏ.கே. குணதிலக்க, செல்வி. ஜே. குணதிலக்க, திருமதி ஜே.எல்.எவ். சமரசிங்க ஆகியோருக்குச் சொந்தமானதும் இலக்கங்கள், 56, 54, 52, பள்ளிதோர வீதி என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்டதுமான காணிகளையும் மேற்கில் பள்ளிதோர வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி முப்பத்திரண்டு (A0.R0.P32) பேர்ச்சுகள் பரப்பளவைக் கொண்டுள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப்

பணமாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. VAT கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை, செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

ஆதனத்தைச் சென்றடையும் வழி :

தெகிவளையிலிருந்து கல்கிசை நோக்கி 400 மீற்றர்கள் பயணித்து பின்னர் இடதுபுறமாகத் திரும்பி பள்ளிதோர வீதி வழியே 1.1கி.மீ. பயணித்தால் சுமுது ராஜபக்ஷ மாவத்தைக்கு 200 மீற்றர்கள் முன்னால் குறித்த ஆதனம் இடதுபுறமாக இருக்கக்காணலாம்.

"ஏலவிலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் பெருநிறுவன அறவிடல் பிரிவினைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 0112386079"

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

**திருமதி. A.C.H. அத்துக்கோரல**
**சிரேஷ்ட முகாமையாளர்**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு**

**இலங்கை வங்கி**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு**
**03ஆம் மாடி**
**இல.1, இலங்கை வங்கி மாவத்தை**
**கொழும்பு 01.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கல்வி அமைச்சு

## இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)

## NERDC நிலையத்தில் கைத்தொழில் கட்டிடத்திற்கு அருகில் முன்தயாரிக்கப்பட்ட கொன்கிறீட் எல்லை சுவரின் நிர்மாணத்திற்கான விலைமனுக்கள்

**Bid No.: NERDC/DPC Minor(W)/02/24**

1. **இடைநிகழ்வுகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி** நீங்கலாக **2,700,000 ரூபா** ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதும் கீழே விபரிக்கப்பட்டதுமானதும் **NERDC நிலையத்தில் கைத்தொழில் கட்டிடத்திற்கு அருகில் முன்தயாரிக்கப்பட்ட கொன்கிறீட் எல்லை சுவரின் நிர்மாணத்திற்காக** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (NERDC) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| | | |
|---|---|---|
| **வேலைகளின் சுருக்கமான விளக்கம்** | : | **NERDC நிலையத்தில் கைத்தொழில் கட்டிடத்திற்கு அருகில் முன்தயாரிக்கப்பட்ட கொன்கிறீட் எல்லை சுவரின் நிர்மாணம்.** |
| **செயற்றிட்ட அமைவிடம்** | : | **NERDC நிலையம், ஏக்கல, ஜா-எல** |
| **ஒப்பந்தக் காலப்பகுதி** | : | **90 நாட்காட்டி நாட்கள்** |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் **CIDA [ICTAD] சி-09 அல்லது மேற்பட்ட** தர தேவைப்பாடுகளை கொண்டிருத்தலும் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு: **CIDA[ICTAD] சி-09 அல்லது மேற்பட்டது.**
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் அலுவலகரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் **மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்** விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
   தொலைபேசி: 011-3500017. தொலைநகல்: 011-2233153. மின்னஞ்சல்: **supplies@nerdc.lk**
6. **2023.12.29ஆம் திகதியிலிருந்து 2024.01.17 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவை** செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. **2024.01.18 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக** கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நிதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bid Invitation No.: NERDC/DPC Minor/W.02/24 – Bids for Construction of Precase Concrete Boundary Wall near Mechatronics Building at NERDC" DO NOT OPEN BEFORE 2.00 PM on 2024.01.18"** என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 42 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் **27,000 ரூபா** பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து **70 நாட்களுக்கு** செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும், அதாவது **2024.03.28 ஆம் திகதி** வரையுமானது.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**பணிப்பாளர் நாயகம்,**
**NERDC, 2P/17B, கைத்தொழில் பேட்டை**
**ஏக்கல, ஜா-எல**

**தொலைபேசி:** 011-2236284/2236307
**தொலைநகல்:** 011-2233153

**வழங்கல் அலுவலர்,**
**பெறுகைப் பிரிவு,**
**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,**
**2P/17B, கைத்தொழில் பேட்டை,**
**ஏக்கல, ஜா-எல.**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

## இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை (SLSEA)

## மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

**INVITATION FOR BIDS FOR SUPPLY, INSTALLATION, TESTING, COMMISSIONING OPERATION & MAINTENANCE OF 1Kw SOLAR PV ROOFTOP SYSTEMS FOR EACH RELIGIOUS PLACE.**
**Project Name: SLSEA – RELIGIOUS SOLAR PV ROOFTOP**
**Procurement No.: SEA/PD/RES/46-2023**

பின்வருமாறு மாகாண மட்டத்தில் மதத்தல இடங்களுக்கு Solar PV Rooftop முறைகளை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையானது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

| இல. | செயற்றிட்ட கொத்தணி செய்விதி | மாகாணம் |
|---|---|---|
| 01. | கொத்தணி 1 - மமா | மத்திய மாகாணம் |
| 02. | கொத்தணி 2 - கிமா | கிழக்கு மாகாணம் |
| 03. | கொத்தணி 3 - வமமா | வடமத்திய மாகாணம் |
| 04. | கொத்தணி 4 - வமேமா | வடமேல் மாகாணம் |
| 05. | கொத்தணி 5 - வமா | வட மாகாணம் |
| 06. | கொத்தணி 6 - மேமா | மேல் மாகாணம் |
| 07. | கொத்தணி 7 - ஊமா | ஊவா மாகாணம் |
| 08. | கொத்தணி 8 - தெமா | தென் மாகாணம் |
| 09. | கொத்தணி 9 - சமா | சபரகமுவ மாகாணம் |

1. விலைமனுவை வழங்கிய பின்னர், சித்திகரமான விலைமனுதாரர் ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து ஐந்து (05) வருட கால எல்லைக்கான இலவச பராமரித்தல் அடங்கலாக நூற்றிருபது நாட்களுள் (120) Solar PV Rooftop முறைகளை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்பட வைத்தல் ஆகியவைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
2. 5 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்படும் கேள்விக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென விலைமனுதாரர் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை **http://www.energy.gov.lk/ index.php./en/procurement** என்ற இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையின் இணைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
4. SEA/PD/RES/46-2023 என்ற குறிப்பை தெளிவாக குறிப்பிட்டு ரொக்கப் பணத்தில் கணக்கிடல் கிளையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான 5,000 ரூபாவை செலுத்திய பின்னர் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் இநிசஅ இன் பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திற்குமான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை கையேற்றுக் கொள்ளலாம். பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. விலைமனுவை மூடும் திகதிக்கு/ திறக்கும் திகதிக்கு முன்னராக, "Soorya Bala Sangramaya" என்பதற்காக இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையிடமிருந்து செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவொன்றை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
6. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'SEA/PD/RES/46-2023' என குறிப்பிடப்பட்டு, முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024 ஜனவரி 19 ஆம் திகதியன்று (இலங்கை நேரம் - GMT + 5:30 Time Zone) மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியை வந்தடையும் தன்மையில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. விதித்துரைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கியின் கீழ் செயற்படும் வங்கியொன்றிலிருந்து ஒவ்வொரு மாகாணத்திற்குமான விலைமனுக்கள் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் இலங்கை ரூபாவிற்கான (250,000 இ.ரூபா) வங்கி உத்தரவாதமொன்றுடன் ''விலைமனுப் பிணையாக'' இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. உத்தேசிக்கப்பட்டுள்ள அமைவிடங்களின் பட்டியலானது விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டிருப்பதுடன் மதிப்பீடானது மாகாணரீதியிலான கொத்தணி அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் விலைமனுதாரரானவர் ஒன்று அல்லது இரண்டு கொத்தணிகளுக்கு மாத்திரமே விலைமனுவை சமர்ப்பிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை,**
**இல. 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, கொழும்பு-07.**
**தொலைபேசி: +94 0112575203. தொலைநகல் இலக்கம்: +94 0112575089**
**மின்னஞ்சல் முகவரி: procurement.slsea@gmail.com**
**2023.12.28.**

# எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் | திகதி | முகவரி |
|---|---|---|
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 25A, பிரதான வீதி, ஹெலியகொட. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 227, டி சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொறட்டுவ. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 19, தனபம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவல. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 01/05/12/19 | பிப்ரவரி 2024 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 124/A, துட்டகெமுனு வீதி, கொகுவெல்ல. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 54, D.S. சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 197, மன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 65/A, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு13. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 02/06/13/20 | பிப்ரவரி 2024 | இல. 1024, மருதானை வீதி, கொழும்பு10. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் . |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 03, சென்.லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 18, எலகந்த, கந்தல, வத்தல. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 47, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 17, ஸ்டேஷன் வீதி, கந்தலை சந்தி, வத்தலை. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யா-எல. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 230, கண்டி வீதி, மாவன்னெல்ல. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
| 07/14/21/26 | பிப்ரவரி 2024 | இல. 69, கிருல்ல வீதி, திவுலப்பிட்டிய. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமட. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 473, நுவரெலியா வீதி, புசல்லாவ. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பொலை. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 52, டன்பரா வீதி, ஹட்டன். |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 73, கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலிய. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டிய. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல். |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 35, சரஸ்வி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 115, கொடுகொடெல்ல வீதி, கண்டி. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 298, கொழும்புவீதி, பிலிமத்தலாவ. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 13A, கண்டி வீதி, கெலியோயா. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்ட. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 94, ராஜா வீதி, மாத்தளை. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 226, டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 14, புதிய நகரம், திகன. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 56,57, எட்வின் விக்கிரமரத்ன வணிக வளாகம், புதிய நகரம், மஹியங்கனை. |
| 08/15/22/27 | பிப்ரவரி 2024 | இல. 10/2, வங்கி எதிரில், புதிய நகரம், தெஹியத்தகண்டி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 171, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | மானிப்பாய் வீதி, கைதடி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 35, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 3,5 வல்லை வீதி, சங்கானை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 126, 128, பிரதானவீதி, பருத்தித்துறை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 69, பிரதானவீதி, அச்சுவேலி |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 55, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 6, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 575, கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 76, தெல்லிப்பளை வீதி, பண்டத்தரிப்பு. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | வட்டார இல. 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, மல்லாவி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | PW வீதி, முல்லைத்தீவு. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 32B, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 12, வட்டாரஇல. 06, பிரதானவீதி, பேசாலை, மன்னார். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, மருதங்கேணி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 25, ஹிரிஜா சந்திப்பு, கல்முனைவீதி, சம்மாந்துறை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, திருக்கோவில் 01. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 04, கடிகார கோபுரம் எதிரே, அம்பாறை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, பொத்துவில். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, வவுனதீவு. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பாடசாலைஎதிரே, வைத்தியசாலைவீதி, களுவாஞ்சிக்குடி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல.71 A, பிரதான வீதி, ஆரயம்பதி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, பிரிவு 10, கொக்கட்டிச்சோலை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | "சந்தை எதிர் வளாகம்", பிரதான வீதி, செங்கலடி. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டகளப்பு. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 50/2, பிரதான வீதி, கின்னியா. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | திருகோணமலை வீதி, கண்டலடி, வாகரை. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | பிரதான வீதி, கிரன். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 151, 153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03, ஏறாவூர். |
| 09/16/24/28 | பிப்ரவரி 2024 | இல. 252B, 252/1, கண்டி வீதி, திருகோணமலை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
உதவி பொது முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

## தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

## விளையாட்டு ஆலோசகர்/ விடுதிக் காப்பாளர் பதவிகளுக்காக திறந்த ஆட்சேர்ப்பு

விளையாட்டு கற்கையின் முதன்மையான நிறுவனமான தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | விளையாட்டு ஆலோசகர் | 05 |
| 2. | விடுதிக் காப்பாளர் | 01 |

**01. விளையாட்டு ஆலோசகர்**

(கால்பந்து, கரப்பந்து, கிரிக்கெட், மேசைப் பந்து, பூப்பந்து, ஜூடோ, வலைப்பந்து, நீச்சல், தடகளம், கபடி, வலு மற்றும் தகைமையை கற்றிருக்கும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**1.1 பதவியின் பண்பு – நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியம் கொண்டது**
குறிப்பு – ஓய்வூதியத்தை கொண்டது என்பது எதிர்காலத்தில் அரசு எடுக்கும் கொள்கை ரீதியான முடிவின்படி மாறுபடும்.

**1.2 ஆட்சேர்ப்புத் தரம் - 111 தரம்**

**1.3 சம்பள அளவு**
இந்தப் பதவிக்கு அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைய MN4-2016 ரூபா 31,490-10*445-11*660-10*730-5*750-54250/- சம்பள அளவு உரித்தாகும்.

**1.4 வயதெல்லை**
விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**1.5 ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**

**1.5.1 கல்வி தகைமைகள்**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விளையாட்டு அல்லது உடற் கல்வி தொடர்பில் அல்லது முகாமைத்துவம், புள்ளிவிபரம், உளவியல், சமூக விஞ்ஞானம், ஊட்டச்சத்து, உடலியல் விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், உயிர் இயந்திரவியல், பௌதீக விஞ்ஞானம், விளையாட்டு பொருளாதார விஞ்ஞானம், விளையாட்டு நிலைமாற்ற முகாமைத்துவம், விளையாட்டு கற்பித்தல் கலை ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தைக் கொண்டதாக பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**1.5.2 தொழில் தகைமை – தேவையில்லை.**

**1.5.3 அனுபவம் - தேவையில்லை**

**1.5.4. உடல் தகைமை –** அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

**1.5.5 வேறு –**
1. இலங்கை பிரசையாக இருத்தல்
2. சிறந்த பண்புடையவராக இருத்தல்

**02. விடுதிக் காப்பாளர்**

**2.1 பதவியின் பண்பு** – நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியம் கொண்டது
குறிப்பு – ஓய்வூதியத்தை கொண்டது என்பது எதிர்காலத்தில் அரசு எடுக்கும் கொள்கை ரீதியான முடிவின்படி மாறுபடும்.

**2.2 ஆட்சேர்ப்புத் தரம்** - 111 தரம்

**2.3 சம்பள அளவு**
இந்தப் பதவிக்கு அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 03/2016 கொண்ட சம்பள சுற்றறிக்கைக்கு அமைய MN-1 2016 ரூபா 27,140-10*300-11*350-10*495-10*660-45,540 சம்பள அளவு உரித்தாகும்.

**2.4 வயதெல்லை**
விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 35 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

**2.5 ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்**

**2.5.1 கல்வி தகைமைகள்**
சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் வேறு இரு பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில் (06) பாடங்களில் கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.
மற்றும்
கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடமேனும் (01) (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்.
மற்றும்

**2.5.2 தொழில் தகைமை மற்றும் அனுபவம்**
1. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம் சிறப்பு அனுபவமாக கருதப்படும்.
2. அரச அல்லது அரச சார்பு விடுதி/ நிறுவனத்தில் உதவி மாணவர் இல்ல நிர்வாகி/ உதவி விடுதிக் காப்பாளர் அல்லது அதற்கு இணையான அல்லது உயர் பதவி ஒன்றில் 02 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

**2.5.3. உடல் தகைமை** – அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

**2.5.4 வேறு** -
1. இலங்கை பிரசையாக இருத்தல்
2. சிறந்த பண்புடையவராக இருத்தல்

- **ஆட்சேர்ப்பு முறை**

ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவது தகைமை மதிப்பீட்டு சோதனை ஒன்றில் பெற்ற பெறுபேறு அடிப்படையிலாகும். அதனால் நீங்கள் தேவையான அனைத்து விபரங்களை உறுதி செய்கின்ற ஆவணங்களின் பிரதிகளுடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 2024.01.22 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இல. 100/7, நிதஹஸ் மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என்பதோடு விண்ணப்பத்தை இடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் அறிவுறுத்தலின்றி நிராகரிக்கப்படும்.
இது தொடர்பில் மேலதிக விபரங்களை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் www.moys.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியும்.

**பணிப்பாளர்**
**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்**

## விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

### தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

### விளையாட்டு ஆலோசகர்/ விடுதிக் காப்பாளர் பதவிகளுக்காக திறந்த ஆட்சேர்ப்பு மாதிரி விண்ணப்பப் படிவம்

01) விண்ணப்பிக்கும் பதவி :
02) i. முதலெழுத்துகளுடன் கடைசிப் பெயர் :
ii. ஆரம்ப எழுத்துக்குரிய பெயர் :
iii. ஆங்கிலத்தில் ஆரம்ப எழுத்துகளுடன் பெயர் :
03) தேசிய அடையாள அட்டை இலக்கம் :
04) நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் :
05) i. நிரந்தர வதிவிட மாவட்டம் :
ii. நிரந்தர வதிவிட பிரதேச செயலாளர் பிரிவு :
06) அலுவலக முகவரி :
07) பிறந்த திகதி :
வருடம்: மாதம்: திகதி:
08) ஆண்/ பெண் தன்மை :
09) திருமணமானவர்/ திருமணமாகாதவர் :
10) விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு வயது :
வருடம்: மாதம்: திகதி:
11) கல்வித் தகைமை :

| பரீட்சை/ டிப்ளோமா/ பட்டம் (சாதாரண/ கௌரவ) | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெற்ற சித்திகள் | நிறுவனத்தின்/ பல்கலையின் பெயர் | மொழி ஊடகம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

12) தொழில் தகைமை

| பரீட்சை/ டிப்ளோமா | ஆண்டு | தோற்றிய பாடங்கள் | பெற்ற சித்திகள் | நிறுவனத்தின்/ பல்கலையின் பெயர் | மொழி ஊடகம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

13) தொழில் அனுபவம்

| தொழில் | வகித்த பதவி | காலம் | | நிறுவனம் |
|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | |

14) வேறு தகைமைகள்
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

**விண்ணப்பதாரரின் உறுதி**

...................................... ஆகிய நான் இங்கு குறிப்பிடப்பட்ட அனைத்தும் உண்மை மற்றும் சரியானது என குறிப்பிடுகிறேன். நான் அரச பணியில் இருந்து நீக்கப்பட்டு அல்லது பரிவுடைய மாற்றாக செயல்திறனற்ற அடிப்படையில் பணியில் இருந்து ஓய்வு வழங்கப்படவில்லை என பதவியை விட்டுச் சென்றவர் என கருதப்படவில்லையென குறிப்பிடுகிறேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள எந்த ஒரு விடயமும் பொய்யானது அல்லது தவறானது அல்லது என்னை தேர்வு செய்வதற்கு முன்னர் தெரிய வந்தால் நான் தகைமையற்றவராக்கப்படுவேன் என்றும் தேர்வு செய்யப்பட்ட பின் அவ்வாறான நிலை தெரியவந்தால் எந்த ஒரு இழப்பீடும் வழங்காது பதவியில் இருந்து நீக்குவதற்கு முடியும் என்றும் அறிவிக்கிறேன்.

.......................... ..........................................................
**திகதி** **விண்ணப்பதாரர் கையொப்பம்**

**அரச பணியாளராயின் திணைக்கள தலைவரின் உறுதி**

................................ அவர்களின் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கிறேன். அவர் இந்த அமைச்சு/ திணைக்களத்தில் .............................. நிரந்தர/ தற்காலிக/ அமய/ பணியாளர் ஒருவராக பணியாற்றுகிறேன் எனவும் இந்தப் பதவிக்காக தேர்வு செய்யப்பட்டால் பணியில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என அறியத்தருகிறேன்.

.......................... ..........................................................
**திகதி** **திணைக்கள தலைவர் கையொப்பம்**

**உத்தியோகபூர்வ முத்திரை**

---

# மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

## 1998 ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

அனுராதபுரம் மாவட்டத்தின் கிழக்கு நுவரகம் மாகாணம் பிரதேச செயலாளர் பிரிவில் நுவரவெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 110190 துண்டு இல. 01 பத்திர இல. 01 துண்டு இல. 40ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 527/15, 11ஆம் படி, டீ.எஸ். சேனநாயக மாவத்தை அனுராதபுரம் (விலாசம்) எனும் விலாசத்தைக் கொண்ட சூரிய ஆராச்சிகே அமரசிங்ஹ (முழுப்பெயர்) எனும் ஆள் மரணமடைந்துள்ளார். அவரது உரித்தாளர் எவரேனும் இல. 87/25A தர்மபால மாவத்தை அனுராதபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.01.31ஆந் திகதிக்கு முன்னர் சமுகம் தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்**

---

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசன திணைக்களம்

**தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**ஜா-எல திட்டத்தின் ஜா-எல வெள்ள அணைக்கட்டில் வெள்ள பாதுகாப்பு சுவரின் நிர்மாணம் - கம்பஹா மாவட்டம்**

**Contract No.: ID/HO/CT/AGO-FP/NCB/2023/10**

2023.12.08 ஆம் திகதியன்றும் 2023.12.12 ஆம் திகதியன்றும் டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்டுள்ள விலைமனு அறிவித்தலுக்கு பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென இத்தால் நான் அறிவிக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| விலைமனு மூடும் திகதி (மீளாக்கம் செய்யப்பட்டது) திகதி மற்றும் நேரம்: | : | 2024.01.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| விலைமனுவின் செல்லுபடியாகும் கால எல்லை | : | 2024.04.12 ஆம் திகதியன்று வரையும். |
| விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் கால எல்லை | : | 2024.05.10 ஆம் திகதியன்று வரையும். |

விலைமனுக்கோரல் ஆவணத்தை 2024.01.11 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் கொள்வனவு செய்யலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன திணைக்களம்,**
**இல.: 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**

**திகதி: 29.12.2023**

---

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

**2023.11.08** அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது :

1. பிரசித்த நொத்தாரிசு **R.A.I.P. விஜயவிக்கிரம** அத்தாட்சிப்படுத்திய **2023.01.30**ஆம் திகதியிட்ட **2183**ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட **மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 01இன்** மீது **2023.10.06** வரையான வட்டியும் முதலுமாக **6,032,935.14 ரூபாயும்** (ஆறு மில்லியன் முப்பத்திரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தைந்து ரூபாய் பதினான்கு சதம்) அத்துடன் **5,100,000.00 ரூபாய்** (ஐந்து மில்லியன் நூறாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு **முப்பத்திரண்டு தசம் இரண்டு ஐந்து (32.25%)** வீதப்படி **2023.10.07** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் **மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 02இன் மீது 2023.10.06** வரையான வட்டியும் முதலுமாக **2,204,345.28 ரூபாயும்** (இரண்டு மில்லியன் இருநூற்று நான்காயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து ரூபாய் இருபத்தெட்டுச் சதம்) அத்துடன் **2,000,000.00** ரூபாய் (இரண்டு மில்லியன் ரூபாய்) மீது ஆண்டுக்கு **பதினெட்டு (18%)** வீதப்படி **2023.10.07** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் மறுசீரமைக்கப்பட்ட தவணைக் **கடன் B மீது 2023.10.06** வரையான வட்டியும் முதலுமாக **1.534,738.18** ரூபாயும் (ஒரு மில்லியன் ஐந்நூற்று முப்பத்து நான்காயிரத்து எழுநூற்று முப்பத்தெட்டு ரூபாய் பதினெட்டுச் சதம்) அத்துடன் **1,500,000.00 ரூபாய்** (ஒரு மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு **நான்கு (4%)** வீதப்படி **2023.10.07** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரையான மேலதிக வட்டியும் இல. 288, UMU வீதி, கற்பிட்டி எனும் முகவரியைச் சேர்ந்த **யூசுப் அஸீஸ்தீன் அஹமட் ஷா.்.பி** என அறியப்படும் **திரு. யூசுப் அஸீஸ்தீன் அஹமட் சா.்.பி** மற்றும் **அஹமட் ஷா.்.பி ஷல்வா** ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாக உள்ளது.

2. மேற்குறிப்பிட்ட **2183ஆம்** இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட **மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 01** மீதான மேற்குறித்த **6,032,935.14** ரூபாயையும் (ஆறு மில்லியன் முப்பத்திரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தைந்து ரூபாய் பதினான்கு சதம்) **மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் 02** மீதான **2,204,345.28** ரூபாயையும் (இரண்டு மில்லியன் இருநூற்று நான்காயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து ரூபாய் இருபத்தெட்டுச் சதம்) **மறுசீரமைக்கப்பட்ட தவணைக் கடன் B** மீதான **1,534,738.18** ரூபாயையும் (ஒரு மில்லியன் ஐந்நூற்று முப்பத்து நான்காயிரத்து எழுநூற்று முப்பத்தெட்டு ரூபாய் பதினெட்டுச் சதம்) அவற்றுடன் **2023.10.07** தொடக்கம் விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய இங்கு கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தைப் பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த **M/s T&H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன** அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி **கற்பிட்டிக்** கிளையின் **முகாமையாளருக்கும்** இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

**“சாந்தி கனி”** என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் **எம்.எச். சாபர்** தயாரித்த **2015.06.26ஆம்** திகதிய **3447ஆம்** இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 1** என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி **வடமேல்** மாகாணம் **புத்தளம்** மாவட்டம் **கற்பிட்டி** கோரளை, **கற்பிட்டி** பற்று, **கற்பிட்டி** பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட **இல. 630/C மண்டலகுடா** கிராம சேவகர் பிரிவிலுள்ள **வன்னிமுந்தல்** பிரதேசத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** முத்து மீரா நாச்சியா என்பவரின் காணியையும் **கிழக்கில்** ஃபாத்திமுத்து ஜொஹரா என்பவரின் காணியையும் தெற்கில் பாதையையும் **மேற்கில்** பாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி **ஒன்பது தசம் ஐந்து (A0.RO.P9.5) பேர்ச்சுகள்** பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் முதலான அனைத்தையும் கொண்டுள்ளது.

**குறித்த காணித்துண்டு 1 கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.**

**“சாந்தி கனி”** என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் **என். சங்கரலிங்கம்** தயாரித்த **2001.05.09**ஆம் திகதிய **4659**ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள **காணித்துண்டு 1** என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி **வடமேல்** மாகாணம் **புத்தளம்** மாவட்டம் **கற்பிட்டி** கோரளை, **கற்பிட்டி** பற்று, **கற்பிட்டி** பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட **இல. 630/C மண்டலகுடா** கிராம சேவகர் பிரிவிலுள்ள **வன்னிமுந்தல்** பிரதேசத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** முத்து மீரா நாச்சியா என்பவரின் காணியையும் **கிழக்கில்** ஃபாத்திமுத்து ஜொஹரா என்பவரின் காணியையும் **தெற்கில்** பாதையையும் **மேற்கில்** பாதையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி **ஒன்பது தசம் ஐந்து (A0.R0.P9.5) பேர்ச்சுகள்** பரப்பளவையும் அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் முதலான அனைத்தையும் கொண்டுள்ளதோடு **புத்தளம்** காணிப் பதிவகத்தில் D53/62 c/o D53/111 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,**

**திரு. S.P.M.L.H. பத்திராஜ**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**கற்பிட்டிக் கிளை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

# விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

இலங்கை பெருந்தோட்டக் கைத்தொழிலின் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு, இலங்கையில் தேசிய பெருந்தோட்டக் கொள்கை வெளியீட்டின் வரைவு பொது மக்களின் விமர்சனத்திற்காக அமைச்சு இணையதளம் www.plantation.gov.lkஇல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவ் வரைவு சம்பந்தமாக உங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் 2024.01.07 இற்கு முன்பு mpidevelopment03@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு தயவுடன் அழைப்பு விடுக்கின்றேன்.

**செயலாளர்,**
**விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

---

# கேள்வி கோரல்

## இலங்கை தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் (நேர்ட் நிலையம்)

## ஏக்கல ஜாஎல

### 2024ம் ஆண்டிற்காக நேர்ட் நிலையத்தின் உணவகத்தை நடத்திச் செல்லல்

**கேள்வி இலக்கம்: NERDC/DPC Minor (s)/03/23**

நேர்ட் நிலையத்தின் உணவகத்தை ஒரு வருட கால எல்லைக்கு நடத்திச் செல்வதற்காக பெறுகைக் குழுவின் தலைவரால் குறித்த துறையில் அனுபவமுள்ள வழங்குநர்களிடமிருந்து 2024.01.16 பிற்பகல் 2.00 வரை பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

மீளளிக்கப்படாத ரூ.500/- கேள்விக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் நிறுவனத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை வழங்கல் அதிகாரிக்கு சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை 2024.01.15 வரை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய அளவிலான ஒப்பந்தங்கள்)**
**நேர்ட் நிலையம்**
**2பீ/17பீ,கை.அ.ச, தொழில்நுட்ப குடியிறுப்பு**
**ஏக்கல, ஜாஎல**
**தொ.பே.இல.: 0112236284, 2236307, 011 - 3500017**
**பெக்ஸ்: 011 - 2233153**
**மின்னஞ்சல்: supplies@nerdc.lk**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer aDz it's what you want
Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted

For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# பலாங்கொட பிரதேச சபை

## வரிப்பண புதிய மதிப்பீடு - 2024

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) உப அத்தியாயத்தின் கீழ் பலாங்கொட பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பலாங்கொட பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் முன்னேற்றமடைந்துள்ள பிரதேசமென வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையான ஆதனங்கள் அல்லது நிலையான ஆதன வகைகளுக்கு இயைபாக 2024ஆம் வருடத்திற்கான வரிப்பணம் மீள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு இயைபான மதிப்பீட்டு ஆவணம் வரி செலுத்தும் மக்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்காக பலாங்கொட பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் இது தொடர்பில் எதிர்ப்புகள் இருக்கமானால் மதிப்பீட்டு அறிவித்தல் கிடைத்து 30 நாட்களுக்குள் பலாங்கொட பிரதேச சபைக்கு அனுப்புமாறு அறிவிக்கப்படுகின்றது.

**டீ.எஸ். வத்துகாரவத்த,**
**செயலாளர்,**
**பலாங்கொட பிரதேச சபை.**




**Applicable Rates for Obituary Notices of Daily News**

**For 15 Words - Rs. 300**

* Each additional word Rs. **20/-**

N. B. - Death Certificate is essential

**011 2 429 342 / 011 2 429 343**
classified@lakehouse.lk
frontoffice@lakehouse.lk

## பெயர் மாற்றம்

கொழும்பு 10, மாளிகாவத்தை பிளேஸ், RB 213ல் வசித்து வரும் அங்கொடமரகே லக்மால் எனும் நான் கடந்த 2013.01.10ம் திகதி இஸ்லாம் மார்க்கத்தை தழுவி அப்துல் ரஷீத் எனும் பெயரை சூட்டியுள்ளேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவித்து இன்று முதல் அப்துல் ரஷீத் எனும் பெயரில் கையொப்பம் இடுகிறேன்.

**A Rasheed**

# இலங்கை வங்கி

**விடுமுறை விடுதியாகப் பயன்படுத்த பொருத்தமான இடம் வாடகைக்கு தேவைப்படுகின்றது.**

**இலங்கை வங்கியின் ஊழியர்கள் விடுமுறை விடுதியாகப் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான இடம் பின்வரும் வசதிகளோடு மஹரகமவை அண்மித்ததாக வாடகைக்கு தேவைப்படுகின்றது.**

1. கொட்டாவைக்கும் நுகேகொடைக்கும் இடையில் ஹைலெவல் பாதைக்கு அணிமித்த குடியிருப்புப் பகுதியில் போக்குவரத்து வசதிகளுடன் அமைந்திருக்க வேண்டும்.
2. இணைந்த குளியலறை வசதிகளோடு 05 க்கு மேற்பட்ட படுக்கையறைகளைக் கொண்டதாகவும் குறைந்தது 20 பேர் பயன்படுத்தக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
3. குறைந்தது 05 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
4. தடங்கலில்லாத நீர்விநியோக வசதி, மூன்று கட்ட மின்சாரம் என்பவற்றுடன் படுக்கையறைகள் மற்றும் வெளிக்கூடம் என்பன குளிரூட்டப்பட்டிருத்தல் வேண்டும். (சூரிய சக்தி மின்சாரம் விரும்பத்தக்கது)
5. பராமரிப்பாளருக்கும் சாரதிக்கும் குளியலறை வசதியோடு தனியான தங்குமிட வசதி இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய தகைமைகளை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

அ) உரிமைத்துவ உறுதி அல்லது உரிமைச் சான்றிதழ்
ஆ) அங்கீகாரம் பெற்ற அளவையியல் திட்டம்
இ) அங்கீகாரம் பெற்ற கட்டடத்தின் திட்ட வரைபு
ஈ) இணக்கச் சான்றிதழ் (COC)
உ) முக்கிய நகரங்களுக்கான திசை வரைபடங்கள்

- எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்

இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைகூறுவோர் மேற்கூறிய ஆவணங்களை பதிவுத் தபாலில் அனுப்பவும் அல்லது விலைகூறல் பெட்டியில் 2024/01/18 ஆம் திகதி அல்லது அதற்கு முன் இட வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை வங்கியின் ஊழியர்கள் விடுமுறை விடுதியாகப் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான இடத்துக்கான விலைகோரல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவு
14 ஆம் மாடி, தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல: 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
தொலைபேசி: 011-2204271 / 011-2430268 தொலைநகல்: 011-2449629

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**
**அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்த இலக்கம் | அதிவேக நெடுஞ்சாலைப் பிரிவு |
|---|---|---|
| வாகனங்களுக்கான சேவைகளை முன்னெடுத்துச் செல்லல் (உராய்வுநீக்கிகள் நீங்கலானது) | **RDA/ EOM&M/ Beli/Pro/ Bid/2023/173** | வடக்குத் திசை அதிவேக நெடுஞ்சாலையின் நீடிப்பு (கொடகமவிலிருந்து மத்தள வரையும்) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.12.29 ஆம் திகதியிலிருந்து 2024.01.18 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (தொலைபேசி: 0472251892, 0766265264, 0763179185)

**தலைவர்,**
**அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர், (அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு), மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹவத்த,**
**பெலிஅத்த.**

## கேள்விக்கான அழைப்பு

1. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான கண்டி மாவட்டத்தின் கெட்டம்பே சமுர்த்தி சனசமூக வங்கிக் கட்டிடத்தின் முதலாம் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 16.00 மில்லியன் பெறுமதியுடைய ஒப்பந்தத்திற்காக CIDA பதிவு C-5, 6, 7 தகைமையுடைய அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத அது பற்றி ஆர்வம் காட்டுகின்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்டி மாவட்ட செயலாளர் மற்றும் பெறுகைக்குழுவின் தலைவரால் 2024.01.24 மு.ப. 11.00 வரை கேள்வி அழைப்பு விடுக்கப்படுகிறது.
2. கேள்வி ஆவணங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட சகல விபரங்களையும் www.kandy.dist.gov.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**சந்தன தென்னக்கோன்**
**பெறுகைக்குழுவின் தலைவர்,**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்,**
**மாவட்ட செயலகம், கண்டி.**

**Repeat Your ad For Better Offers**

# அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## உள்நாட்டலுவல்கள் பிரிவு

## பெறுகை அறிவித்தல்

## 2024ஆம் ஆண்டிற்காக சுத்திகரிப்புச்சேவை வழங்குதல் சார்பாக கேள்விகோரல்

அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்நாட்டலுவல்கள் பிரிவு, கொழும்பு மாவட்ட செயலகம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம் மற்றும் கொழும்பு மாவட்ட தேர்தல் அலுவலகம் அமைந்துள்ள "நிலமெதுர" நிர்வாகக் கட்டிடத்தொகுதிக்காக சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. 2023.12.29 முதல் 2024.01.11 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை மீளளிக்கப்படாத ரூ.3500/- கட்டணத்தை உள்நாட்டலுவல்கள் பிரிவின், 16ம் மாடியில் அமைந்துள்ள நிதிப்பிரிவின் காசாளர் பிரிவிற்கு செலுத்தி, பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் பெயரில் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்னர் பெறுகை கிளையில் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். அங்கு குறிப்பிடப்படும் கால எல்லையில் www.moha.gov.lk இணையதளத்தின் மூலம் கேள்வி ஆவணங்களை பரீட்சிக்கும் வாய்ப்பு வழங்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

03. பொறியிடப்பட்ட கேள்விகள் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதி" என இரு பிரதிகளுடன் வேறுவேறாக முத்திரையிட்டு பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுத்திகரிப்பு சேவைகளை வழங்குவதற்கான கேள்விகோரல் - 2024" என்று குறிப்பிட்டு, 2024.01.12 மு.ப.10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது "நிலமெதுர", எல்விட்டிகல மாவத்த, கொழும்பு - 15 இல் அமைந்துள்ள உள்நாட்டலுவல்கள் பிரிவின் 16 ஆம் மாடியில் நிதிப்பிரிவின் பெறுகை பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம். உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் 2024.03.29 வரை செல்லுபடியாதல் வேண்டும். பதிவுத்தபாலில் கேள்விகளை சமர்ப்பிப்பதாயின் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். (தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்)

**கணக்காளர் (பெறுகை)**
**உள்நாட்டலுவல்கள் நிதிப்பிரிவு**
**16ஆம் மாடி , "நிலமெதுர",**
**எல்விட்டிகல மாவத்த,**
**கொழும்பு - 05**

04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் "நிலமெதுர" கட்டிடத்தின் 16ம் மாடியில் அமைந்துள்ள உள்நாட்டலுவல்கள் நிதிப்பிரிவில் மு.ப. 10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூல அதிகாரம் ஒப்படைக்கப்படுபவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொ.பே. இலக்கம் : 011-2050420

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,**
**"நிலமெதுர",**
**எல்விட்டிகல மாவத்தை,**
**நாராஹேன்பிட்ட,**
**கொழும்பு - 05**

**மீள்விலைமனுவிற்கான அழைப்பு (IFB)**

# உள்ளூராட்சி திணைக்களம், வடமாகாணம்

# சாவகச்சேரி பிரதேசசபை

**(Chavakachcheri P.S)**

**உள்ளூர் அபிவிருத்தி உதவித்திட்டம்.**

**SUPPLYING AND FIXING OF PRESCHOOL PLAYING EQUIPMENT IN INKARAN PRESCHOOL AT ALLARAI**

**LDSP/NP/JAF/CHAVA.PS/PT-2/2023/01(IV)**

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு, உலக வங்கியிடமிருந்து உள்ளூர் அபிவிருத்தி துணையளித்தல் செயற்றிட்டத்திக்காக உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளதுடன் இக் கடன் வருமானத்தின் ஒரு பகுதியை ஒப்பந்தத்தின் கீழ் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம், அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
03. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. இவ் விலைமனுக் கோரலானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை Schedule –V,VI இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2023.12.29 தொடக்கம் 2024.01.26 வரையான காலப்பகுதியில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரியில் 2023.12.29 ஆம் திகதியிலிருந்து 2024.01.26 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
08. கேள்வி ஆவணத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.01.26 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2024.01.11 திகதி மாலை 15.00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
11. கேள்வி பிணை வைப்பு 2024.03.14 வரை செல்லுபடியாகும். நிபந்தனையற்ற மற்றும் வங்கி உத்தரவாத கேள்வி பிணை பாதுகாப்பு 2024.04.11 வரை செல்லுபடியாகும்.

| தொடர் இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (With out Vat) (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லு படியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லு படியாகும் காலம் |
| 01 | LDSP/ NP/ JAF/CHAVA. PS/PT2/ 2023/01(IV) | Supplying and fixing of Pre School Playing Equipment In Inkaran Pre school at Allarai. | 1.4 | 30 நாட்கள் | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் | 49 நாட்கள் | 14,500.00 | 2024.04.11 |

**தலைவர்.**
**பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை,**
**கொடிகாமம்.**
**29.12.2023**

### சிம்பாப்வே அணிக்கு எதிரான

# இலங்கை உத்தேச அணியில் பல முன்னணி வீரர்களுக்கு இடமில்லை

இலங்கை வரும் சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு 21 பேர் கொண்ட இலங்கை உத்தேச அணி ஒன்று தேர்வு செய்யப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.



அந்தக் குழாத்தில் இருக்கும் வீரர்களில் இருந்து 15 வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு இறுதிக் குழத்திற்கு விளையாட்டுத் துறை அமைச்சரின் அனுமதியை பெற எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் நியமிக்கப்பட்ட உபுல் தரங்க தலைமையிலான புதிய தேர்வுக் குழுவினால் முதல் முறையாக தேர்வு செய்யப்பட்டிருக்கும் முதல் அணியாக இது உள்ளது.

இதில் அண்மையில் இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ண போட்டியில் ஆடிய குசல் பெரேரா, திமுத் கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, துஷான் ஹேமன்த, கசுன் ராஜித்த, மதீஷ பதிரண, அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் லஹிரு குமார ஆகியோர் இந்த உத்தேச அணியில் இடம் பெறவில்லை. சஹன் ஆரச்சிகே, சாமிக்க குணசேகர, அவிஷ்க பெர்னாண்டோ, நுவனிது பெர்னாண்டோ, ஜனித் லியனகே, கமிந்து மெண்டிஸ், அக்கில தனஞ்சய, அசித்த பெர்னாண்டோ, ஜெப்ரி வென்டர்சே போன்ற புதிய மற்றும் முன்னர் இலங்கை அணிக்காக ஆடிய வீரர்கள் இந்த உத்தேச அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உலகக் கிண்ணத்தில் இரண்டு போட்டிகளில் ஆடி பின்னர் காயத்தால் விலகிய அணித் தலைவர் தசுன் ஷானக்கவும் இந்த உத்தேச அணியில் சேர்க்கப்பட்டிருப்பதோடு உபாதை காரணமாக உலகக் கிண்ணத்தில் பங்கேற்காத சுழற்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்கவும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதில் துடுப்பாட்ட வீரர்களாக குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, பெத்தும் நிசங்க, சதீர சமரவிக்ரம, அவிஷ்க பெர்னாண்டோ, நுவனிந்து பெர்னாண்டோ, ஜனித் லியனகே குழாத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி 3 ஆம் திகதி இலங்கை வரும் சிம்பாப்வே அணி ஜனவரி 6, 8 மற்றும் 11 ஆம் திகதிகளில் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடவுள்ளது. இந்தப் போட்டிகள் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையில் அதே மைதானத்தில் மூன்று போட்டிகளைக் கொண்ட டி20 தொடர் நடைபெறும்.

### ஆஸி.– பாகிஸ்தான் டெஸ்ட்

# மாயமான நடுவரால் போட்டியில் தாமதம்



மெல்போர்னில் நடைபெற்று வரும் இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நடுவர் மின்தூக்கியில் சிக்கிக் கொண்டதால் ஆட்டத்தில் சில நிமிடங்கள் தாமதம் ஏற்பட்டது.

ஆட்டத்தின் மூன்றாவது நாளான நேற்று (28) பகல்போசண இடைவேளைக்குப் பின் அரங்கில் இருந்த 3ஆவது நடுவர் ரிச்சர்ட் இல்லிங்வர்த் திடீரென காணாமல்போனார். அதனால் போட்டி நிறுத்தப்பட்டது. நடுவர் எங்கே என்று அனைவரும் தேடினார்கள்.

சில நிமிடங்கள் கழித்து மிகவும் சோர்வாக வந்த நடுவர் நாற்காலியில் அமர்ந்து தாம் மின்தூக்கியில் மாட்டிக் கொண்டதாக வேடிக்கையாக தெரிவித்தார்.

மைதானத்தின் மற்றொரு தளத்திற்கு சென்று வரும் வழியில் அவர் மின்தூக்கியில் மாட்டிக்கொண்டதாக தெரிகிறது. அதன் பின் அதிலிருந்து வந்த அவர் நாற்காலியில் அமர்ந்து "நான் நன்றாக இருக்கிறேன்" என்பது போல் சமிக்ஞை காட்டினார்.

இந்த டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின்போது ஆஸி. அணி இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 241 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 318 ஓட்டங்களை பெற்றதோடு பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 264 ஓட்டங்களை குறித்தது. இந்நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆடி வரும் ஆஸி. அணி நேற்று ஆட்டநேர முடிவின்போது 6 விக்கெட்டுகளை இழந்து 187 ஓட்டங்களை பெற்றுள்ளது. ஷோன் மார்ஷ் 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

# சர்வதேச அழுத்தத்திற்கு மத்தியிலும் காசாவில் இஸ்ரேல் தொடர்ந்தும் இடைவிடாது தாக்குதல்

## உயிரிழப்பு எண்ணிக்கை வேகமாக அதிகரிப்பு



மத்திய காசாவில் இஸ்ரேலியப் படை தரை, வான் மற்றும் கடல் மார்க்கமாக சரமாரி தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் அங்கு உயிரிழப்பு எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது. போரில் இருந்து தப்பிக்க ஆயிரக்கணக்கான மக்கள் முயன்று வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

காசாவில் மோசமடைந்திருக்கும் மனிதாபிமான நெருக்கடியை தணிப்பது மற்றும் போர் நிறுத்தம் ஒன்றுக்கு சர்வதேசம் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றபோதும் இஸ்ரேல் தனது உக்கிரத் தாக்குதல்களை தொடர்ந்த வண்ணம் உள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதாக அது உறுதியாகக் கூறி வருகிறது.

இஸ்ரேலிய போர் விமானங்கள் மத்திய காசாவில் உள்ள அல் நுஸைரத் மீது நடத்திய மூன்று வான் தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்தது.

மறுபுறம் நேற்று (28) கான் யூனிஸ் மருத்துவமனை ஒன்றுக்கு அருகில் நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டு மேலும் 12 பேர் காயமடைந்துள்ளனர். பலஸ்தீன செம்பிறை சங்கத்தினால் நடத்தப்படும் அல் அமல் மருத்துவமனைக்கு அருகில் ஒரு மணி நேரத்திற்குள் மூன்று தடவை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதே பகுதியை இலக்கு வைத்து புதனன்று நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கான் யூனிஸ் மற்றும் மத்திய பகுதிகளில் தாக்குதல்கள் தீவிரமடைந்திருக்கும் நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் கால்நடையாகவும், கழுதை வண்டிகளிலும், கார்களிலும் தப்பிச் செல்வதை தமது ஊழியர்கள் பார்த்ததாக ஐ.நாவின் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. வீதியை ஒட்டி தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அது கூறியது.

இராஜதந்திர ரீதியில் இஸ்ரேலுக்கான அழுத்தமும் அதிகரித்து வருகிறது. இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைபேசியில் அழைத்த பிரான்ஸ் ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன், பிராந்திய மற்றும் சர்வதேச பங்காளிகளின் உதவியுடன் நீடித்த போர்நிறுத்தத்தை நோக்கி செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

மத்திய காசாவின் அல் மகாசி மாவட்டத்தில் வான் தாக்குதல் ஒன்றில் ஐந்து பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக மருத்துவர்கள் கூறியிருப்பதோடு வடக்கின் காசா நகரில் ஏழு பலஸ்தீனர்களின் சடலங்கள் அல் ஷிபா மருத்துவமனைக்கு வந்ததாக குறிப்பிட்டுள்ளனர்.

இரவு முழுவதும் இஸ்ரேலிய ஷெல் தாக்குதல்கள் நீடித்ததாக மத்திய காசா குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இஸ்ரேலிய டாங்கிகள் அல் புரைஜ் மற்றும் அல் மகாசி பகுதிகள் ஊடாக செல்ல முயலும் நிலையிலேயே அங்கு தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன.

இதனால் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 21,110 ஆக உயர்ந்துள்ளது. இதில் குறைந்தது 8,200 சிறுவர்கள் அடங்குவர். மேலும் 55,243 பேர் காயமடைந்துள்ளனர்.

மறுபுறம் காசாவில் தொடர்ந்து கடுமையான எதிர்ப்பை சந்தித்து வரும் இஸ்ரேலிய இராணுவத்தின் மேலும் மூன்று வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். தெற்கு மற்றும் மத்திய காசாவில் புதன்கிழமை இடம்பெற்ற மோதல்களில் இவர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

காசா பகுதியில் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மாத்திரம் 22 இஸ்ரேலிய துருப்புகள் கொல்லப்பட்டிருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது. இதன்மூலம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் காசாவில் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் அங்கு கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 167 ஆக உயர்ந்துள்ளது.

காசாவின் 2.3 மில்லியன் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அனைவரும் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதோடு பலரும் அந்த குறுகிய நிலப்பகுதியில் பல தடவைகள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தப் போர் பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை தூண்டும் என்று மேற்கத்திய மற்றும் மத்திய கிழக்கு அரசுகள் கவலை அடைந்துள்ளன. இதில் லெபனானுடனான இஸ்ரேலின் வடக்கு எல்லையில் தொடர்ந்து பதற்ற சூழல் நீடிக்கிறது. முந்தைய எந்த நாட்களை விடவும் ஹிஸ்புல்லா அமைப்பு கடந்த புதனன்று இஸ்ரேலை நோக்கி ரொக்கெட் குண்டுகள் மற்றும் ஆயுதம் சுமந்த ஆளில்லா விமானங்களை அனுப்பி இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஹிஸ்புல்லா இராணுவத் தளங்கள் மற்றும் மற்ற இடங்களை இலக்கு வைத்து வான் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. நிலைமை மாற்றப்பட வேண்டும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் பென்னி கான்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

"ஹஸ்புல்லாக்களை எல்லையில் இருந்து விலக்கி வைப்பதற்கும் இஸ்ரேலின் வடக்கு குடியிருப்பளர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துவதற்கும் சர்வதேசம் மற்றும் லெபனான் அரசு செயற்படாவிட்டால், இஸ்ரேலிய இராணுவம் அதனைச் செய்யும்" என்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கான்ட்ஸ் குறிப்பிட்டார்.

சிரியா மீது இஸ்ரேல் நடத்தியதாக குற்றம்சாட்டப்படும் ஏவுகணைத் தாக்குதல் ஒன்றில் கடந்த திங்களன்று கொல்லப்பட்ட ஈரானின் மூத்த தளபதி ராசி முசாவியின் கொலைக்கு பழிதீர்க்க தாம் அல்லது தமது கூட்டணிகள் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான நேரடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரான் புரட்சிக் காவல் படை புதன்கிழமை எச்சரித்திருந்தது.

இதேநேரம் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு கோலன் குன்று பகுதியில் உள்ள கிராமம் ஒன்றுக்கு அருகில் நேற்று ஆளில்லா விமானம் ஒன்று விழுந்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. இதற்கு ஹமாஸ் அமைப்புடன் நெருக்கமான ஈராக் குழு ஒன்று பொறுப்பேற்றுள்ளது.

காசா போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்திருப்பதோடு அங்கு இதுவரை 76 சிறுவர்கள் உட்பட 313 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜெனின் மற்றும் ரமல்லா பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவத்தின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்று தீவிரம் அடைந்திருந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

## காசாவில் தஞ்சமடையவும் இடமின்றி மக்கள் தவிப்பு



மத்திய காசாவில் இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் மற்றும் தரைவழி தாக்குதல்கள் உக்கிரமடைந்திருக்கும் நிலையில் அங்கு ஏற்கனவே இடம் பெயர்ந்துள்ள பலஸ்தீனர்கள் மேலும் தெற்காக வெளியேற்றப்பட்டு வருகின்றனர். எனினும் கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் மக்கள் இந்தப் போரினால் இடம்பெயர்ந்துள்ள நிலையில், தெற்கு காசாவில் மக்கள் தஞ்சமடைவதற்கு இட வசதி தீர்ந்து வருவதால் தற்காலிக முகாம்களை பெறுவதற்கு மக்கள் போராடி வருகின்றனர்.

"குண்டு தாக்குதல்களின் தீவிரம் அதிகரித்து, நெருங்கி வருகிறது. அது நேற்று இரவு பயங்கரமானதாகவும் தாங்க முடியாததாகவும் இருந்தது" என்று சொன்டோஸ் என தனது முதல் பெயரை மாத்திரம் கூறிய ஒருவர் 'மிடில்ஈஸ்ட் ஐ' இணைய செய்தி நிறுவனத்திற்கு புதன்கிழமை (27) குறிப்பிட்டிருந்தார்.

மத்திய காசாவின் புரைஜ் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டிருந்தது. இந்தப் பகுதியில் போருக்கு முன் சுமார் 90,000 பேர் வாழ்ந்ததோடு தற்போது அங்கு 61,000 இடம்பெயர்ந்த மக்களும் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு காசாவில் இருந்து வெளியேறியவர்களாவர்.

புரைஜ் அகதி முகாமும் காசாவின் ஏனைய இடங்கள் போன்று 1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது வெளியேற்றப்பட்டு அடைக்கலம் பெற்றவர்கள் வசிக்கும் பகுதியாகும்.

தற்போது இங்குள்ள மக்கள் கால்நடையாகவும் கழுதை வண்டிகளிலும் தமது உடைமைகளைச் சுமந்தபடி மேலும் தெற்காக டெயிர் அல் பலா பகுதியை நோக்கி வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் தங்குமிடங்களில் ஏற்க முடியுமான அளவை விட மக்கள் பல மடங்கு நிரம்பியிருப்பதால், புதிதாக வருபவர்கள் குளிர்கால இரவிலும் நடைபாதைகளில் கூடாரங்களை அமைத்துள்ளனர். பாதுகாப்பானது என கருதி பெரும்பாலான மக்கள் அல் அக்ஸா தியாகிகள் மருத்துவமனையைச் சூழ கூடாரங்களை அமைத்துள்ளனர்.

எனினும் இஸ்ரேலின் தாக்குதலுக்கு முன் காசாவின் எந்தப் பகுதியும் பாதுகாப்பாக இல்லை. டெயிர் அல் பலா மற்றும் தெற்கு முனையான ரபா பகுதியில் சன நெரிசல் மிக்க பகுதியாக மாறியுள்ளன. இந்தப் பகுதிகளிலும் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதோடு தரைப் படைகளும் இங்கு வரும் என்று பலரும் அஞ்சுகின்றனர்.

## உக்ரைனுக்கு கடைசி ஆயுத உதவியை அளித்தது அமெ.



அமெரிக்க அரசாங்கம் உக்ரைனுக்குக் கடைசி முறையாக ஆயுதங்களை அனுப்பிவைத்துள்ளது.

தற்போது உக்ரைனுக்கு ஆயுதங்கள் அனுப்ப வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் கீழ் எஞ்சியுள்ள கடைசி ஒரே முறை இது என்று அமெரிக்கா அறிவித்தது.

250 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஆகாயத் தற்காப்பு ஆயுதங்களும் மற்ற பல எறிகணைகளும் அனுப்பப்பட்டுள்ளன. ரஷ்ய ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போரிடும் உக்ரைனுக்கு தொடர்ந்து உதவிகள் வழங்குவது தொடர்பில் அமெரிக்கா முடிவு செய்யவேண்டியுள்ளது.

மிகப் பெரிய ரஷ்யப் படையை எதிர்த்துப் போரிட உக்ரைனுக்கு அமெரிக்காவின் ஆயுத மற்றும் நிதி உதவிகள் அவசியமாகும்.

உக்ரைனுக்கு ஆதரவளிக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்னுரிமை அளித்தார். ஆனால் அந்த விவகாரத்தில் அமெரிக்காவின் ஜனநாயக, குடியரசுக் கட்சிகள் மாறுபட்ட நிலைப்பாட்டை கொண்டுள்ளன.

உதவிகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் கோருகின்றனர்.

அடுத்த மாதம் 8ஆம் திகதி செனட் சபை கூடும்போது, உக்ரைனுக்குத் தொடர்ந்து ஆதரவளிப்பதன் முக்கியத்துவம் குறித்துப் பேசி ஒப்புதல் பெற ஜனநாயகக் கட்சி திட்டமிட்டுள்ளது.

## இந்தோனேசிய மாணவர்களால் துரத்தப்பட்ட ரொஹிங்கியர்கள்



இந்தோனேசியாவின் மேற்கு மாகாணமான அச்சேவில் தற்காலிக முகாம்களில் அடைக்கலம் பெற்றிருக்கும் ரொஹிங்கிய அகதிகளை நாடுகடத்தக் கோரி அவர்கள் தங்கியுள்ள தற்காலிக முகாம்களை ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆக்கிரமித்துள்ளனர்.

கடந்த மாதத்திலிருந்து அச்சேவுக்கு வந்துகொண்டிருந்த அகதிகளுக்கும் மாநிலக் குடியிருப்பாளர்களுக்கும் இடையே நடக்கும் மோதல்களின் தொடர்ச்சியாகவே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மாணவர்களின் வருகையை அடுத்து பாகுபாட்டுக்கு முகம்கொடுத்து வரும் மியன்மார் சிறுபான்மையினரான ரொஹிங்கியாக்கள் அந்த தற்காலி முகாமில் இருந்து வெளியேறியுள்ளனர். அவர்கள் பொலிஸாரின் உதவியோடு இன்னொரு அரசாங்க அலுவலகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் அதிர்ச்சியில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் அகதிகள் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தற்காலிக முகாமுக்குள் ஊடுருவியுள்ள மாணவர்கள் பெரும் கூச்சலுடன் ரொஹிங்கியர்களின் உடைமைகளை கால்களால் உதைத்துத் தள்ளியுள்ளனர்.

இணையத்தில் பரப்பப்பட்ட வெறுப்புப் பிரசாரத்தை அடுத்தே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளில் ரொஹிங்கிய அகதிகளின் மிகப் பெரிய படையெடுப்பாக கடந்த நவம்பர் நடுப்பகுதி தொடக்கம் 1,500க்கும் அதிகமான ரொஹிங்கியர்கள் அச்சேவை அடைந்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.